தினமணி வெளியீடு : 27 | பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ

என் தந்தையார்

[illegible]

எஸ். அம்புஜம்மாள்



“... ற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை”

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1945

 [விலை அணா 8

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை

திரு. கி. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை

" ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்

" கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலெஜ், சென்னை

" டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை

" கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி

" ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா

" ஏ. வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,
பிரகதி பிக்சர்ஸ், சென்னை

" எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி

முகவுரை

ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீனிவாஸன் -
(ஆசிரியர் : "சுதேசமித்திரன்")

"என் தந்தையார் நினைவுகள்" என்று மகுடமிட்டு ஸ்ரீமதி அம்புஜம்மாள் இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். தந்தை ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்கார். இருவரையும் தமிழ்நாடு நன்றாய் அறியும். இருவருக்கும் மிகவும் கடமைப் பட்டு மிருக்கிறது. புத்தகத்தை விரும்பி வாங்கவும், வரிந்து வாசிக்கவும் இவை போதும். படிப்பவர் புது ரஸம் பருகுவர்.

புத்தகம் சரித்திரமல்ல; ஆராய்ச்சியு மல்ல; அநுபவமே அதன் லக்ஷணம். செல்வத்தில் பிறந்து செல்லமாய் வளர்ந்த பெண் தகப்பனாரிடம் கொண்ட பிரேமையும் பெருமையும் பிரமையும் புத்தகத்தில் ஊசலாடுகின்றன. இன்பம் தாண்டித் துன்பம் தீண்டி வாழ்வின் லட்சணத்தை அநுபவித்து லட்சி யத்தை அறிந்துகொண்டாள் ஸ்ரீமதி அம்புஜம்மாள். சரண் புகுந்து சேவா பக்குவம் பெற்றாள். என்ன முயன்றும் தகப்ப னரை அறிய முடியவில்லை. சேவையும் தியாகமும் களிப் பூட்டின; முரண்டும் முரண்பாடும் வியப்பூட்டின. கேள்விக் குறி மறையவில்லை. கவலைக்குறி கரையவில்லை. சாயையும் சோடும் புத்தகம் முழுவதும் காணலாம். ரஸமெல்லாம் அதில் அடங்கி யிருக்கிறது.

மகாத்மா காந்தி—நினைவு மாலை

"ஆனந்த விகடன்" எழுதுகிறது :

"மகாத்மாவின் சுவிகார புத்திரி" என்று இந்நூலின் பதிப்புரையில் பி. ஸ்ரீ. யவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் ஸ்ரீமதி அம்புஜம்மாள்.................மகாத்மாவைப் பற்றித் தமக்குத் தெரிந்த பல விவரங்களையும் மிக்வும் ஸ்வாரஸ்யமாக எழுதி யிருக்கிறார். மகாத்மாவின் வாழ்க்கை சம்பந்தமாகப் பல புதிய விஷயங்களைக் கூறும் இப்புஸ்தகத்திற்குத் தமிழ் நாட்டில் நல்ல ஆதரவு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை."

இரண்டாம் பதிப்பு: மகாத்மாவின் பல கடிதங்களுடனும், இன்னும் சில புதிய விஷயங்களுடனும் விரித்து எழுதியது.

பிரதிகளுக்கு முந்துங்கள்.

விலை அணா 12.

முன்னுரை

'ஆப்த நண்பர்களிடமும் தம்முடைய அந்தரங்கங்களைச் சொல்லிக்கொள்வதில்லை, உற்ருர் உறவினர் என்று தேடிப் போய் அந்யோந்யமாக அளவளாவிப் பொழுதுபோக்குவது மில்லை' — இத்தகைய சுபாவத்தை என்னென்பது? குல கர்வமா? செல்வச் செருக்கா? தாம் உயர்ந்த அறிவாளி என்ற பெருமைதானு? ஸ்ரீ வைஷ்ணவ அறிஞர்கள், 'வஞ்ச முக்குறும்பு' என்று கண்டிக்கும் ஜாதிகர்வம், ஐசுவரிய கர்வம், வித்யாகர்வம்—இவற்றில் ஒன்ருே, பலவோ இதற்குக் காரணம் என்று நான் எண்ணவில்லை. அத்தகைய மனப்பான்மைக்குக் கேவலம் செருக்கு காரணம் இல்லை, சங்கோசமும் காரணம் இல்லையென்றே தோன்றுகிறது. தமக்கே விளங்காத முறையில் ஒரளவு இரண்டும் கலந்த ஒருவிதத் தனிமை-மனப்பான்மை காரணம் என்று எண்ணுகிறேன். அத்தகைய சுபாவமும் பழக்கமும் உள்ள ஒருவரின் ஜீவியக் குறிப்புக்களை எழுதுவது சுலபமான காரியமா?

'டயரி' எழுதுவது, கடிதப் போக்கு வரத்துக்களைச் சேமித்து வைத்தல் ஆகிய பழக்கமோ தகப்பனருக்குக் கிடையாது. இவரைப்பற்றி எதை, என்ன விதமாக எழுதுவது?

இந்தப் பிரச்னை எழுந்தது ஒருசமயம் எனக்கு. 'கல்கி' பத்திராதிபர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி, 'உங்கள் தந்தை யாரைப் பற்றிய சில குறிப்புகள் அடங்கிய கட்டுரை ஒன்று நீங்கள் எழுதித் தரவேணும், எங்கள் தீபாவளி மலருக்கு' என்று முதல் முதலாக என்னைத் தூண்டியபோது, இந்த விதமாக ஒரு பிரச்னை ஏற்பட்டது. முதலில் வெறுமனே இருந்துவிட்டேன். 'கல்கி'யோர் விடாமல் பின்னும் வற்புறுத்தி எழுதி, எப்படியோ இந்தக் காரியத்தில் எனக்கொரு ஊக்கத்தை உண்டாக்கி விட்டார்.

அதன் விளைவாகத்தான் 'கல்கி' தீபாவளி மலரில் (1943) 'என் தந்தை' என்ற கட்டுரை வெளிவந்தது. அதைப் படித்த என் தந்தையாரின் நண்பர்கள் அதைப் பாராட்

டியும், ஆனால் 'விஷயம் ரொம்பக் குறைவு' என்று குறை கூறியும் வந்தபடியால், அதைக் கூடியமட்டும் விரிவுபடுத்திப் புஸ்தக ரூபத்தில் வெளியிடத் துணிந்தேன்.

இந்தப் பணியில் எனக்குப் பேருதவி அளித்துவந்த ஸ்ரீமான் பி. ஸ்ரீ. க்கும், 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியர் ஸ்ரீமான் சுந்தரராகவனுக்கும், என் நன்றி உரியது. பிழை இல்லாதபடி புஸ்தகங்களை வெளியிட உதவுவது மட்டு மின்றி, விஷயங்களைப் பொருத்திக் குறுக்கியும் நீட்டியும் பாஷையைத் திருத்தி அமைத்தும் தருவதில் 'பி. ஸ்ரீ'க்கு நிகரில்லை என்பது என்னைப்போலப் பல நண்பர்களும் அறிந்ததே.

என் பாட்டன்மார்களைப் பற்றியும், என் தந்தையாரைப் பற்றியும், என்னைவிட அதிக அளவில் ஸ்ரீமான் சுந்தர ராகவன் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார். அவர் என் தந்தையைப் பற்றிய பல தகவல்களைச் சேகரித்து உதவி யுள்ளார். இதன்பொருட்டு அவர் மேற்கொண்ட சிரமத்தையும், அவருடைய அபார ஞாபக சக்தியையும் போற்றாமல் எப்படி யிருப்பது?

நிற்க. என் தகப்பனாருக்குச் சுயசரித்திரம் என்றாலே பிடிக்காது. சுயசரித்திரம் எழுதுவோரைக் கேலி செய்வது முண்டு. பட்சபாதமில்லாமல் தம்மைப்பற்றித் தாமே எழுதிக் கொள்வது, (மகாத்மா நீங்கலாக) எவருக்கும் சாத் தியமில்லை என்பது இவர் கொள்கை. அதுவே என் அபிப் பிராயமும்கூட. சொந்த மனிதரைப் பற்றி, — நெருங்கிய உறவினரைப் பற்றி—எழுதுவோரையும், இந்த கோஷ்டியில் தான் சேர்க்க வேண்டும் என்று தோன்றுகிறது. உதாரண மாக, அன்புப் பாசத்தினால் ஒரு புதல்வி தன் தகப்பனாரை அதிகமாகப் போற்றி எழுதுவது சகஜம்தானே?

என் தந்தையாரின் ஜீவிய சரித்திரம் இவரது நண்பர் ஒருவரால், அல்லது இவருடன் நெருங்கிப் பழகிய அன்னியர் ஒருவரால், எழுதப்பட வேண்டியதுதான் பொருத்தமாகும். அத்தகைய ஜீவியக் குறிப்புக்களும் இதைக்காட்டிலும், விரிவான முறையில் வெளிவர வேண்டும்; சீக்கிரம் வெளி வரும் என்றே எதிர் பார்க்கிறேன்.

இச்சிறு புஸ்தகத்தில் இயன்றவரை தகப்பனாரிடம் பெண்ணுக்குள்ள பாசத்தை ஒருவாறு கட்டுப்படுத்தியே

எழுத முயன்றேன். எனக்குத் தெரிந்த விஷயங்களை, தோன்றிய எண்ணங்களை, இந்த நினைவுமலர்களாகத் தொடுக்க முயன்றிருக்கிறேன். மலர்மாலையாகத் தொடுத்து விட்டேன் என்று சொல்ல முடியாது.

எத்தனையோ விஷயங்கள் எழுதக் கிடக்கின்றன. பல முக்கிய விஷயங்கள் கனவுபோல மங்கிப்போய்விட்டன. ஆனால், ஆனால், சிற்சில விஷயங்கள்—'குடு குடு' என்று இவர் தம் செல்லப் பேரப்பிள்ளை ராமனைத் துரத்திக்கொண்டு உள்ளே ஓடிவருவது, மற்றொரு பேரப் பிள்ளை 'கோபாலு' வைத் தம்முடன் வைத்துக்கொண்டு விளையாடுவது, இவை போன்ற சின்ன விஷயங்கள் — ஏதோ சினிமாக் காட்சிகள் போல் அப்படியே கண்முன் வருகின்றன. 'யாரடா அது?' என்ற அந்த ஸிம்ம கர்ஜனை, 'பாப்பம்மா!' என்ற அந்த அன்பழைப்பு, அவையும் 'கூடத்தான் காதில் தொனிக் கின்றன—இதை எழுதும்போதும்.

'தந்தைக்கு மக்கள் கடமைப்பட்டவர்' என்பது எல் லோரும் அறிந்ததுதான். ஆனால் சுமார் நாற்பத்து மூன்று வருஷங்களாக இவருடைய நிழலிலே, அன்பாட்சியிலே, கவலையற்று வாழ்க்கைப் படகை—ஓர் ஓட்டைப் படகுதா னெனினும் — நடத்திவந்த மகள், திடீரென்று கவலை தோய்ந்த தனிவாழ்க்கை — சுய ஆட்சியே என்றாலும் — மேற்கொண்ட பின்புதான், 'இந்தத் தந்தைக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறாள் இந்த மகள்!' என்று தெரிய வந்தது.

இத்தகைய தந்தையிடமிருந்து இவளுக்குக் கிடைத் துள்ள அன்பிற்கும் க்ஷமைக்கும் ஈடுகட்டுவது முடியாத காரியம். எனினும் இந்த வெளியீடு வாசகர்களின் பாராட்டைப் பெறுமாயின் ஓரளவு திருப்தி ஏற்படும்.

"மேரு"
மௌப்ரேஸ் ரோடு,
தேனாம்பேட்டை,
சென்னை.

எஸ். அம்புஜம்மாள்

காந்தீயத் திட்டம்

“வர்தா புரொபெஸர் எஸ். என். அகர்வால் எழுதிய காந்தீயத் திட்டத்தின் ஸ்ரீ ப. ராம ஸ்வாமியின் நயமான தமிழ் மொழி பெயர்ப்பு சமீபத்தில் வெளியாயிற்று. தற்போது தேசத்தில் ஏற்பட்டுள்ள பரிதபிக்கத் தக்க நிலைமையைப் பரிசீலனை செய்யும் ஆராய்ச்சியாளர் ஒவ்வொருவரும் இந்நூலைக் கவனமாகப் படிக்கும் படிச் சிபார்சு செய்கிறேன்” என்று காந்திஜி இதன் மூல நூலின் முக்வுரையில் குறிப்பிடுகிறார். கடைசிவரையிலும் உங்கள் கவனத்தைக் கவர்ந்திழுக்கும் நல்ல மொழியில் இந் நூலைத் தமிழில் உருவாக்கிப் பொது ஜனங்களுக்கு அளிப்பதின் மூலம் பதிப்பகத்தார் நன்றிக்கு உரியவர்கள்.

“ஒரு வழியில், மொழி பெயர்ப்பாளர் ஆசிரியரின் அடிக் குறிப்புகளோடு ஆங்காங்கு அவசியமான இடங்களில் விளக்கக் குறிப்புகளும் எழுதி, மூலத்தைவிட முன்னேறி யிருக்கிறார்” என்று 11—2—’45 ‘ஸண்டே டைம்ஸ்’ (ஆங்கிலப் பத்திரிகை) விமர்சிக்கிறது..

விலை ரூ. 1—8—0.

என் தந்தையார்

(எஸ். ஸ்ரீநிவாஸையங்கார் நினைவுகள்)

"**எ**ங்கே அவள்? கூப்பிடு, எண்ணெய் தேய்த்துக் கொள்ள நாழிகையாகிறது."

அம்மாவின் கோபக் குரல் நன்றாய்க் காதில் விழுந்தது எனக்கு. எனினும் நான் இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை.

தக்ப்பனருக்கு, நான் உள்ளே வந்து அவர் மேஜையடியில் ஒளிந்து கொண்டது தெரியாது. அவர்பாட்டுக்குப் படிப்பதில் மூனைந்திருந்தார். என்னைத் தேடிக் கொண்டு ஆள் உள்ளே வந்தான். தக்ப்பனர் தலையைத் தூக்கி முறைத்துப் பார்த்தார்.

"இல்லிங்க! அம்மா பாப்பம்மாவைக் கூட்டியாரச் சொன்னங்க."

"சரிதான் போ."

"இல்லிங்க! அம்மா கூப்பிடறாங்க."

"பிரிக்கட்டி இழு! போறயா, இல்லையா?"

"இல்லிங்க! எண்ணெ தேய்க்கணுங்க."

"ராஸ்கல்! என்ன தொணதொணப்பு!......இங்கே எங்கடா பாப்பம்மா இருக்குது?"

"அய்யா மேசை கீழே —"

"சரி......இன்னிக்கு வேண்டாம் போ. நாளைக்கு எண்ணெய் தேய்க்கலாம், சொல்லு போ."

நான் சிறுமியாக இருக்கும்போது 'பெரிய முரண்டு' என்றும், 'அப்பா—செல்லம்' என்றும் வீட்டில் பேர் வாங்கிவிட்டேன். என் முரண்டுகளுக்காக அம்மாவிட

மிருந்து வாங்கிய பூசைகளுக்கும் குறைவில்லை. ஆனால் தகப்பனார் சமீபத்தில் இருந்துவிட்டால் நான் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. இவருடைய சிபார்சு எனக்கு எப்போதும் நிச்சயம். என்னுடைய இந்தப் பால்ய நினைவு நாங்கள் மயிலாப்பூர் மாட்டுத் தெரு வீட்டில் வசித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தைச் சேர்ந்தது.

* * *

இரவு மணி சுமார் 9 இருக்கும்—பழைய மணி. மை யிருட்டு. சாலை வழியே எங்கள் வண்டி—இரட்டை மாடு பூட்டிய கூட்டு வண்டி—கடகட வென்று போய்க்கொண் டிருந்தது. உள்ளே தகப்பனாரும் தாயாரும், நானும் என் தம்பியும். எனக்கு வயது சுமார் பன்னிரண்டு.

"என்னடா? தூரத்தே, அங்கே, என்னமோ வெளிச்சம் தெரிகிறதே!"

"இல்லிங்க சாமீ! ஏதேனும் மினுமினுப் பூச்சி இருக்க லாங்க!"

"பட்வாப் பயல்! விரட்டுடா வண்டியைச் சீக்கிரம். நேரமாச்சு—ஓட்டு, ஓட்டு."

என் தகப்பனாருக்கும் அந்த வண்டிக்காரனுக்கும் தொடர்ந்து நடந்த சம்பாஷணையின் ஒரு பகுதி இது.

அந்தக் காலத்திலே, கோடைக்கானல் ரஸ்தாவி லிருந்து தபால் வண்டிகளிலே பெரியகுளம் போய் அங்கே இரவு தங்கி, மறுநாள் விடியற்காலம் "டோலி" களிலும், (போனி) மட்டக் குதிரைகளிலும் மலை ஏறுவது வழக்கம்.

தேவதானப்பட்டி வருவதற்குள் மணி 9 ஆகி விட்டது. வழியில் திருடர் பயம். தீவட்டிக் கொள்ளை யும் நடப்பதுண்டு என்று எங்களை வேணுமென்றே பய முறுத்தி யிருந்தார்கள் அந்த வண்டிக்காரர்கள்.

கண்டவருடன் எல்லாம் வாயைக் கிளறிப் பேச்சுக் கொடுப்பது தகப்பனாரின் சுபாவம். அன்று வழியில் வண்டிக்காரர்கள் அகப்பட்டார்கள். அதன் விளைவு தான் அந்தப் பயமுறுத்தல்.

"உங்களை யார் இங்கே இந்த நகைகளை யெல்லாம் வாரிப்போட்டுக்கொண்டு வரச் சொன்னார்கள்? அந்த வைர ஓலை காதில் ஜொலிக்காவிட்டால் குடிமுழுகிப் போய்விடுமோ?" என்றார் தக்கப்பனார் தாயாரைப் பார்த்து.

இப்படிச் சொல்லிக்கொண்டே ஒரு சிறு பிஸ்டலை எடுத்து மருந்து கெட்டிக்க முயன்றார். இவரிடம் பிஸ்டல் இருந்ததே யன்றி ஒரு முறையும் அதைச் சுட்டு அறியார்.

"அது எதற்கு உங்கள் கையில்? உங்களுக்குத்தான் சுடத் தெரியாதே, எங்கேயாவது தப்பித் தவறித் தானே வெடிக்கப் போகிறது!" என்று எச்சரித்தார் தாயார் கொஞ்சம் பயத்துடன்.

"சுடத் தெரியாவிட்டால் என்ன? இதை இப்படிக் காட்டினாலே அந்தத் திருட்டுப் பயல்கள் பயந்து ஓடிவிட மாட்டார்களா?" என்று இறுமாப்புக் கொண்டார். முகத்தில் ஒரு கள்ளச் சிரிப்பு அரும்பி மலர்ந்தது. அப்போது கையும் அதற்கேற்றாற்போல் பிஸ்டலைப் பிடித்துச் சுழற்றிச் சுழற்றி ஆட்டி வெளியே காட்டிக் கொண்டிருந்தது, அந்த மினுமினு வெளிச்சம் வந்த திசையை நோக்கி. எங்கள் எல்லோருக்கும் பயம்தான். உள்ளுக்குள்ளே இவருக்கும்கூட — என்று சொல்லு வேன்.

* * *

கடுங் காற்றும் மழையும் கலந்து அடிக்கின்றன. நடுநடுவே மின்வெட்டு. வீட்டைச் சுற்றி யிருந்த "பைன்" "யூகலிப்டஸ்" மரங்கள் 'கோ' வென்று இரைந்து பேயாட்டம் ஆடுகின்றன; வளைந்து வளைந்து பூமியைத் தொட்டு நிமிர்கின்றன.

நாங்கள் இருந்த அறையிலோ சிம்னியில் நெருப்பு "திக் திக்" என்று எரியும்போது, உள்ளெங்கும் சுகமான உஷ்ணம்தான். ஆனால் அறையின் கண்ணாடி ஜன்னல்-படுதாக்களின் அசைவினால்; வெளியே நடக்கும் ஆர்ப்பாட்டத்தைக் காணக் காண பயம் உள்ளுக்குள்ளே.

அங்கே வீசும் கடுங் குளிர் எங்கள் உடலைத் தொடாமல் உள்ளத்தைத் தொட்டு விட்டது போலும்!

தாயாரும் சகோதரனும் நானும் இருந்தோம், அந்தக் கோடைக்கானல் பங்களாவின் அறையிலே அன்று இரவு. அந்த மலைப் பிரதேசத்தின் பருவக்காற்று பிரசித்தமன்றோ? "அப்பா இன்னம் வரவில்லையே!—" என்ற எண்ணம் எங்கள் மூவர் உள்ளத்தையும் நடுக்கிக்கொண்டிருந்தது.

சில நாளைக்கு முன் "லிட்காட்டு"க்கு — நாங்கள் இருந்த பங்களாவின்—பின்புறப் பள்ளத்தாக்கிலே தன்னுடைய கன்றுக்குட்டி ஒன்றை ஒரு 'சிதா' (சிறுத்தைப் புலி) அடித்து விட்டதாகப் பால்காரன் சொல்லியிருந்தான். அது இப்போது எங்கள் மூவருக்கும் ஞாபகத்திற்கு வந்துவிட்டது.

"ஆளைக் கூப்பிட்டு லேக்கு வரை ஏர்ந்தலைக் கொண்டு போகச் சொல்லலாமா?" என்றேன் நான். இந்தக் கொட்டும் மழையில் எந்த ஆள் போவான்?......

இரவு மணி 9-க்குமேல் வாசலில் பூட்ஸ் சப்தம் கேட்டது. "ரெங்கநாயகி" என்ற அழைப்பும் கூடவர, எங்கள் நெஞ்சத்தை இதுவரை அழுத்தியிருந்த பய மூட்டை எங்கேயோ உருண்டு விழுந்துவிட்டது போலும்!

"இத்தனை நாழிகையா? இந்தக் காட்டுப் பாதைகளிலே இப்படி ராத்திரிப்போதிலே தனியாகத் திரியலாமா?" என்று கடிந்து கொண்டார் தாயார்.

"லேக்கிலே யார் யாரையோ சந்தித்தேன், பேசிக் கொண்டே யிருந்து விட்டேன். மழை வந்ததுகூடத் தெரியவில்லை. சரி, உடம்பைத் தோட்டிக் கொள்ளத் துண்டும் யுகலிப்டஸ் ஆயிலும் கொண்டுவா, சீக்கிரம்! ஜலதோஷம் பிடிக்கும் போலிருக்கிறது."

"இந்தப் பக்கங்களிலே 'சிதா' நடமாடுகிறதாமே!"

"சிதாவாவது கீதாவாவது. என்னிடம் அதெல்லாம் ஒன்றும் வராது, ஜலதோஷம்தான் வரும்போல் இருக்கிறது! சீக்கிரம் துண்டு கொண்டுவா என்றால்

சும்மா தொணதொணக்கிறயா?" என்று கோபித்துக் கொண்டார்.

ஜலதோஷத்திடம் இருந்த பயம் சிறுத்தைப் புலியிடம் இல்லையா?......பிரத்தியட்சமாகத் தோன்றும் அபாயத்தைவிடப் பரோக்ஷமாக இருக்கும் அபாயம் பெரிதாக எப்படித் தோற்றக்கூடும்? "வரக்கூடும்" என்று எண்ணிச் சிறுத்தைப் புலியை நினைத்துப் பயப்படுவதைவிட "வந்துவிட்டது" என்று எண்ணி ஜலதோஷத்திற்குப் பயப்பட்டார்!

மனித வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆனால் நம்மையும் அறியாமல் நமது நெஞ்சம் சில சம்பவங்களைமட்டுமே தத்ரூபமாகப் படம் பிடித்து வைத்துக் கொள்ளுகிறது. எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் அவை அழிந்துபோவதில்லை, நம் நெஞ்சத்தைவிட்டு. அன்று நடந்தவை இன்றும் நடப்பன போல் தோன்றுகின்றன புத்தப் புதியனவாய்.

* * *

பேச்சிலோ, ஆலோசனையிலோ, புஸ்தகப் படிப்பிலோ தகப்பனார் ஆழ்ந்துவிட்டாரேயானால், அவருக்குப் பசி தாகம், குளிர் உஷ்ணம், உறக்கம் விழிப்பு என்பதில்லை. தாமிருக்கும் இடம், கூட இருப்பவர் — ஒன்றும் ஞாபகம் இராது.

மன - சஞ்சாரம் இவரை முற்றிலும் வேறு உலகத்திற்கே இழுத்துக்கொண்டு போய்விடும்.

இவர் புஸ்தகம் படிப்பதே ஒரு அலாதி தினுசு. "பஜ் பஜ்" என வண்டு ரீங்காரம் செய்வதுபோல் ஒரு வித ராகம் போட்டு மெதுவான குரலில் வாய்க்குள்ளே படிப்பார், வேகமாக, ஸோபாவில் சாய்ந்தவண்ணம்.

மணிக் கணக்கில் அந்த அற்புத ராகம் எங்கள் காதில் விழுந்து கொண்டிருக்கும். இனிமையாகத்தான் இருக்கும் எங்கள் காதுக்கு அந்தச் சப்தம். சில சமயம் சிரிக்கவும் செய்துவிடும் எங்களை.

மனத்தை அப்போது அந்தப் படிப்பிலிருந்து கலைத்து வேறு விஷயத்திற்கு இழுப்பது வெகு சிரமம். யாராவது ஏதேனும் கேட்கப் போனால், "உம், உம், சரி தான் போ" என்று சொல்லி விரட்டிவிடுவார். வேலையாட்கள் உள்ளேயிருந்து எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள், "எப்போதுதான் இந்தப் படிப்பு ஓயுமோ?" என்று. இவர் எழுந்து வந்து போஜனம் செய்தால் தானே வீட்டில் அவர்கள் அலுவல் முடியும்?

இவருக்கு இன்ன புஸ்தகம்தான் பிடிக்கும் என்பதில்லை. சாதாரணப் பொழுதுபோக்கான ஆங்கிலத் துப்பறி நாவல் முதல், சகலவித ஆராய்ச்சி நூல்கள், விஞ்ஞான நூல்கள், சமய நூல்கள் வரை ஊக்கத்துடன் படிப்பார். அப்போதப்போது வெளிவரும் புதிய புஸ்தகங்களை யெல்லாம் வாங்கிவிடுவார். வாங்குவது மட்டுமன்று, ஒருமுறை அவைகளைப் படித்துத் தீர்த்து விடுவார்.

ஸர் வி. பாஷ்யம் ஐயங்கரிடம் இருந்த அருமையான "லா" புஸ்தங்களை யெல்லாம் அப்படியே வாங்கிக் கொண்டார் என் தகப்பனார், மாமனார் காலத்திற்குப் பிறகு. அதன் மூலம் ஒரு நல்ல சட்டப் புஸ்தகாலயம் எங்கள் வீட்டில் இருந்தது என்று சொல்லலாம்.

* * *

இவர் இளைஞராயிருந்த காலத்தில் 'மைல்' கணக்கில் நடப்பார். மலைவாஸம் செய்யும்போது வெளியிலே உலாவப் போனால், கழுத்துக்குப் பின்னால் முதுகில் குடையையோ கழியையோ சார்த்திக் கொண்டு அதிலே இரண்டு கைகளையும் தொங்கவிட்டுக் கொண்டு (மாடு மேய்ப்பவன் போல்) தலை குனிந்து ஆலோசனையில் ஆழ்ந்தவண்ணம் சாலையில் நடந்து போவார். முன் பின் திரும்பிப் பார்க்கமாட்டார்.

எப்போதாவது கூடப் புறப்பட்டு விட்டால் இவரைத் தொடர்வது கஷ்டமாய்ப் போய்விடும் எனக்கு.

நான் கூட வரும் நினைவே இராது. ஏதாவது பேசி இவர் சிந்தனையைக் கலைக்க முயன்றாலும் அதைப் பொறுக்கமாட்டார்.

"என்னோடு ஏன் வந்தாய்? உன்னை யார் என்னுடன் வரச்சொன்னது?" என்று எரிந்து விழுந்து விட்டு மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்துபோவார்.

* * *

கேஸ் படிப்பதோ, சட்டப் பரீக்ஷைப் பேப்பர்களைத் திருத்துவதோ, ஏதேனும் 'ஸ்டேட்மெண்டு' தயார் செய்வதோ, உபந்யாஸம் தயாரிப்பதோ, எல்லாம் கடைசித் தினம்வரை, கடைசி நிமிஷம்வரை ஒத்திப்போட்டுச் செய்வதுதான் தகப்பனாரின் வழக்கம்.

அந்த நெருக்கடியில் அவர் செய்யும் ஆர்ப்பாட்டங்களினால் வீடே அதிர்ந்து போகும். அப்ரெண்டிஸ்களும் ஜூனியர்களும் குமாஸ்தாக்களும் படும் பாட்டுக்கு அளவு கிடையாது. வீட்டிலுள்ள மற்றவர்களுக்கும் ஏதாவது 'சுடச்சுட' வார்த்தைகள் கிடைத்தவண்ணம் இருக்கும். தாமும் விடாமல் இராப் பகலாய் வேலை செய்வார், ஊண் உறக்கமின்றி. பிறரையும் ஏவி ஏவி விரட்டி விரட்டி வேலை வாங்குவார்.

பிறரை வேலை வாங்கும் திறனும், பிறருக்கு விஷயங்களைக் கற்பித்து அவர்களை அந்த அந்த வேலைக்குத் தகுதியாகச் செய்யும் திறனும் இவருக்கு அபாரமாக உண்டு. ஆனால் அதற்கு முக்கியமாக வேண்டிய பொறுமைக் குணம்தான் கிடையாது. அப்பியாசம் பெற வருகிறவர்கள்தான் அதை வெகுவாக அப்பியசிக்க வேண்டிவரும். பெரும் பொறுமை இல்லாதவர்கள் இவர்முன் கண நேரமும் நிற்க முடியாது.

குமாஸ்தாக்கள் இவரிடம் பெரும்பாடு படுவார்கள். "ஸ்டேட்மெண்டை" (Statement) இவர் "டிக்டேட்" செய்யும்போது, சுருக்கெழுத்தாளருக்குத்தான் அதைத் தொடர முடியும். இவருடைய சிந்தனைகள் அவ்வளவு வேகமாக் வெளிப்படும், திருக்குற்றாலத்தின் பிரசண்ட

மான சாரல் அருவிபோலே. அப்படிப் புறப்படுவது மட்டுமன்று, க்ஷணத்துக்கு க்ஷணம் மாறும். மூன்று நாலு முறை ஒரு வாக்கியத்தை மாற்றி மாற்றி அமைத்துச் சொல்லுவார்.

தலைமைப் பேருரை (Presidential address)கள், சில விசேஷ உபந்யாசங்கள் தவிர மற்ற எந்த உபந்யாஸங்களையும் எழுதும் வழக்கமோ, குறிப்புத் தயார் செய்யும் வழக்கமோ கிடையாது. அபூர்வமாக ஏதாவது தயார் செய்தாலும், நேருக்கு நேரே பேசுவதற்கும் தயார் செய்த உபந்யாஸத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கும். எனினும் பேசவேண்டிய விஷயத்திற்குப் புறம்பே போவதாக இராது. முன் தயாரிப்பு இல்லாத உபந்யாஸங்கள் என்றே சொல்ல முடியாது அவைகளை. ஏனென்றால் ஆத்திரமூட்டக்கூடிய சொற்களோ, ஆதாரமற்ற விஷயங்களோ, அஜாக்கிரதையினால் சொல்லப்பட்டது என்பதோ, காணப்படுவதில்லை. தயாரிப்பு எல்லாம், உபந்யாஸத்திற்குச் சில மணி நேரத்திற்குமுன் மனஸிலேயே செய்யப்பட்டதாக இருக்கும். அதிதீவிரமான புத்தி நுட்பமும், தீர்க்கமாக ஆலோசனை செய்யும் சக்தியும் அபாரமாக் உண்டு என்று இதனால் ஊகிக்கலாம்.

ஆவேசம் வந்ததுபோலப் படபடப்பாய்ப் பேச மாட்டார். நிரம்பவும் தெளிவாக, வேகமாக, ஆழ்ந்த கருத்துக்களை அமைதியாகத் தர்க்க ரீதியில் வெளியிடுவதாக இருக்கும் இவருடைய உபந்யாஸம்; ஹிருதயத்தை விடப் புத்தியையே அதிகம் தொடுவதாக இருக்கும்.

* * *

சுமார் பத்து வருஷகாலம் இவர் நடத்திய அரசியல்-வாழ்க்கையில், இவர் செய்த உபந்யாஸங்களுக்கும், நடத்திய தேர்தல் பிரசாரங்களுக்கும் கணக்கில்லை. சிலரைப்போலத் தப்பும் தவறுமாய்ப் பேசிவிட்டு, பேப்பர்ச் சண்டையில் அகப்பட்டுக் கொண்டதில்லை. அதுபோன்ற அபூர்வ சம்பவங்கள் இரண்டுதான் என் ஞாபகத்திற்கு வருகின்றன.

அனிபெஸெண்டு அம்மை 'ஹோம்-ரூல்' இயக்கம் நடத்தி வந்தபோது, அவரை எதிர்த்து ஓர் உபந்யாஸத்தில் இவர் பேசினபோது "அனிபெஸண்டு அம்மையார் 'வெள்ளைப் பொய்' (White Lie) சொல்லுகிறார்" என்று தகப்பனார் குற்றம் சாட்டியதாகப் பேப்பரில் நீண்ட காலம் ஒரு சச்சரவு. மற்றொரு சச்சரவு, 'ஒத்துழையாமை' இயக்க ஆரம்பத்தில் அதைத் தகப்பனார் 'சட்ட முரண்பாடான இயக்கம்' (unconstitutional movement) என்று பேசியதாக. இந்த இரண்டு குற்றச் சாட்டுகளைப் பற்றித் தகப்பனார் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. தாம் சொன்னது சரியென்றே கடைசிவரையில் சாதித்து எழுதி வந்தார்.

* * *

உலகத்தார் கண்களுக்குத் தகப்பனார் லௌகிக அனுபவம் நிறைந்தவராகத்தான் தோன்றினார். ஆனால் லௌகிக ஞானம் இல்லாத ஒரு 'பிடிவாதக்கார முரட்டுக் குழந்தை' போலத்தான் தென்பட்டார் எங்கள் கண்களுக்கு, பல சமயங்களிலும்—நாங்கள் அவர் குழந்தைகளாக இருந்தும்கூட!

உயர்ந்த வர்ணம் தீட்டிய ஒரு சித்திரத்தைச் சமீபத்தில் வைத்துப் பார்த்தோமானால், அதனுடைய மேம்பாடுகள் தெளிவுறப் புலனாவதில்லை. தூரத்திலே சரியான வெளிச்சத்திலே வைத்துப் படத்தைப் பார்க்கும் போதுதான் வர்ணக் கலப்பின் உயர்வும், உருவத்தின் தெளிவும், ஸௌந்தர்யமும் இனிது புலனாகின்றன.

சித்திரப் படங்கள் போலப் பெரியோர்களின் வாழ்க்கைச் சித்திரமும்!— என்று தோன்றுகிறது. சுற்றிச் சமீபத்தில் இருப்பவர்களுக்கு, அவர்களுடைய மேம்பாடுகள் தெளிவாகத் தெரிவதில்லை. ஆனால் அவர்களிடம் சிறு குற்றங் குறை இருந்தாலும் கூட அவை மட்டும் எளிதில் காணக் கிடைக்கின்றன.

"தகப்பனார் முன்கோபக்காரர்; இவர் சொல்லுகிற படிதான் வீட்டில் எல்லோரும் நடந்து கொள்ள

வேண்டும்; இவர் சம்மதம் இன்றி வீட்டில் எதுவும் நடைபெறக்கூடாது, யாரும் வெளியே போகக் கூடாது" என்ற இதுபோன்ற அபிப்பிராயங்கள்தான் குழந்தைகளாகிய எங்கள் உள்ளங்களில் முதல் முதல் ஆழமாய்ப் பதிந்துவிட்டன. இந்த எண்ணத்தைப் பிற்காலத்திலும் மாற்ற முடியவில்லை.

இளமையிலேயே மனத்தில் ஊறி உருக்கொண்ட இந்த எண்ணங்கள், நாங்கள் பெரியவர்களான பிறகும் தகப்பனாருடைய அருமையான இதர குணங்களைக் கண்டுகொள்ள முடியாத வண்ணம் செய்துவிட்டன!


* * *

பின்னாளில் தேசியத் துறையிலும் மற்றத் துறைகளிலும் இவருடைய பேரும் புகழும் எங்கும் பரவித் திகழ்ந்து வருவதைக் காணக் காண, நாங்களும் சிறிது சிறிதாக எங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ள முயன்றோம். வியப்புற்றுப் பெருமைகொள்ளவும் செய்தோம். ஆனால் அதில் முற்றிலும் வெற்றியடைந்தோம் என்று சொல்ல முடியாது. இவருடைய சில 'முரட்டுக் குணங்கள்' மற்றக் குணங்களை மறைக்கத்தான் செய்தன.

தாஜ்மஹாலையும் மதராஸ் சமுத்திரக் கரையையும் பிறநாட்டார் பார்த்துப் புகழத் தலைப்பட்ட பின்புதானே நம்மவரும் அவைகளைப் புகழத் தலைப்பட்டனர்? கவி டாகுரின் "கீதாஞ்சலி"க்கு ஆங்கில மொழிபெயர்ப்பு இல்லையென்றால், இந்தியாவுக்குத்தான் ஓர் ஒப்புயர்வற்ற கவியரசு கிடைத்திருப்பாரா? அதுபோலத்தான் இவர் விஷயத்திலும்; நாங்கள் இவருடைய பெருமையைக் கண்டுகொண்டது, பிறர் இவர் புகழைச் சொல்லக் கேட்ட பிறகுதான்!

* * *

இவர் 1874-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 11-ம் தேதி பிறந்தார். பூர்விக இருப்பிடம் ராமநாதபுரம் ஜில்லா. பிறந்த ஊரும் ராமநாதபுரம்தான்.



ஸ்ரீமான் ஸ்ரீ. சேஷாத்ரி ஐயங்கார்

பாட்டனார் ஸ்ரீமான் ஸ்ரீ. சேஷாத்ரி ஐயங்கார் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இளமைப் பருவத்தில் 'ரொம்ப' சிரமப்பட்டவர். சுய முயற்சியினாலேயே முன்னுக்கு வந்தவர். அவரைப்பற்றிய அதிக விவரம் தெரியவில்லை.

முதலில் பாம்பனில் அமீன் கோர்ட்டில் (Pleader) வக்கீலாக இருந்தார் என்று தெரிகிறது. அக்காலத்து அமீனுக்கு மாஜிஸ்ட்ரேட் அதிகாரம் இருந்ததாம். அவர் அந்தக் கோர்ட்டில் ஒரு 'ப்ரைவேட்' வக்கீலாக இருந்தாராம்.

அக்காலத்தில் வக்கீல்கள் பிரமாதமாகப் படித்துப் பட்டம் பெற்றவர்கள் இல்லை. தம்முடைய புத்தி நுட்பத்தினாலும், உலக வியவகார அறிவினாலும், பேச்சுத் திறமையினாலுமே வக்கீல் என்று கோர்ட்டில் வாதிக்க அனுமதி பெற்றவர்களாக இருந்தனர்.

பாட்டனாருக்குத் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் நல்ல பயிற்சி உண்டு. ஆங்கிலத்தில் துரைமார்கள் முன்பு ஒன்று இரண்டு வார்த்தைகள் சொல்லவும், பேப்பர், புஸ்தகங்களில் உள்ள விஷயங்களை மெதுவாக எழுத்துக் கூட்டிப் படித்துத் தெரிந்துகொள்ளவும் வேண்டிய அளவுக்கு ஆங்கில பாஷாஞானம் இருந்தது. ஆனால் ஆங்கிலத்தில் கையெழுத்து வைக்கக்கூடத் தெரியாது. இந்த அறிவு அனைத்தும் பள்ளிப் பயிற்சியினால் உண்டானதுமன்று, அனுபவ சித்தமாகத் தாமே கற்ற கல்விதான்.

அவர் தம்முடைய வக்கீல் - தொழிலை வெகு திறமையாக நடத்துவதைப் பார்த்து ராமேச்வரம் பண்டார ஸந்நிதி அவரைத் தமக்குப் 'பிளீடரா'க அமர்த்திக் கொண்டார். பிறகு அவர் திறமையைக் கண்டு, சிவகங்கை ஜமீனில் வரவழைத்துக் கொண்டார்கள்.

அப்பொழுது ராமநாதபுரம் பொன்னுசாமித் தேவர் தம் தமையனாருடைய விதவையான ஜமீன்தாரிணிக்கு முத்துராமலிங்க சேதுபதியை ஸ்வீகாரம் செய்துவைக்க

முயன்று வந்தார். இந்த ஸ்வீகார விஷயமாக்ச் சம ஸ்தானத்தில் பெரிய கேஸ் நடக்கவே, அதைக் கவ னித்துக்கொள்ள வேண்டிப் பொன்னுசாமித் தேவர் ஸ்ரீமான் சேஷாத்ரி ஐயங்காரைச் சமஸ்தானத்துப் பிளீட ராக வரவழைத்துக் கொண்டார். அதுமுதல் பாட்டனுர் ராமநாதபுர சமஸ்தானத்துச் சட்ட ஆலோசனை யாள ராக (Legal Adviser) இருந்துவந்தார்.

பொன்னுசாமித் தேவர் சீக்கிரம் காலமாகவே, அவ ருடைய மைனர்-குமாரர்கள் மூவருக்கும் கார்டியனுக்வும் இருந்து வந்தார். கடைசிக் குமாரர் பாண்டித்துரை மேஜராகி ஜமீனுக்கு வரும்வரை ஸ்ரீமான் சேஷாத்ரி ஐயங்காரே அந்தக் குடும்பத்தாரின் க்ஷேம லாபங்களைக் கவனித்து வந்தாராம்.

பொன்னுசாமித் தேவர் காலத்திற்குப் பிறகு முத்து ராமலிங்க சேதுபதியிடமும் சமஸ்தானத்து ஆலோசனை யாளராக் (Legal Adviser) வெகுகாலம் பாட்டனுர் இருந்து வந்தார்.

முத்துராமலிங்க சேதுபதியின் ஸ்வீகார விஷய மாகத்தான் முதல் முதல் பாட்டனுர் சென்னைக்கு வந்தது.

இந்தக் கேஸ் விஷயமாகச் சென்னைக்கு வந்ததும் இங்கே அப்பொழுது பிரபல வக்கிலாக இருந்த ஸ்ரீமான் (பிறகு ஸர்) வி. பாஷ்யம் ஐயங்காரைக் கலந்துகொண்டு பாரிஸ்டர் நார்ட்டன் துரையவர்களை இந்தக் கேஸுக்கு அமர்த்தினர்.

அதுமுதல் அடிக்கடி சென்னைக்கு வரலானுர். நார்ட்டன் துரைக்குக் கேஸ் விஷயமாகச் சரியான தகவல்கள் (Instructions) கொடுத்துக் கேஸைத் திறமை யுடன் நடத்தி ஜயித்துக் கொடுத்த புகழ் பாட்டனு ருக்குக் கிடைத்தது.

அந்தக் கேஸின் வாயிலாக மதராஸ் பிரபல வக்கீல் ஸர். வி. பாஷ்யம் ஐயங்காரின் உயர்ந்த நட்பும் உறவும் கூட அவருக்குக் கிடைத்தன.

பாட்டனார் ராமநாதபுரம் சமஸ்தான விஷயமாக மதராஸ் வரும்போதெல்லாம் ஸர். வி. பாஷ்யம் ஐயங்காரின் "லக்ஷ்மீ விலாஸ்" மாளிகையில் ஜாகை போடுவதும் சகஜமாகிவிட்டது.

அப்படி வரும்போதெல்லாம் தம்முடன் தம் மூத்த குமாரரும் தாயில்லாத செல்லப் பிள்ளையுமாகிய "சீமா" வைக் ('ஸ்ரீநிவாஸன்' என்ற பெயரின் சுருக்கம்) கூட்டிக் கொண்டு வருவது வழக்கமாம்.

* * *

என் பாட்டனார் மூன்று முறை விவாகஞ் செய்து கொண்டவர். மூத்தாளுக்கு ஸந்தானப்பேறு இல்லை என்ற காரணத்தால், அவளுக்குச் சொல்லாமலேயே, சருக்கையிலிருந்து ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு வந்து, வாசலில் நின்ற வண்ணம், "அடியே! ஆலத்தி சுற்றிக் கொட்டு, வாடி!" என்று அதிகாரத்துடன் அழைத்தார் மூத்த மனைவியை—என்று சொல்லுவார்கள்.

என் தகப்பனாரின் தாயாரான இளையாளும் மூத்தாளும் என் தகப்பனார் மூன்று பிராயத்துக் குழந்தையாக இருக்கும்போதே, ஒருவர்பின் ஒருவராகப் பதினைந்து நாட்களுக்குள் பரலோகப் பிராப்தியாகி விட்டனர். பிறகு மறுபடியும் மூன்றும் தாரமாக ஒரு பெண்ணை மணந்துகொண்டார் பாட்டனார். அந்த மனைவியும் மூன்று வயதுப் பிள்ளைக் குழந்தையை (ஸ்ரீமான் எஸ். வேங்கடேசையங்காரை) விட்டுவிட்டுப் பரலோகம் போய்விட்டாள். நல்ல வேளையாகப் பாட்டனார் அதன் பின்னும் விவாகம் செய்துகொள்ளவில்லை!

* * *

என் தகப்பனாரை வளர்த்தவள் ஒரு தள்ளாத அத்தைக் கிழவி. அவள் கொடுத்த செல்லத்துடன், தாயில்லாத குழந்தை யென்று பாட்டனார் கொடுத்த செல்லமும் சேர்ந்து, சிறு வயது முதல் தகப்பனாரை "ஒரு பெரிய முரண்டு" என்று பேர் வாங்கும்படிச் செய்துவிட்டது.

"இந்த க்ஷணம் மீனாக்ஷி கோவில் யானை வந்தால் தான் சாப்பிடுவேன்!" என்பாராம். அதன்படியே மதுரை மீனாக்ஷியம்மன் கோயில் யானை ஒன்று வாசலிலே வந்து நிற்கும்படி அதிகாரம் செலுத்தி வந்தார் 'தானப்ப முதலி அக்கிரகாரம் ஸ்ரீமான் சேஷாத்ரி ஐயங்கார்' என்று பிரசித்தி பெற்றிருந்த என் பாட்டனார்.

மற்றொரு சமயம், ஸ்ரீமான் பாஷ்யம் ஐயங்கார் இல்லத்திலே இறங்கி யிருந்தபோது இரவு 9-மணிக்கு "இந்த க்ஷணம் எனக்குப் 'பொம்மை என்ஜின்' வேணும்" என்று கூப்பாடு போட்டுக் கத்தினாராம் ஸ்ரீநிவாஸையங்கார். அப்பொழுது அங்கே வேறொரு காரணத்திற்காக முரண்டு அடித்துக் கத்திக்கொண்டிருந்த ஸ்ரீமான் பாஷ்யம் ஐயங்காரின் செல்லப் பிள்ளைகளில் ஒருவரான தேசிகாசாரியை இவர் முன் கொண்டு வந்து நிறுத்தினார்களாம்.

அந்தப் பிள்ளையாண்டான் இந்த முரண்டைப் பார்த்து 'கப்சிப்' என்று அடங்கிப் போய்விட்டான்! ஆனால் இவர் முரண்டு ஓயவில்லை. கடைசியாக, வண்டி போட்டுக்கொண்டு பட்டணம் போய்க் கடைக்காரனைத் தேடிக் கடையைத் திறக்கச் செய்து, 'பொம்மை என்ஜின்' வாங்கிக்கொண்டு வந்தபிறகே இவர் ஆர்ப்பாட்டம் அடங்கிற்றாம்.

* * *

ராமநாதபுர சமஸ்தானத்தில் வேலை பார்த்து வந்த போது பாட்டனார் மதுரையிலும் ஒரு ஜாகை வைத்துக் கொண்டிருந்தார், தம் பிள்ளையின் படிப்பிற்காக.

பிற்காலத்தில் முத்துராமலிங்க சேதுபதிக்கும் பாட்டனாருக்கும் சமஸ்தான விஷயமாக மனஸ்தாபம் மூளவே, ராமநாதபுரத்தை அடியோடு விட்டுவிட்டு மதுரைக்கே 'ரிடைரா'கி வந்துவிட்டார்.

மதுரையில் அவருக்கு நல்ல செல்வாக்கு: "தானப்ப முதலி அக்ரகாரம் ஸ்ரீமான் சேஷாத்ரி ஐயங்கார் என்றால் மதுரை மாநகரம் முழுதும் தலை வணங்கும்!" என்பார்கள்.

அக்காலத்தில் ராஜ அதிகாரம் செலுத்தினர் என்று சொல்லுகிறார்கள். அகத்திலே சதா இரண்டு பரிசாரகர்கள், அவர்களுடைய குடும்பத்தார், சிவகங்கை ராமநாதபுரம் திருப்புல்லாணி முதலிய இடங்களிலிருந்து வந்து மதுரையில் பிள்ளைகளைப் படிக்கவைக்கும் தூர பந்து ஜனங்கள், கொட்டில் நிறையப் பசுக்கள், பெட்டி வண்டி, மாடுகள்.....இத்யாதி, இத்யாதி.

மதுரை மஹாஜன சபைத் தலைவராகவும், தேவஸ்தானக் கமிட்டித் தலைவரர்கவும், மதுரைக் காலெஜ் கமிட்டித் தலைவராகவும் இப்படி யெல்லாம் பொது விஷயங்களில் மிகவும் ஊக்கம் காட்டிவந்தார் பாட்டனர். அவ்வப்போது மதுரையில் நடக்கும் பொதுக் கூட்டங்களும், கவர்னர் துரையை வரவேற்பது, பேட்டி காண்பது போன்ற நிகழ்ச்சிகளும் ஸ்ரீமான் சேஷாத்ரி ஐயங்காரின் தலைமையிலேதான் நடைபெறுமாம் வெகுவாக.

காங்கிரஸிலும் அவருக்கு அபிமானம் உண்டு. மர்க்கணக் காங்கிரஸ் கூட்டங்களை நடத்த அவர் உதவியை நாடுவார்கள் மாகாண ஜனங்கள்.

* * *

பாட்டனருக்கு மிகவும் தெய்வ பக்தி உண்டு. வைதிகப் பேர்வழியும்கூட. தினம் காலை இரண்டு மணி நேரம் ஸ்ரீமத் ராமாயணம் வாசிக்காமல் உணவு கொள்ள மாட்டார். ராமாயண பாராயணம், ஜபதபம், பூஜை முதலியன நடைபெற்று உணவு கொள்வதற்கு மணி பன்னிரண்டு ஆகும்.

பாட்டனர் காலைக் காப்பியை அறியார். அவர் உரத்த குரலில் இசையுடன் ராமாயண பாராயணம் செய்வது குழந்தையாகிய எனக்குக்கூட வெகு இன்பமாக இருக்கும், — பக்தியை உண்டு பண்ணுவதாகவும் இருக்கும்.

பூஜை பாராயணம் முடிந்ததும் அக்ஷதையையும் துளஸீ தளத்தையும் தமது மேல் உத்தரியத் தலைப்பில்

முடித்து வைத்துக்கொள்வார். பிறகு அகத்திற்கு வரும் பெண்டுகள், குழந்தைகள் இவர்களைக் கண்டதும் "இந்தா" என்று அழைத்துத் தலையை நீட்டச் செய்து அக்ஷதையைப் போட்டு ஆசிர்வதிப்பார். தூங்கிக் கொண்டிருந்தாலும் எங்கள் தலையில் அக்ஷதை போட்டு ஆசிர்வாதம் பண்ணவிட்டால் அவருக்குத் தூக்கம் வராது அன்று.

ஒரு சமயம், பாட்டனாருக்குக் கழுத்தில் ராஜ-ரணம் ஏற்பட்டதாம். ஆபரேஷனிலும், ஆங்கில வைத்தியத்திலும் அவருக்கு நம்பிக்கை கிடையாது. திருமலை வேங்கடேசப் பெருமாளுக்குக் கால்நடையாக மலைக்குப் போய்ப் பிரார்த்தனை செலுத்துவதாகப் பிரார்த்தித்துக் கொண்டார். அதன்படியே கட்டை வண்டிகளில் பெண்டுகளையும் சாமான்களையும் ஏற்றிக் கொண்டும், அங்கங்கே வழியில் தங்கிச் சமையல் செய்துகொண்டும், கால்நடையாகவே மதுரையிலிருந்து திருப்பதியை நோக்கிப் பிரயாணமானார். வழி நெடுக ஒரு வேளை ஆகாரம். மருந்து—துளஸீ தளம், பெருமாள் தீர்த்தம். பிரார்த்தனை செலுத்தி ஊர் திரும்பி வந்ததும் நோய் சொஸ்தமாகிவிட்டதாம். இந்த அதிசயச் சம்பவத்தை ஞாபகப்படுத்துவதற்காக அவர் தம் பெயருக்கு முன்பு "ஸ்ரீ" என்ற பதத்தைச் சேர்த்துக்கொண்டார். இது தவிர, தம் குமாரர்கள் இருவருக்கும் ஸ்ரீநிவாஸன், வேங்கடேசன் என்றும் பெயரிட்டார்.

* * *

எங்கள் பாட்டனாருக்குச் சென்னப்பட்டினம் என்றாலே பிடிக்காது. "எச்சில் தீண்டல் இல்லை", "சுத்த அநாசாரப் பட்டணம்" என்பார். தகப்பனார் எவ்வளவோ அழைத்தும் கடைசிவரை 'மதுரையை விட்டு வரமாட்டேன்!' என்று சொல்லிவிட்டார். எனினும் பிள்ளைமீது இருந்த பாசத்தினால் வருஷம் ஒரு முறை டிஸெம்பர் லீவுக்குப் பட்டணம் வந்து எங்களுடன் ஒரு மாதம் இருப்பார். நாங்களும் வருஷத்திற்கு ஒருமுறை கோடை விடுமுறையில் மதுரைக்குப் போவோம்.

மதுரை வீடு எனக்கு ரொம்பப் பிடிக்கும். இருட்டைக் கடைந்து திரட்டியது போன்ற அந்தப் பருத்த கருங்காலித் தூண்கள், வேலைப்பாடு செய்த அந்தக் கனத்த கதவுகள், வழவழப்பான வெள்ளைச் சுண்ணம் வைத்த அந்தச் சுவர்கள், பொதுவாக அந்த வீட்டினுள் இருந்த குளிர்ச்சி, அதன் பழமையை ஞாபகமூட்டும் அந்த நறுமணம்—இவற்றை யெல்லாம் நினைத்தால், இன்றும் என் உள்ளத்தில் ஓர் ஆவல் எழுகிறது.

ஆனால் மதுரைமாநகரில் உள்ள இராப் பிச்சைக் காரர்கள் போட்ட கூக்குரலை நினைத்தால், இப்போதும் உறக்கம் வராது என்று தோன்றுகிறது.

மதுரைப் பட்டணத்துச் சாக்கடை நாற்றமும், தெருக் கழுதைகளும் பேர்போனவை. அப்போது எங்களுக்கு அவை இரண்டும் வேடிக்கையாகவே யிருக்கும். இப்பொழுது அந்த மதுரைதான் மாறிப்போய் விட்டதே!

* * *

என் பாட்டனார் அகத்தில் ஒரு மூடு பல்லக்கு. தந்த வேலைபபாடு. ரொம்பப் பழமையானது. சற்று உடைந்து போனதுங்கூட. பாட்டனார் அக்காலங்களில் மதுரைக்கும் ராமநாதபுரத்துக்குமாக அடிக்கடி அதில்தான் சவாரி செய்து கொண்டிருந்தார் என்பார்கள்.

"இந்தமாதிரி மூடு பல்லக்கில் நாமும் சவாரி செய்ய மாட்டோமா?" என்று எனக்கு ஆசையாக இருக்கும்! ஆனால் எங்கள் கண்ணாமூச்சி விளையாட்டுக்குத்தான் அது உபயோகப்பட்டது அந்த நாளிலே.

நாங்கள் ஊருக்குத் திரும்பிப் போகும்போது ஒவ்வொரு தடவையும் எனக்கு ஒரு "சுங்கடிச்" சிற்றாடையும், தாயாருக்கு ஒரு சேலையும் வாங்கிக் கொடுப்பார் பாட்டனார்.

மதுரை 'சுங்கடி'ப் புடவைக்குப் பேர்போனது. 'அந்தக் 'கப்பு'ச் சாயத்திற்கும், சிறு சிறு புள்ளிகள்

போட்டு நெய்திருக்கும் அந்த அருமையான வேலைப் பாட்டிற்கும் எவ்வளவு வேணுமானாலும் விலை கொடுக்கலாமே!" என்று தோன்றும்.

ரூபாய் 2½ முதல் 100 ரூபாய் வரையிலும்கூட விலையுள்ள உயர்ந்த ரகச் 'சுங்கடி'ப் புடவைகள் அங்கே உண்டு. சுதேசியத்திற்கும் கைவேலைப் பாட்டிற்கும் கௌரவம் அளிப்பதை அக்காலத்து ஜனங்கள் அறிந்திருந்தார்கள்.

* * *

ஒரு சமயம் பாட்டனார் சென்னைக்கு வந்திருந்த போது, சென்னையில் அவ்வருஷம் (1908) காங்கிரஸ் மகா சபைக் கூட்டம் நடந்தது. அன்று தகப்பனாருடன் பாட்டனாரும் புறப்பட்டார், காங்கிரஸ் கூட்டத்திற்குப் போக. எங்கள் பாட்டனாரிடம் ஒரு பழைய தகர டிரங்குப் பெட்டி உண்டு. அதில் ஒரு பழைய அல்பாக்காக் கோட்டு, சரிகைக் கரை போட்ட சிவப்புப் பட்டுத் தலைப்பாகை, வண்ணான் மடி பிரியாத ஜரிகை வேஷ்டி, அங்கவஸ்திரம், ஒரு ஷர்ட்டு ஆகியவை இருக்கும். அவர் ராமநாதபுர சமஸ்தானத்துப் பிளீடராக இருந்துவந்த போது அணிந்திருந்த கோர்ட்டு உடுப்புகள் அவை. அவைகளைத்தான் அவர் வெளியில் எங்கே போனாலும் அணிந்து கொள்வார்.

கறுப்பு அல்பாக்காக் கோட்டுக்குமேல் இடது தோளில் ஒரு ஜரிகை அங்கவஸ்திரமும், ஜரிகைக் கரை போட்ட ஒரு சிவப்புக் கம்பளிச் சால்வையும், மடிப்புக் கலையாமல் தொங்கவிட்டுக் கொள்வார். தலையிலே அந்தச் சிவப்புத் தலைப்பாகை, நெற்றியில் பளிச்சென்ற திருநாமம், காதில் வைரக் கடுக்கன், கோட்டு ஜேபியில் தங்கக் கடிகாரம், கையில் வெள்ளிப் பூண் தடி, காலில் கான்பூர் பாதரக்ஷை—இந்தவிதம் 'டிரஸ்' செய்து கொள்ள ஒரு மணிக்குமேல் பிடிக்கும்.

தாத்தாவின் இந்த உடுப்பும் அலங்காரமும் எனக்கு நகைப்பை உண்டாக்கும். "ஏன் தாத்தா? புதுமாதிரி

உடுப்புகள் தைத்துக் கொள்ளேன். உன் கோட்டுக்கு இந்திரனைக் காட்டிலும் அதிகம் கண்கள் உண்டுபோல் இருக்கிறதே!" என்பேன்.

"சீமா மாதிரி நிஜாரும் பூட்ஸுடம் போட்டுக் கொண்டு அவ்விதப்பட்ச் சொல்லுகிறாயா அம்மா? எனக்கு என்னத்திற்கம்மா அந்தமாதிரி உடுப்புகள், இந்தத் தள்ளாத வயசிலே? இந்தப் பழைய உடுப்பே போதும்!" என்பார்.

இவ்விதம் உடுப்புப் போட்டுக்கொண்டு அன்று காங்கிரஸ் கூட்டத்திற்குப் புறப்பட்ட பாட்டனாரை "வரவேண்டாம்" என்று தடுத்தார் தகப்பனார். "இப்பொழுதெல்லாம் காங்கிரஸ் கூட்டம் முன்போல் இல்லை. கலாட்டா ரொம்ப; பெஞ்சு நாற்காலிகள்கூட உடைபடுகின்றன! (சூரத் காங்கிரஸுக்கு அடுத்த கூட்டம்) இந்தத் தள்ளாத வயதில் நீங்கள் என்னத்திற்கு வந்து இந்தக் கலாட்டாவில் மாட்டிக் கொள்ளுகிறது?" என்று சொல்லிப் பார்த்தார். சூரத் காங்கிரஸுக்கு என் தந்தையார் போயிருந்தார், அந்தக் கலகத்தை நேரில் பார்த்தவர்தான்.

"ஏண்டா சீமா? நீ மட்டும் அந்த அடிதடியில் போய் மாட்டிக் கொள்ளலாமோ? நீயும் போகாதே, நின்று விடு. நீ போகிறதானால் நானும்தான் கூட வருவேன்" என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டார் பிடிவாதமாக.

* * *

பாட்டனார், தம் பிள்ளை மதுரையிலேயே இருந்து கொண்டு வக்கீல் தொழில் நடத்த வேண்டும் என்று ரொம்ப ஆசைப்பட்டார்.

ஆனால் தகப்பனார், சென்னையில் இருந்தால்தான் தாம் வக்கீல் தொழிலில் முன்னுக்கு வரமுடியும் என்று பிடிவாதமாகச் சாதித்து விட்டபடியால், இவர் இஷ்டப்படியே விட்டு விட்டார்.

பாட்டனார் இறக்கும்போது அவருக்கு வயது எண்பத்தைந்துக்கு மேலாகிவிட்டது. அதுவரை அவர்

தமது ஸ்நானம், பூஜை புனஸ்கார்ம் ஆகியவைகளை விட்ட தில்லே. இரண்டு வருஷங்கள் நடமாட்டம் இல்லாம லிருந்தபோதும்கூட அவைகளை அவர் விட்டதில்லே. ஒரு நாள் காலே, (1916 ஏப்ரல்) பூஜை முடித்துப் போஜனம் செய்து படுத்தவர் மாரடைப்பினுல் திடீரென்று மரண மடைந்தார்.

"சிமா! எங்கிருந்தாலும் எனக்குக் கொள்ளி போட நீ வந்துவிட வேணும்!" என்று பாட்டனுர் அடிக்கடி கூறுவாராம் பிள்ளேயிடம்.

சென்னையில் எங்களுக்குத் தந்திச் செய்தி கிடைத்த போது பகல் மணி இரண்டு இருக்கும். தகப்பனுர் அட்வகேட் ஜெனரல் ஆன புதிது. சாதாரண ரயிலில் போனுல் பாட்டனுரின் தகன சம்ஸ்காரத்திற்குப் போய்ச் சேரமுடியாது என்று ஒரு 'ஸ்பெஷல்' வைத்துக் கொண்டு போனுர் மதுரைக்கு.

* * *

தகப்பனுர் பால்யத்தில் ராமநாதபுரத்திலே ஓர் ஆரம்பப் பாடசாலேயில் தமிழ் பயின்று வந்தார். பிறகு பாட்டனுர் மதுரைக்கு வந்ததும் (1880) அங்கே ஹைஸ் கூலில் சேர்ந்து ஆங்கிலம் பயிலத் தொடங்கினுர். பிறகு மதுரைக் காலேஜில் உயர்தரக் கல்வி பயின்றுர். இச்சமயம்தான் பாட்டனுர் அடிக்கடி சென்னேக்குப் போய் வந்த சமயம்.

ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார் வீட்டில் அவர் தம் செல்லப் பிள்ளேயுடன் வந்து ஜாகை போடும்போதெல் லாம் "மதுரை மாப்பிள்ளே வந்து விட்டார்!" என்று என் தகப்பனுரைச் சுட்டிக் காட்டிப் பேசிக் கொள்வார் களாம். இருபுறத்திலும் பரஸ்பரம் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அப்போதே.

எனினும், தகப்பனுரின் விவாகத்திற்காக மதுரையி லேயே முதலில் பெண் தேடினுர்களாம். அங்குள்ள அநே கம் பெண்களே இவருக்குக் காட்டினுர்களாம். ஆனுல் தகப்பனுர் ஒரே பிடிவாதமாக, "அந்தப் பட்டணத்துப் பெண்தான் சிவப்பு, அவளேத்தான் கல்யாணம் செய்து

கொள்வேன் !" என்று சொல்லிவிட்டபடியால், முடிவில் இந்தப் பட்டணத்துச் சம்பந்தத்தையே தேடவேண்டி வந்தது.

ஸர். வி. பாஷ்யம் ஐயங்காரின் சம்பந்தம் எல்லா விதத்திலும் உயர்வாக இருந்தும், 'பட்டணத்துப் பெண்ணை மணஞ் செய்வித்தால் எங்கே பிள்ளை பட்டண வாஸத்தையே விரும்புவானோ?' என்ற ஒரு காரணத்தினுல்தான் சற்று ஆலோசித்தாராம் பாட்டனார். முடிவில் தம் பிள்ளை மனசுக்கு மதுரையில் எந்தப் பெண்ணும் பிடிக்காமல் போகவே, பாஷ்யம் ஐயங்காரின் மூன்ருவது பெண்ணாகிய ரங்கநாயகியை மணஞ் செய்வித்தார்.

விவாகத்தின்போது என் தகப்பனருக்கு வயது பதினலு, தாயாருக்கு ஏழு வயது. விவாகம் ரொம்ப விமரிசையாக் நடந்ததாகவும், அச்சமயம் சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களிலிருந்து வந்த பந்துக்கள் - கூட்டத்தைச் சொல்லி முடியாது என்றும் சொல்வார்கள்.

* * *

மதுரைக் காலேஜில் படிப்பு முடிந்ததும் சென்னைக்கு வந்து ப்ரெஸிடென்ஸி காலேஜில் சேர்ந்தார் தகப்பனர். மாமனரான ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார் அகத்திலேயே தங்கி 'பி. ஏ'க்குப் படித்தார். அந்நாட்களில் பொருளாதார சாஸ்திரத்திலும், ஆங்கிலத்திலும் பரீட்சையில் முதல் நிற்பவர்களுக்குச் சென்னை ஸர்வ கலாசாலை வழங்கிய மெடல்களை இவர் பெற்ருர்.

எஸ். ஸ்ரீநிவாஸையங்காருடன் ப்ரெஸிடென்ஸி காலேஜில் படித்தவர்களில் இப்போது உதயபுரியில் திவானக இருக்கும் ஸர். டி. விஜயராகவாச்சாரியார் ஒருவர். அவர் சமீபத்தில் "சுதேசமித்திரன்" உதவி ஆசிரியர் ஸ்ரீ. கே. சுந்தரராகவனுக்கு எழுதிய கடிதமொன்றில் பழைய கால ஞாபகங்களைக் குறிப்பிட்டிருக்கிருர் :

"1892, 1893-ம் வருஷங்களில் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் கலாசாலையில் என்னுடன் சேர்ந்து படித்தார்;

கலாசாலையில் அவர் சிறப்பாகத் தேறினார். அவரது திறமையைக் கண்டு அவருடன் படித்த மாணவர்கள் மயங்கிப் போனார்கள். அந்தக் காலத்தில் அவர் எல்லோருடனும் சகஜமாய்ப் பழகாமல் சங்கோசமாக இருந்து வந்ததைப் பார்த்துச் சிலர் அவருக்கு அகம்பாவம் அதிகம் எனக் கூறி வந்ததுண்டு. கலாசாலையில் படித்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களில் ஒன்றுதான் இப்பொழுதும் என் நினைவில் இருக்கிறது. நானும் அவரும் மற்றும் சில மாணவர்களும் கலாசாலை லைப்ரரியில் உட்கார்ந்திருந்தோம். அப்பொழுது 'பிரின்ஸிபல்' திருவாங்கூர் மகாராஜாவை அங்கே அழைத்துக்கொண்டு வந்தார். எல்லா மாணவர்களும் உடனே எழுந்து நின்றனர். ஆனால் நானும் ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் மட்டும் எங்கள் சுதந்திரப் புத்தியைக் காட்டவேண்டும் என்று முடிவு செய்து இடத்தை விட்டு எழுந்திருக்கவே யில்லை.''

ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்காருக்குச் சீமைக்குப் போய்ப் படிக்கவேண்டுமென்றும், 'ஐ. ஸி. எஸ்'ஸுக்குப் படிக்கவேண்டுமென்றும் ரொம்ப ஆவல். ஆனால் ஸ்ரீ. சேஷாத்ரி ஐயங்கார், "சீமா ! நீ எந்த ஊருக்கு வேணுமானாலும் போய்விட்டு வா! எங்கே வேணுமானாலும் போய்ப் படி. கடல் யாத்திரை செய்வது மட்டும்—கடல் கடப்பது என்பது மட்டும்—நான் உயிருடன் இருக்கும் வரை நீ செய்யக்கூடாது!" என்று கேட்டுக்கொண்டார். ஆகையால் தம் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை, தாம் வெளிநாடுகளுக்குப் போவதில்லை என்று தமக்குள் பிரதிக்ஞை செய்துகொண்டு அதைக் கடைசி வரைக்கும் காப்பாற்றிவிட்டார்.

முதலில் என் தகப்பனாருக்கு 'பி. ஏ., பி. எல்.' படித்து வக்கீல் தொழில் பார்ப்பதில் சற்றும் இஷ்டமில்லை. மைசூர் ஸிவில் ஸெர்விஸிலாவது சேரலாம் என்று பார்த்தார். ஆனால் தந்தை பிள்ளையைப்

பார்த்து, "நீ வக்கிலுக்குத்தான் படிக்கவேணும், உன் மாமனாரைப்போல் அந்தத் தொழிலில் நீ முன்னுக்கு வரவேணும்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டபடியால் அதன்படியே வக்கில் தொழிலுக்குப் படிக்கலானார்.

* * * *

சாஸ்திரம் இந்துக்களுக்கு நாலுவித ஆச்ரமங்களை விதிக்கிறது. பண்டைக் காலத்துப் பெரியோர்கள் அந்த நாலு ஆச்ரம முறைகளைக் கையாண்டு வந்த தாகச் சொல்லுகிறார்கள். ஒரு விதத்தில் ஸ்ரீமான் ஐயங்காரின் வாழ்நாட்களையும் நாலுவிதமாகப் பிரித்துக் கூறலாம்.

ப்ரெஸிடென்ஸி கா்லேஜ், லா காலேஜ் மாணவராக மாமனார் அகத்திலே இருந்துகொண்டு படித்துவந்த காலம்—அது ஒரு ரகம்.

பின்பு, தொழிலின் உன்னத நிலையில் படாடோப மாகக் கோட்டும் பூட்ஸும் தரித்துக் கோர்ட்டார் முன் சென்று ஸிம்ம கர்ஜனை கர்ஜித்து வாதாடி வழக் குரைத்துத் திரவியம் திரட்டிப் பேரும் புகழும் பெற்ற அந்த நாட்கள்—அவை ஒரு விதம்.


அதன்பின் மகாத்மாவின் மகத்தான சக்திக்கு வசப் பட்டுச் சுத்தக் கதராடை உடுத்தித் தமிழ் நாடெங்கும் சுற்றித் திரிந்து தமிழிலே பேசித் தமிழ் மக்களின் மன ஸைக் கொள்ளைகொண்டு தேசசேவை செய்துவந்த அந்த நாட்கள்—அவை வேறு விதமானவை. தாம் அதுவரை யில் சிரமப்பட்டுச் சேமித்துவந்த செல்வம் தண்ணீர் பட்ட பாடு படுவதைக் கண்டும் காணாததுபோல் இருந்த காலம் அது!

கடைசியாக, காங்கிரஸை விட்டு விலகியவராய்ப் பொது வாழ்க்கைக்கும் 'திலாஞ்சலி' செய்துவிட்டு, வீட்டி லேயே எதிலும் பற்றுதலின்றி யிருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அந்தக் கடைசி நாட்கள்—அவை ஒரு தனி ரகம்தான்.

மயிலாப்பூர் லேடி பாஷ்யம் ஐயங்காரின் வைதிக ஆசார அனுஷ்டானங்களுக்குச் சற்றும் குறையாதவர் தாம் மதுரை ஸ்ரீமான் ஸ்ரீ சேஷாத்திரி ஐயங்கார். அவருடைய குமாரரான ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்காரும் இளமையில் வைதிகப் பற்று உடையவராக இருந்தார் என்றால், என்ன ஆச்சரியம்! ஆனால் அந்தப் பற்று அப்படியே ஸ்திரப்பட்டுப் போகாமல் போனதுதான் அதிசயம். மாமனார் வீட்டிலிருந்தபொழுது ஸ்ரீநிவாஸையங்கார் யாருடனும் கலகலப்பாய்ப் பேசிப் பழகமாட்டாராம். 'தாமுண்டு, தம் அறையுண்டு' என்று புஸ்தகமும் கையுமாகச் சதா தம் அறையிலேயே அடைத்துக் கிடப்பாராம். 'ஸந்தி' வழிக்கே போகாத மைத்துனன்மாரும் சகபாடிகளும் சூழ்ந்து கேலி செய்தும், இரண்டு வேளையும் ஸ்நானம் செய்து மடிகட்டி, அரைமணி மூக்கைப் பிடித்து ஸந்தியாவந்தனத்திற்கு உட்காரும் திடப் பழக்கம் அக்காலத்தில் இவருக்கு உண்டு. நெற்றியில் அப்பொழுது பளிச்சென்று நாமம் துலங்கும்.

இந்த ஸந்திப் பித்தும், இவருடைய பேசாமடந்தைத்தனமும், 'இது ஒரு விசித்திரப் பேர்வழி!' என்ற புகழை அளித்துவிட்டன, இந்த மதுரை மாப்பிள்ளைக்கு, மாமனார் அகத்திலே. "இப்படி நீ பேசாமடந்தையாக இருந்தால் வக்கீல் தொழிலில் முன்னுக்கு வருவதுதான் எப்படி?" என்று அடிக்கடி கேட்டுவந்தார் மாமனார் பாஷ்யம் ஐயங்கார் மாப்பிள்ளையைப் பார்த்து.

இப்படி யிருந்த 'சீமா'தான் பிற்காலத்தில் வீட்டுக்கு வருகிறவர்களைப் போகவிடாமல் மணிக் கணக்கில் நிறுத்தி வைத்துக்கொண்டு பேசுவார்; 'அம்ஜத் பாக்' வராந்தாவில் உலாவிக்கொண்டே சம்பாஷிப்பார். வந்தவர்களும் இவர் பின்னே போய்க்கொண்டிருக்க வேண்டியதுதான். (ஐந்தாறு மைல் நடந்த பலனும் நிச்சயமாக உண்டு.) பிறகு வாசற்படி வரையில் தொடர்ந்து போய்ப் பேசிக்கொண்டே யிருப்பார்! ஒவ்வொரு சமயம் திரும்பிப் போகிறவர்களின் காரை வாசல் வரையில் துரத்திக்கொண்டு போய் 'புட்போர்டி'ல்



பழைய அம்ஜத் பாக்

ஒருகாலும் தரையில் ஒரு காலுமாய் நின்றுகொண்டு அரைமணி பேசித் தீர்ப்பார் தம் ஆசை தீர!—என்று யார் எதிர்பார்த்திருக்க முடியும்? ஆனால் கேட்பவர்களும் ஆசை தீரக் கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள்.

* * *

காங்கிரஸை இவர் விட்டு விலகியிருந்த சமயம் ஒரு நண்பர், 'இவரைச் சந்திக்கவேணும்' என்று விரும்பினார். "என்ன பிரயோஜனம்? உங்களால் அவர் மனஸை மாற்ற முடியாது!" என்றேன். எனினும் அவர் கேட்கவில்லை. காலை எட்டு மணிக்கு வந்தார் தகப்பனாரைச் சந்திக்க. அவர் திரும்பிப் போகும்போது மணி பன்னிரண்டு அடித்தது. அதுவரை டிராயிங் ரூம் ஹாலில் கேட்டது பேச்சு-சப்தம். "மழை பெய்து ஓய்ந்ததா? வந்த காரியம் எப்படி?" என்று நண்பரைக் கேட்டேன். "வந்த காரியம் என்னவோ ஜயமில்லை. ஆனால் எனக்கு இது ஒரு சுப தினம் (Red Letter day)தான்!" என்றார் வந்தவர்.

"அதெப்படி?"

"அவர் பேச்சைக் கேட்கக் கொடுத்து வைக்க வேணுமே! அறிவுக் களஞ்சியத்தை அப்படியே அள்ளியள்ளிக் கொட்டி விடுகிறார்! என்ன கருத்துக்கள், என்ன அபிப்பிராயங்கள்!" என்று புகழ்ந்தவண்ணமாய்ப் போனார் அந்த நண்பர், தோல்வியுற்றபோதிலும்.

தகப்பனாரின் பேச்சுகளை 'வீண் வம்பளப்பு' என்று தள்ளிவிட முடியாது. இவர் படித்து ஆராய்ந்த விஷயங்களின் விமர்சனையே பெரும்பாலும் இவர் பேச்சாக இருக்கும். அபாரப் படிப்பு இவர் பேச்சில் புலனாகும். அதைப் பார்த்துப் பலர் மலைத்துப் போனதுண்டு. "என்ன? உங்கள் தகப்பனார் அபரிமிதமாகப் படிக்கிறார்போல் காண்கிறதே!" என்று என்னிடம் பல நண்பர்கள் கூறியிருக்கிறார்கள்.

* * *

தகப்பனார் 'எப். எல்.' பரீட்சைக்குப் படிக்கும்போது மர்மனார் அகத்தை விட்டுப் பலாத் தோப்புக்குத் தனிக்

குடித்தனம் போனார். அப்போது அவருக்கு வயது சுமார் இருபத்திரண்டு. தாயாருக்குப் பதினைந்தே வயது. மதுரையிலிருந்து மாசாமாசம் ரூபா 100 வரும், வீட்டுச் செலவுக்காக. அதைக்கொண்டு சிக்கனமாகவே குடித்தனம் நடத்தி வந்தார். ஒவ்வொரு மாசமும் வீட்டுச்செலவுக் கணக்கு விவரங்களை ஒன்று விடாமல் எழுதி அனுப்பிவிடுவார் மதுரைக்கு. என் பாட்டனார் பண விஷயத்தில் ரொம்பக் கடினமான பேர்வழி யாகையால், அவர் இஷ்டத்திற்கு மீறி எந்தச் செலவும் செய்யமாட்டார் தகப்பனார்.

* * *

ஸ்ரீநிவாஸையங்கார் 'பி.எல்.' படித்து முடித்ததும் மாமனார் ஸர்.வி. பாஷ்யம் ஐயங்காரிடமே அப்ரெண்டிஸாக இருந்தார். பிறகு 1898-ம் வருஷம் ஹைகோர்ட்டு வக்கீலாக ஸன்னது பெற்றார். ஸர். வி. பாஷ்யம் ஐயங்காரிடம் மூத்த மாப்பிள்ளையான திவான்பகதூர் ஸி. ஆர். திருவேங்கடாச்சாரியார், வி. ஸி. சேஷாச்சாரியார், ஸர் வி. ஸி. தேசிகாச்சாரியார், எஸ். கோபாலசாமி ஐயங்கார், இவர்கள் ஏற்கெனவே இவரைவிட ஸீனியர்களாக இருந்தனர். மற்றும் பல ஜூனியர்களும் இருந்தனர். தொடக்கத்திலிருந்தே ஸ்ரீநிவாஸையங்கார் தம் தொழிலில் தீவிர முன்னேற்றம் அடைந்து வரலானார். தம் மாமனாரான பாஷ்யமையங்காரின் புத்திக் கூர்மையும் அசாதாரணத் திறமையுமே இந்தியர் சட்ட சாஸ்திரத் துறையில் முதன்மை ஸ்தானம் வகிக்க உதவியது என்பதை என் தந்தையார் சமயம் வாய்த்தபோதெல்லாம் சுட்டிக் காட்டுவதுண்டு.

ஸர். வி. பாஷ்யமையங்காருடன், ஊத்துமலை ஜமீன் கேஸ், விஜயநகரம், பித்தாபுரம் முதலிய சமஸ்தானக் கேஸ்களில் இவர் புகுந்து வேலை செய்யத் தொடங்கினார். சில வருஷங்களுக்குப் பிறகு மாமனாரிடம் ஜூனியராக இருப்பதை விட்டுவிட்டார். பிறகு வி. கிருஷ்ணசாமி ஐயருடன் சில கேஸ்களில் வேலை செய்து வந்தார். அப்பொழுது ஸர். வி. பாஷ்யமையங்காருடன்

வி. கிருஷ்ணசாமி ஐயர், சுந்தரமையர் இருவரும் ஸீனியர் வக்கீல்களாக இருந்தனர்.

என் தாயார்தான் ஸர். வி. பாஷ்யமையங்காருக்குச் செல்லப் பெண் என்பார்கள். அவள் எது கேட்டாலும் அவர் கொடுத்துவிடுவாராம். ஊத்துமலைக் கேஸ் ஒன்றில் ஒருசமயம் இரு கட்சியினரும் பாஷ்யமையங் காரை, "என் பக்கம் பேசவேணும், என் பக்கம் ஆஜராக வேணும்" என்று தொந்தரவு செய்தார்கள். என்ன செய்வதென்று அவர் தீர்மானிக்கவில்லை. ஒரு கட்சிக்கும் உறுதி சொல்லாமல் காலம் கடத்தி வந்தார். அப்போது ஊத்துமலைப் பழைய ஜமீன்தாரிணி என் தாயாரிடம் வந்து, தன்பக்கம் ஆஜராகும்படித் தந்தையிடம் சிபார்சு செய்யச் சொன்னாள். என் தாயார் மனங் கசிந்து அப்படியே தந்தையிடம் வேண்டிக் கொண்டாள். அவரும் அந்தக் கேஸை எடுத்துக்கொண்டு வாதாடி ஜயித்துக் கொடுத்தாராம்.

அந்தச் செல்லப் பெண்ணுடைய குழந்தைகளாகிய என்னிடமும் என் தம்பியிடமும் எங்கள் பாட்டனாராகிய பாஷ்யமையங்காருக்கு விசேஷ அபிமானமுண்டு. சில தினங்களில் தம் இரட்டைக் குதிரை 'ஸாரட்'டில் வந்து எங்கள் இருவரையும் கடற்கரைக்குக் கூட்டிக்கொண்டு போவார். அவரைப் பார்க்கவும் நாங்கள் 'லக்ஷ்மீ விலாஸ்' பங்களாவுக்குப் போவோம். அப்போது அவர் எங்களுக்கு 'ஆல்பகடா' பழம், பாதாம் பருப்பு இவை களைக் கொடுப்பார்.

நான் சிறுவயசில் 'ரொம்ப வாயாடி' யென்றும் பெயர் வாங்கி யிருக்கிறேன். ஒருசமயம் தாத்தா ஸர் வி. பாஷ்யமையங்காருக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டு பாட்டியை நோக்கி ஒரு குட்டிப் பிரசங்கம் — இல்லை, ஓர் 'அதிகப் பிரசங்கம்'—செய்ததாக ஞாபகம் இருக்கிறது. "தலை நரைத்துப்போன பிறகு இத்தனை வைர நகைகளைப் பாட்டி ஏன் போட்டுக்கொண்டிருக்கிறாள்? இது நன்றாயில்லை! இவற்றை யெல்லாம் கழற்றிவிட்டால்

நன்றாயிருக்கும்!" என்றெல்லாம் நான் பேசிவிட்டேன். ப்ராஷ்யம் ஐயங்கார் சிரித்துக்கொண்டே பாட்டியைப் பார்த்து, "அம்புஜவல்லி என்ன சொல்லுகிருள், கேட்டாயோ? இனிமேல் நீ வைர நகைகள் போட்டுக் கொள்ளக் கூடாதாம், தலை நரைத்துவிட்டதால். தாத்பரியம் என்ன தெரியுமோ? தான் அந்த நகைகளையெல்லாம் அணிந்தால் நன்றாயிருக்குமாம். இவளுக்கு நீ இந்த நகைகளையெல்லாம் கொடுத்துவிட வேணுமாம்" என்று வேடிக்கையாக என் பேச்சுக்கு ஒரு பாஷ்யமே செய்து விட்டார்! எல்லாரும் 'கல்' என்று சிரித்து விட்டார்கள். அந்த நிகழ்ச்சி இன்றும் கனவுபோல் வருகிறது என் நினைவிற்கு.

* * *

பாஷ்யம் ஐயங்கார் இறந்துவிட்டார். வி. கிருஷ்ணசாமி ஐயர் கவர்னரது எக்ஸிக்யூடிவ் கௌன்ஸில் மெம்பராக நியமிக்கப்பட்டார். சுந்தரமையர் ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் ஆனர். ஸ்ரீநிவாஸையங்கார் அப்பொழுது பிரபல ஸீனியர் வக்கீல். இரண்டு ஸ்ரீநிவாஸையங்கார்கள் — 'எஸ்'ஸும் 'டீ'யும் — உடனே முன்னணிக்கு வந்தனர்.

1909—ஏப்ரலில் இவர் 'சட்டமும் சட்டச் சீர்திருத்தமும்' என்பது பற்றிச் சென்னை வக்கீல்கள் சங்கக் கூட்டத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதைப் பிறகு புஸ்தகமாகவும் வெளியிட்டார். காலப்போக்கை அனுசரித்து, மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்தையொட்டிச் சமூகத்தின் ஒழுக்க முறைகளும் சட்டக் கோட்பாடுகளும் திருத்தி அமைக்கப்படுவது எவ்வளவு அவசியம் என்பது குறித்து இவருக்கு அப்போதே திடமான அபிப்பிராயம் இருந்தது. ஹிந்துக்களின் சகல விதமான சட்ட திட்டங்களைத் தொகுத்துச் சந்தேகங்களைச் சுலபமாக நிவர்த்திப்பதற்கு ஏற்பாடு செய்வது அவசியம் என்பதை இவர் அப்பொழுதே சுட்டிக் காட்டியிருக்கிருர்.

* * *

மதப் பூச்சாண்டியைக் கிளப்பி முன்னேற்றத்தை மறிக்கக்கூடாது என்று இவர் அப்போது முறையிட்டார். பழைய காலப் பழக்க வழக்கங்கள் இன்னமும் அனுஷ்டானத்தில் இருந்து வருவதற்கு அவை புனிதமானவை என்பதோ, கண்டிக்கத்தகாதவை என்பதோ காரணம் அல்ல எனவும், ஆனால் நாம் புதிய வழியைப் பின்பற்றாமல் மௌனமாக இருப்பதே காரணம் எனவும் தெரிவித்தார். ஹிந்துக்களது சட்ட திட்டங்களில் குறுக்கிடுவதில்லை யென ஸர்க்கார் தீர்மானித்துவிட்டதால் ஹிந்து சட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் விசேஷ மகத்துவம் வாய்ந்ததாக மாறிவிட்டதாகவும் இவர் கூறினார். இந்தப் பிரசங்கத்தில் சட்டம் காலப் போக்கை அனுசரித்து எவ்விதம் மாற்றப்பட வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டினார். வாழ்க்கையைப் பற்றிப் பிரஸ்தாபித்துவிட்டு ஸகோத்திர விவாகத்தை ஆதரித்துச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும், பல ஜாதிகளுக்கிடையே கலப்பு விவாகமும் இதேமாதிரி சட்ட பூர்வமாக அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இவர் அன்று கோரினார். இன்றும் இந்தப் பிரசங்கம் எல்லோருடைய கவனத்திற்கும் உரியதாகும்.

* * *

ஆறு வருஷம் பலாத்தோப்பு வீட்டில் குடியிருந்தோம் நாங்கள். ஸ்ரீநிவாஸையங்கார் தொழிலில் கொஞ்சம் முன்னுக்கு வந்ததும் மயிலாப்பூர் வடக்கு மாட வீதி வீட்டுக்குக் குடி வந்தோம். இந்த இரண்டு வீடுகளும் மாமனார் வி. பாஷ்யம் ஐயங்காருக்குச் சொந்தமானவைகளே.

அந்தக் காலத்தில் தாயாருக்குப் படிப்பு அதிகம் கிடையாது. பள்ளிக்கூடம் போனதில்லை. தமிழ்ப் புஸ்தகங்களைத்தான் படிக்கத் தெரியும். தாயாருக்கு ஆங்கிலம் கற்பிக்கவும் 'பியானோ' கற்பிக்கவும் ஓர் ஆங்கில உபாத்தியாயனியை அமர்த்தியிருந்தார் தகப்பனார். அவள் மூலம் தாயார் ஆங்கிலம் படிக்கவும் பேசவும் கற்றுக்கொண்டாள்.

நாங்கள் குழந்தைப் பருவமுதல் வருஷந்தோறும் மலைப் பிரதேசங்களுக்குப் போய் வந்தோம், கோடை லீவுக்கு. மலைவாஸத்திலே தகப்பனருக்கு ஆதி முதல் ஒரு தனிப் பிரீதி. பலமுறை குன்னூருக்கும் உதக மண்டலத்திற்கும் போயிருக்கிறோம்.

பிற்காலத்தில் கோடைக்கானலில் உள்ள 'ஸ்ரீநி கேதன்' என்ற பங்களா தகப்பனருக்கு ரொம்பப் பிடித்து விட்டது. அதைச் செம்மைப் படுத்துவதற்காக வருஷாவருஷம் பெருந் தொகை செலவு செய்தார். தோட்டம் போடுவதிலும், கட்டடம் கட்டுவதிலும் இவருக்கு ஒரு தனி மோகம். பிரதி வருஷமும் வீட்டில் ஏதாவது ஒரு பாகத்தைப் புதுப்பித்துக்கொண்டே போவார்; சதா கட்டட வேலை ஏதாவது நடந்து கொண்டே யிருக்கும். அது சம்பந்தமான ஒவ்வொரு சிறு விஷயத்தையும் தாமே நேரில் கவனிப்பார்.

கடைசிக் காலத்தைத் தாம் கோடைக்கானலிலேயே கழித்துவிடப் போவதாக அடிக்கடி கூறுவார்.

குளிர் அதிகம் இருக்கும் மாசங்களில் வசிப்பதற் கென்று கோடைக்கானலில் 'பெருமாள்மலை' என்ற சற்றுத் தாழ்ந்த பிரதேசத்தில் ஓர் இடமும் வாங்கி வீடு கட்டிவிட்டார்.

* * *

இவருடைய பால்ய சிநேகிதர்களில் மதுரையைச் சேர்ந்த கே. என். ஐயாவையர், சீதாராமையர், சென்னையைச் சேர்ந்த வி. வி. சேஷாச்சாரி, டி. ஜீவாஜி ராவ் என்பவர்களை நாங்கள் அடிக்கடி வீட்டில் பார்த்த துண்டு. இவர்களுடனும், தாடுபீடு சுப்பிரமணிய ஐய ருடனும் வீட்டில் அடிக்கடி சீட்டுக் கச்சேரிகள் நடக்கும். சுடச் சுட 'டீ' தயாரித்து அவர்களுக்கு அனுப்பிக் கொண்டே யிருப்பாள் என் தாயார்.

அக்காலங்களில் ஸ்ரீநிவாஸையங்கார் மயிலாப்பூர் கிளப்புக்குப் போவார். 'பில்லியர்ட்' விளையாட்டு இவ ருக்கு ரொம்பப் பிடிக்கும். கோர்ட்டிலிருந்து வீட்டுக்கு

வந்ததும் கிளப்புக்குப் போய்விடுவார். வீட்டுக்கு வர இரவு மணி ஒன்பதாகிவிடும்.

அப்போது 'எலெக்ட்ரிக்' விளக்கு வரவில்லை. ஒன்றிரண்டு மோட்டார்க் கார்களே சென்னைக்கு வந்திருந்தன. தகப்பனார் கோர்ட்டுக்குப் போகக் குதிரை வண்டிதான். க்ளப்புக்குக் கால் நடையாகப் போவார். இரவில் லாந்தல் எடுத்துக்கொண்டு ஒரு ஆள் போவான், இவரை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வர.

பால்யத்தில் தகப்பனாருக்கு ஸைக்கிள் விடுவதில் ரொம்பப் பிரியம். மலைப் பிரதேசத்தில் குதிரையேற்றம் கற்றார். ஆனால் இவை இரண்டிலிருந்தும் ஒரு சமயம் கீழே விழுந்து பலத்த காயம் ஏற்பட்டதிலிருந்து இந்த அப்பியாசங்களை விட்டுவிட்டார்.

* * *

இவருக்குத் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் நல்ல பரிசயம் உண்டு. மதுரையிலே இருக்கும்போது சதா தமிழ்ப் புஸ்தகங்களையே படித்துக்கொண்டிருப்பாராம். ஸம்ஸ்கிருத சுலோகங்களுக்கு அர்த்தம் தெரியுமாதலால், விசேஷ நாட்களில் வாத்தியார் சொல்லிவைக்கும் மந்திரங்களில் உள்ள தப்புத் தவறுகளைக் கண்டுபிடித்துப் பலமாகக் கண்டிப்பார். வைதிகர்களுக்குத் தகப்பனாரைக் கண்டால் பயந்தான். அவர்கள் சொல்வதை வேத வாக்காக எடுத்துக்கொள்ளாமல் மடக்கி மடக்கிக் கேள்விகள் கேட்டு அலசிவிடுவாராகையால், இவர் முன் தங்களுக்கு அதிகம் தெரியாது என்பதைக் காட்டிக்கொண்டு விடுவார்கள் வைதிகப் பிராம்மணர்கள். தமக்கு அர்த்தம் விளங்காத இடத்தில் மந்திரத்தை உச்சரிக்க மறுத்து விடுவார் தகப்பனார். அமாவாசைத் தர்ப்பண மந்திரத்தில் சில அடிகள் ஆக்ஷேபகரமானவை என்று அவைகளை உச்சரிக்க மறுத்துவிட்டார்.

அக்காலத்தில் 'பிரெஞ்சு பாஷை மோகம்' அனேகருக்கு இருந்திருக்க வேண்டும். மிஸ்டர் தம்பி என்ற ஆசிரியரிடம் பிரெஞ்சு பாஷை கற்றார். இவர் பிரெஞ்சு பேசி நாங்கள் கேட்டறியோம். ஆனால் வீட்டில் ஒரு

பீரோ நிறைய பிரெஞ்சுப் புஸ்தகங்களாகவே இருந்ததைப் பார்த்திருக்கிறோம்; அவைகளை இவர் ஊக்கமாகப் படிப்பதையும் பார்த்திருக்கிறோம்.

பால்யத்தில் தகப்பனார் ஆங்கிலத்தில் கவிகள் கட்ட முயன்றார் என்றும் தெரிகிறது. அநேக புஸ்தகங்களில், இவர் கையெழுத்தில் உள்ள சில செய்யுள்-அடிகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இவர் புனைந்த கவிகளைத் தாயார் தவிர வேறு எவருக்கும் படித்துக் காட்டியதில்லை. 'எழுதி எழுதிக் கிழித்துப் போடுவார்' என்று தாயார் சொல்லுவார்.

சங்கீத ஞானம் இவருக்குச் சற்றுமில்லை. நாடகம், சினிமா, சங்கீதக் கச்சேரி என்றாலே பிடிக்காது. தாமும் போகமாட்டார், எங்களையும் போகவிடார்.

அப்படி நாங்கள் போனாலும், இரவு கண் விழிக்கக் கூடாது என்று உத்தரவு. இரவு வீட்டுக்கு நாங்கள் வந்து சேரும்வரை உறக்கம் கொள்ளமாட்டார். "குழந்தைகள் இன்னும் வரவில்லையா?" என்று நிமிஷத்திற் கொருமுறை தாயாரைத் தொணதொணப்பார். நாங்கள் வேடிக்கை பார்க்கப் போவதால் வீட்டில் தாயார் படும் பாட்டை எண்ணி, இரவு நேரங்களில் வெளியே போக மாட்டோம்.

* * *

நாங்கள் மாடவீதி வீட்டிலிருக்கும்போதே, தகப்பனார் வக்கீல் தொழிலில் நல்ல பிராபல்யம் அடைந்து விட்டார். முதல் முதல் இவரிடம் அப்ரெண்டிஸாக இருந்தவர்களில், பல பொதுஸ்தாபனங்களிலும் கலந்து சிறந்த தொண்டு புரிந்துவரும் ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீ. சௌந்தரராஜையங்கார் இவர்களைக் குறித்துத்தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அடிக்கடி நான் தகப்பனாரின் ஆபீஸ் அறைக்குள் சென்று ஒளிந்துகொண்டு தாயாருக்கு உபத்திரவம் கொடுத்து வந்த காலம் அது.

பிறகு 'அப்ரெண்டிஸ்'களாக வந்தவர்களில் சிலரைக் குறித்துக் குறிப்பாகவும் ஞாபகம் இருக்கிறது. இப்

போது அட்வகேட் ஜெனரல் பதவிக்கு வந்திருந்தும் ஸ்ரீ. கே. ராஜா ஐயர், பிரபல காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ கே. பாஷ்யம், தக்க வருமானமுள்ள தமது வக்கீல் பதவியைத் துறந்து தற்சமயம் புதுச்சேரியில் ஸ்ரீ அரவிந்தாச்ரம வாஸியாக இருக்கும் ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் முதலானவர்களை இங்கே குறிப்பிடலாம்.

செட்டிமார் நாட்டிலிருந்தும், மதுரை ராமநாதபுரம் ஜில்லாக்களிலிருந்தும் தகப்பனருக்குக் கேஸுகள் வரும். அவைகளைச் சேர்ந்த ஏஜெண்டுகள், செட்டியார் குமாஸ்தாக்கள், முதலானவர்கள் கேஸ் முடியும்வரை எங்கள் வீட்டிலேயே ஜாகை போடுவார்கள்.

தோல்வி அடையக்கூடிய கேஸுகளைத் தகப்பனர் எடுத்துக்கொள்ள மாட்டார். "இந்தக் கேஸுக்குச் சரியான சாட்சி ஒன்றுமில்லை. இதில் கட்டாயம தோல்விதான் கிடைக்கும். அநாவசியமாகக் கேஸைப் போட்டு, இருக்கிற பணத்தையும் ஏன் தொலைக்கப் பார்க்கிறீர்கள்? எதிரியுடன் ராஜி செய்துகொள்ள முடியுமானல் பாருங்கள். நான் இந்தக் கேஸை எடுத்துக் கொள்ளமாட்டேன்" என்று நிர்த்தாக்ஷிண்யமாய்க கூறி விடுவார் கட்சிக்காரர்களிடம்.

ஒரு சமயம் ஒரு பிரபல வெளியூர்க் கட்சிக்காரர் தகப்பனரைத் தம் கேஸை எடுத்துக்கொள்ளவேணுமென்று ரொம்பவும் வற்புறுத்தினர். தகப்பனர் என்ன சொல்லியும் கேட்காமல் போகவே, "நீங்கள் கேஸை எடுத்துக் கொள்ளாவிட்டால் நான் என்ன செய்வது? ஊரை விட்டு இவ்வளவு தூரம் வந்துவிட்டேன். திரும்பிப் போகப் போகிறதில்லை. கடலில் போய் விழுந்து விடுகிறேன்!" என்று பயமுறுத்திக்கொண்டு போனாராம் அந்தக் கட்சிக்காரர். பிறகு அவரைப் பிடித்து அழைத்துக்கொண்டு அவர் கேஸை எடுத்துக் கொள்ளும்படிச் சிலர் தகப்பனருக்குச் சிபார்சு செய்ததாகவும், அந்தக் கேஸை எடுத்து நடத்தியதில் தோல்வியே ஏற்பட்டதாகவும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பித்தாபுரம், வேங்கடகிரி, விஜயநகரம், நூஸ்வேடு முதலிய சமஸ்தானத்துக் கேஸுகளும் தகப்பனருக்கு வரும். அகோபிலம், திருப்பனந்தாள் முதலிய மடத்துக் கேஸுகளும் நடத்தியிருக்கிறார். அந்தக் கேஸுகளில் சிலவற்றுக்குப் பீஸே வாங்கமாட்டார். பத்து நாள் சேர்ந்தாற்போல் வீட்டில் தங்காமல் சதா கேஸ் விஷயமாக வெளியூர்களுக்கு 'ஸர்க்கிட்டு' போய்கொண்டேயிருப்பார், 'கஸ்தூரி' என்ற அந்த ஒரே சமையல்காரனுடன். ஊர் சுற்றுவதில் சற்றும் சளைக்கமாட்டார். வேளா வேளைக்கு ஆகாரம்கூடச் சரியாகக் கொள்ளமாட்டார். இவர் கோர்ட்டில் கேஸ் பேசப் போய்விட்டால் கோர்ட்டு ஹாலில் ஒரே கூட்டம் கூடிவிடும், ஜட்ஜிகள்கூடக் கொஞ்சம் உஷாராக இருப்பார்கள் என்று கேள்வி. எங்கள் வீட்டுப் பரிசாரகனும் குமாஸ்தாவும் வீட்டுக்கு வந்ததும், கேஸ் விஷயமாகத் தகப்பனர் நடத்திய வாதங்களைப் பற்றி ஒரு ஆவர்த்தி விமர்சனம் செய்வார்கள்.

பீஸ் விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருப்பார். நிர்த்தாக்ஷிண்யமாக இருப்பதாய்க் கூடத் தோன்றும். ஆனால் கொடுக்க இயலாதவர்களிடம் பீஸையே வற்புறுத்தமாட்டார். தோல்வியுற்ற கேஸ்களிலும் பீஸை வற்புறுத்தமாட்டார்.

* * *

1910-ல் தகப்பனர் லஸ் ரோடிலுள்ள 'அம்ஜத் பாக்' என்ற பங்களாவை வாங்கினர்: என் பாட்டனர் ஸர் வி. பாஷ்யம் ஐயங்கார் இறந்து சுமார் இரண்டு வருஷம் இருக்கும். மறு வருஷம் (1911-ல்) நாங்கள் அதில் குடி வந்தோம்.

1910-ம் வருஷம் என்னுடைய விவாகம். ரொம்பவும் தடபுடலாகச் செய்தார். விவாக தினம் காலை முகூர்த்தத்திற்கு முன் 10 மணி இருக்கும்—(பகல் 12 மணிக்கு முகூர்த்தம்)—வரப்போகிற மாப்பிள்ளைக்கு முன்பு ஒரு மணி நேரம் என்னையும் தாயாரையும் வைத்துக் கொண்டு ஓர் உபந்யாஸம் நடந்தது. விஷயம் இப்பொழுது ஞாபகமில்லை. ஆனால் வாத்தியார்கள் ஓடி

வந்து பலமுறை கதவைத் தட்டி அழைத்ததும், 'அம்மா! அம்மா !!' என்று பரிசாரகன் தாயாரைத் தேடி அலைந்ததும், வந்திருந்த அதிதிகள், வீட்டு யஜமானன் யஜமானி கல்யாணப் பெண் மாப்பிள்ளை இவர்களைக் கண்ணால் காணமல் தவித்ததும்தான் என் ஞாபகத்தில் இருக்கின்றன.

தகப்பனார் போக்கே அப்படித்தான். ஏதாவது பேசவோ, செய்யவோ ஆரம்பித்து விட்டால், அது முடிகிற வரையில் மற்றக் காரியமெல்லாம் காத்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். யாரானாலும் சரி, பெரிய ஜமீன்தார்க் கட்சிக்காரரானாலும் சரி, மணிக்கணக்கில் காத்துக்கொண்டுதான் இருப்பார்கள். ரயில் பிரயாணத்தில் கூட அப்படித்தான். ரயிலையே பல நிமிஷங்கள் காக்கும்படியும் செய்து விடுவார்.

* * *

ஒரு சமயம் நாங்கள் மேட்டுப்பாளையம் ரயிலில் குன்னூருக்குப் போய்க்கொண்டிருந்தோம். தகப்பனார் இரண்டாம் கிளாஸ் கம்பார்ட்மெண்ட் பூராவும் ரிஸெர்வ் செய்து வைத்திருந்தார். அதில் ஓர் ஆங்கிலேயன் வந்து ஏறிக்கொண்டு விட்டான். தகப்பனார் என்ன சொல்லியும் அவன் இறங்கவில்லை. தகப்பனார் கார்டைக் கூப்பிட்டார். கார்டு வந்து சொல்லிப் பார்த்தும் அவன் கேட்கவில்லை. கார்டு தனியாக இவருக்கு வேருெரு கம்பார்ட்மெண்டு அடுத்த ஸ்டேஷனில் கொடுப்பதாகச் சொன்னார். இவர் கேட்கவில்லை. கோபமாய்க் கூச்சல் போட ஆரம்பித்து விட்டார். ஸ்டேஷன் மாஸ்டர் வந்து ஆங்கிலேயனுக்குப் புத்திமதி சொல்லி அவனை வேருெரு கம்பார்ட்மெண்டில் ஏற்றின பிறகு தான் தகப்பனாரின் கோபம் அடங்கிற்று.

இம்மாதிரிச் சம்பவங்கள் பல. எங்கே போனாலும் தம் இஷ்டப்படி, தமக்குப் பிடித்த பிரகாரம், எதுவும் நடைபெருவிட்டால் பெரிய ரகளைதான் நடக்கும். 'போனால் போகிறது' என்று சாதுவாக இருக்க மாட்டார். முடிவில் வெற்றி தந்தைக்குத்தான்.

இவருடன் பிரயாணம் போனாலே எங்களுக்கு ரொம்பத் தொந்தரவாய்ப் போய்விடும். தமக்குப்போல் குழந்தைகளான எங்களுக்கும் ராஜோபசாரம் நடக்க வேணும் என்று விரும்புவார். அதனால் எவ்வளவு தொல்லை!

வீட்டிலேயும் இப்படித்தான். எங்களுக்குக் கொஞ்சம் சௌகரியக் குறைவு ஏற்பட்டாலும் சகிக்கமாட்டார். பெரிய ஆர்ப்பாட்டம் நடக்கும் வீட்டில்; வேலைக்காரர்கள் நடுங்கிப் போவார்கள்!

இவர் வீட்டிலிருந்தால் நூறுபேர் இருப்பது போலத்தான்; சதா கலகலப்புத்தான். இவர் வெளியூருக்குப் போய்விட்டாலோ, ஒரே அடியாக எங்கும் சாந்தம்; எங்கும் சூன்யம்!

* * *

தந்தையார் வாங்கிய 'அம்ஜத் பாக்' ஒரு பழைய கட்டடம், லஸ் சர்ச்சு ரோடின் மேற்குக் கோடியி லிருப்பது. மயிலாப்பூரின் இந்தப் பாகத்திற்குக் 'காட்டுக் கோயில்' என்று பெயர். அந்தப் பெயர் வந்ததற்கு ஒரு காரணக் கதையும் உண்டு.

போர்ச்சுகீஸியர் முதன் முதல் இந்தியாவில் குடியேறிய காலம். ஒரு சிறு போர்ச்சுகீஸியப் கப்பல் சென்னைப் பக்கம் வந்தது. நடு இரவு, மையிருட்டு. கடலில் பெரியதொரு சுழல் காற்று வீசிக்கொண்டிருக்கிறது. கொந்தளிப்பு சொல்லத் தாமில்லை. மலை போல் எழும் அலைகள் கப்பலின் மேல்தளத்தைத் தொட்டன. வந்த கப்பல் துறைமுகத்தை அடைய முடியவில்லை. கரையிருப்பதும் கண்ணுக்குப் புலனாகவில்லை. கன்னி மேரியைப் பிரார்த்தித்துக்கொண்டனர் கப்பலோட்டிகள். "நல்லபடியாகக் கரை சேர்த்தாயானால், அன்னையே! இறங்கும் இடத்தில் உனக்கொரு ஆலயம் நிறுவுகிறோம்" என்று நேர்ந்துகொண்டனர். உடனே ஒரு ஜோதி மேற்கே தோன்றிற்றாம். அதையே கலங்கரை விளக்காக மதித்து அந்த ஜோதி தோன்றிய திசையில் கப்பலைச் செலுத்தினார்களாம். 'ஸாந்தோம்' கடற்கரை

தெரிந்தது. கப்பலை விட்டுப் படகுகளில் இறங்கிக் கரை சேர்ந்தனர். ஜோதி மேற்குத் திசையில் நேராக உள்ளே சென்றதாம். ஜோதியைப் பின்தொடர்ந்து சென்றனர், உயிர் தப்பிப் பிழைத்த அந்தப் போர்ச்சுகீஸியப் பிரயாணிகள். ஜோதி மறைந்த இடத்தில் கன்னி மேரியின் ஆலயம் நிறுவப்பட்டதாம். இதுதான் 'காட்டுக் கோயிலின்' கதை.

காட்டுக் கோயில் உண்மையில் காட்டுக் கோயிலாகத்தான் இருந்தது, நாங்கள் புதிதாகக் குடிவந்தபோது. அரை மைல் தூரத்திற்கு ஒரு பங்களா. அதைச் சுற்றிக் 'கொடுக்காய்ப்புளிக்'காடு. லஸ் ரோடு இரு சாரியிலும் லந்தானு முள் வேலி. ஒவ்வொரு தோட்டத்திலும், மூன்று நான்கு குட்டைகள், குட்டை நிரம்பத் தவளைகள். இலந்தை, விளா, அத்தி, ஆல், அரசு முதலிய மரங்கள் யதேஷ்டம். அங்கங்கே மூங்கில் புதர்களும் உண்டு. எங்கள் தோட்டத்தில், ஒரு குன்றிமணி மரமும் இரண்டு மூன்று சந்தன மரங்களும் எங்களுக்கு மகிழ்ச்சியையும் வியப்பையும் அளித்தன. இரவில் ரோட்டில் நடமாட்டம் இராது. மாலை 6 மணிக்குப் பிறகே ஜனங்கள் நடமாடப் பயப்படுவார்கள். தப்பித் தவறி யாராவது ஸ்திரீகள் நடமாடினால் வழிப்பறிதான்!

தோட்டத்திலோ பாம்புகளின் சஞ்சாரம்; பாம்பு அடிப்பதுதான் வேலை எங்கள் பாராக்காரனுக்கு! இரவில் நரிகள் ஊளையிடும். மழைக் காலங்களில் தவளைகள் 'வேதகோஷம்' நடத்தும்.

லஸ் ரோடுக்கு அந்த நாளில்—ஏன்? இப்போது கூட—அலாதி மதிப்புண்டு. செல்வச்சீமான்களும் சீரும் சிறப்பும் சம்பாதித்த சிரேஷ்டர்களும்தான் அங்கு வசித்து வந்தனர். இந்த ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காகக் கிளம்பிவிட்டால் இருபுறமும் பெரிய மனிதர்களின் பங்களாவைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியாது; அப்போது அவை அதிகமில்லை. ராஜா ஸர் டி. மாதவராயரும், ஸர் வி. பாஷ்யமையங்காரும் எதிரும் புதிருமாய் 'மாதவபாக்'கிலும் 'லக்ஷ்மீ விலாஸ்'த்

திலும் குடியிருந்தனர். பக்கத்தில் துபர்ஷி டேரி வேங்கட்சாமி நாயுடுவின் குடும்பத்தார்ருக்குச் சொந்த மான 'லஸ் ஹெற்ளஸ்'. இதற்கு அப்புறம் வி. கிருஷ்ண ஸ்வாமி ஐயரும் பி. ஆர். சுந்தரமையரும் வாழ்ந்த வீடுகள். இன்னும் சிறுதூரம் சென்ருல் குட்டைக்கு அடுத்தாற்போல் திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸ ராக வையங்காரின் பங்களா. இதையும் தாண்டிப் போனுல் பிரபல பாரிஸ்டர் நார்டன் துரை தங்கியிருந்த 'நார்டன் லாட்ஜ்' தென்படும். இதற்குப் பக்கத்தில்தான் என் தந்தையார் வாங்கிய 'அம்ஜத் பாக்'. தெருக்கோடியில் ஸர். வி. ஸி. தேசிகாச்சாரியாரின் 'பத்ம விலாஸ்'த்தைக் காணலாம். கொஞ்சகாலம் ஸர் எஸ். சுப்ரமணிய ஐயரும் இங்கு வாழ்ந்திருந்தார்.

முதலில் இந்தப் பங்களாக்களில் பெரும்பகுதி ஆங்கி லேயர்களுக்கே சொந்தமாக இருந்தன. சென்ற 70 ஆண்டுகளாகத்தான் நம்மவருக்கு இவை சொந்தமாக ஆரம்பித்தன. அட்வகேட்-ஜனரலாக இருந்த காலத் தில் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரும் ஸ்ரீ டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியாரும் இங்கு வாசம் செய்தனர்! ஸர் கே. ஸ்ரீநிவாஸையங்காரும் பிறகு இங்கே குடி புகுந்தார். அந்தக் காலத்தில் அவரும் என் தந்தையார் போல் சட்டத் துறையில் பிரபலமாக இருந்தார். என் தந்தையும் அவரும் ஏறக்குறைய எல்லா வ்ழக்குகளிலும் எதிர் எதிராக ஆஜராவது வழக்கம். என் சித்தப்பாவான ஸ்ரீமான் எஸ். வேங்கடேசையங்கார் ஸர் கே. ஸ்ரீநிவாஸையங்காரின் இளைய புதல்வியை மணந்திருக்கிருர். இதற்குப் பல வருஷங்கள் சென்ற பின்பு ஸர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயர் முதலா னோர் இந்த ரோட்டுக்கு வந்து சேர்ந்தனர். அந்தக் காலத்தில் லஸ் ரோடு பல பிரபலஸ்தர்களைப் படைத் துப் பெயருக்கும் புகழுக்கும் மட்டுமின்றி, பிறர் பொரு மைக்கும் இடமாக இருந்தது எனலாம். பொருமை ஏன் இருக்காது? ஒருவர்பின் ஒருவராக அட்வ்கேட்-ஜனரல் பதவிக்கு உயர்ந்த மூன்று பிரபல வக்கீல்களும்

(ஸர் வி. பாஷ்யமையங்கார், ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவா ஸையங்கார், ஸர் கே. ஸ்ரீநிவாஸையங்கார்) வசித்திருந் தனரல்லவா? பரோடா சமஸ்தானத்தில் பிரதம மந்திரி பதவி வகித்த இருவரும் (ராஜா ஸர் டி. மாதவ ராவ், திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸ ராகவையங்கார்) கூட இங்கேதான் வாழ்ந்திருந்தனரல்லவா? சென்னை ஹைகோர்ட்டை அலங்கரித்த நீதிபதிகளில் ஐவரும் (ஸர் எஸ். சுப்ரமணிய ஐயர், ஸர் வி. பாஷ்யமையங்கார், வி. கிருஷ்ணசாமி ஐயர், பி. ஆர். சுந்தரமையர், ஸர் கே. ஸ்ரீநிவாஸையங்கார்) இங்கேதான் குடியிருந்தனர் அல்லவா?

பங்களாவை இருபதினாயிரத்துக்கு வாங்கினார் தகப்பனார்; மேலே இருபதினாயிரம் போட்டுப் புதுப் பித்தார். 'சேற்றுக் கட்டட'த்தை யெல்லாம் சிமிட்டுக் கட்டடமாக்கினார். காரைத் தரை யெல்லாம் கல்தள மாக்கினார். இந்தக் கட்டடம் முன்பு டி ஸில்வா என்ற கனவானுக்குச் சொந்தமா யிருந்தது. பல கை மாறிக் கடைசியில் ஒரு மகம்மதியப் பெண்ணுக்குச் சொந்தமாகி 'அம்ஜத் பாக்' என்று பெயர் பெற்றது. அவளிடமிருந்து ஒரு முதலியாருக்குச் சொந்தமாகிக் கடைசியில் தகப்பனார் வசமாயிற்று.

* * *

"அம்ஜத் பாகு"க்கு வந்ததும் தகப்பனார் தம் தொழில் துறையில் முதன்மையாக விளங்கினார். அந்தக் காலத்திற் கேற்ற ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தோம். ஆடம்பரம் என்றால் பகட்டான, வெளி டம்பத்திற்கான, முறைகள் என்பதல்ல, தேக சௌக்கியத்திற்கும், வசதி அந்தஸ்து களுக்கும் ஏற்ற உயர்தர வாழ்க்கை என்பதுதான் தாத் பரியம்; அத்தகைய உயர்தர வாழ்க்கை நடத்தி வந் தோம்.

தகப்பனார் உடுப்புத் தைத்தால் ரூபாய் ஆயிரத் திற்குக் குறையாது; மோஸெஸ் உடுப்புகள்தாம் எல்லாம். ஆனால் அப்பேர்ப்பட்ட உடுப்பை விரும்பி ஆர அமர அணிந்து கொள்வதுண்டா? அதுதான் இல்லை.

கடிகார முள் பத்து காட்டும் வரையில் ஆபீஸ் அறையிலே கேஸ் கட்டுப் படிப்பு, அல்லது டிராயிங் ரூம் ஹாலில் பேச்சுக் கச்சேரி. பிறகு அவசர ஸ்நானம். அதற்குள் சமையல்காரன் ரஸம், குழம்பு - சாதங்களைக் கலந்து கிண்ணங்களில் தயாராக ஏந்தி நிற்கவேண்டும். நின்று கொண்டே, (நிலைக்கண்ணாடிக்கு முன்னே) ஒரு கை கோட்டுப் பித்தானை மாட்ட, ஒரு கை சாப்பாட்டை வாய்க்குள் செலுத்திக் கொண்டிருக்கும். யாராவது ஒரு 'அப்ரெண்டிஸ்' வக்கீல் தலைப்பாகையைக் கட்டித் தயாராக வைத்திருப்பார். கால் பூட்ஸை மாட்டிவிடுவான் வேலையாள். 'டை'யை முடித்து விடுவாள் என் தாயார்.

தகப்பனார் கோர்ட்டுக்குப் புறப்பட்டுப் போனதும் மழை பெய்து ஓய்ந்ததுபோல் ஆகிவிடும் வீடு. காந்தியம் வந்தபிறகுதான் 'அப்பாடா' என்று ஆச்சு எங்களுக்கும், அவருக்கும்கூட. காந்திஜிமீது கோபம் பிறந்தும் அந்தப் பழைய கோட்டு, டை, பூட்ஸ் மீது மோகம் பிறக்காதது ஒரு நல்ல காலம் என்றே தோன்றியது.

காந்திஜியையும் காங்கிரஸையும் விட்டுப் பிரிந்துபோன காலத்திலும் பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பாதது, மகாத்மாவின் சந்திப்பால் ஒரு திட்டமான மாறுதல் இவர் வாழ்க்கையில் ஏற்பட்டு விட்டதென்பதைக் காட்டுகிறது.

* * *

மாஸம் பதினாயிரத்திற்குச் சற்றும் குறையாத வரு வாயிலும் தாமே பூட்டிச் சாவி வைத்துக்கொள்ளும் வழக்கமோ, வரவு செலவுக் கணக்குப் பார்க்கும் வழக் கமோ இவரிடம் கிடையாது. குடும்ப நிர்வாக மெல்லாம் தாயார் பொறுப்பு; தவறினால் எங்கள் பொறுப்பு. பீஸ் பண வருவாய்க் கணக்கு, மற்றும் வீட்டுக் கணக்கு இவை எல்லாம் தாயார்தான் தூமாஸ் தாவின் உதவியைக்கொண்டு கவனித்து வருவாள். தாயாருடைய காரிய நிர்வாகத்தில் தகப்பனாருக்குப் பூர்ண நம்பிக்கை. அவளுடைய திறமையைச் சுட்டிக் காட்டி எனக்கு அடிக்கடி புத்திமதி கூறுவார். சேக்

புஸ்தகம் மட்டும் தகப்பனுர் கையில் இருக்கும். அதில் கிழித்திருந்த தாள்களுக்கு விவரர் கூட இருக்காது.

இவர் தாராளமாக வழங்கிய கொடைகள் பெரும் பாலும் வெளி மனிதர்கள் மூலமாகத்தான் எங்களுக்குத் தெரியவரும்.

சென்னை யூனிவெர்ஸிடியார், தம் மாமனுர் ஸர் வி. பாஷ்யமையங்காரின் ஞாபகார்த்தமாகத் தங்கப் பதக்க மொன்றைப் பிரதி வருஷமும் சட்டப் பரீக்ஷையில் முதல் வராகத் தேறுபவருக்குப் பரிசாக வழங்க ஏற்பாடு செய் தார். பண்டித மதனமோகன மாளவியா ஆரம்பித்த ஹிந்து யூனிவெர்ஸிடிக்கு ரூபா 10,000 நன்கொடை கொடுத்தார்.

மற்ருெரு பதினுயிரம் ரூபாயைச் சென்னை யூனிவெர் ஸிடியார் கோபாலகிருஷ்ண கோகலே ஞாபகார்த்தமாய் வருஷாவருஷம் பொருளாதர்ர சாஸ்திர சம்பந்தமாய் உபந்யாஸங்களை நடத்தவேண்டும் என்பதற்காக நன் கொடை யளித்தார்.

காந்திஜி கதர்ப் பிரசாரம் ஆரம்பித்தபோது கதருக் காக் ரூபா 10,000 கொடுத்தார். இன்னும் பல சில்லறை நன்கொடைகள் கொடுத்திருக்கிருர். அவைகளுடைய விவரம் எங்களுக்குத் தெரியாது, யாருக்கும் தெரியாது.

கடைசியில் இவர் ராமநாதபுரத்தில் தாம் பிறந்து வளர்ந்த வீட்டைச் சீர்ப்படுத்திப் பொதுஜன உபயோ கத்திற்கான ஒரு ஹாலையும் வாசகசாலையையும் அமைக் கும்படி உயில் மூலம் எழுதி வைத்திருந்தார். ரூ. 25,000 செலவு செய்து ஒரு ஹாலைக் கட்டி வாசக சாலையையும் ஏற்படுத்திருர் என் சகோதரர் எஸ். எஸ். பார்த்தசாரதி, சமீபத்திலே.

* * *

பிரயாணம் புறப்பட்டால் இவருக்கென்று தனியாக வைக்கப்பட்டிருக்கும் சன்ன அரிசி, பருப்பு, நெய்; வடகம், ஊறுகாய் முதலியன எல்லாம் கூடவே புறப்படும். வேளாவேளைக்குக் காப்பி, ஆகாரம், டிபன் இவை யாவும் ரயிலிலேயே 'குக்கரி'லோ, 'ஸ்பிரிட் லாம்பி'லோ தயார்

செய்ததாக இருக்க வேண்டும்; அல்லது வீட்டிலே தயாரித்ததாக இருக்க வேண்டும். ஹோட்டலிலிருந்து வரவழைக்கப்பட்ட காப்பி, டிபன் சாப்பாட்டை இவர் தொட்டே பார்க்கமாட்டார். இந்த வழக்கம் மாமனார் வீட்டிலிருந்து வந்த சீதனச் சொத்து!

சொந்த நாட்டில் இந்த ரீதியிலே பிரயாணம் செய்து வந்தவர் காங்கிரஸில் ஈடுபட்ட பிற்காலத்தில் சீமைக்குப் புறப்பட்டுப் போகும்போது, "எனக்கு ஒரு வேலையாளும் வேண்டாம். நான் தனியாகப் பிரயாணம் செய்யப் போகிறேன். எல்லாம் நானே சமாளித்துக்கொள்வேன்!" என்று வீறுப்புப் பேசி, அதன்படியே மூன்று மாதம் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பினார் என்றால், எங்களுக்கு எவ்வளவு ஆச்சரியமாக இராது?

ஆனால் இவருக்கு எப்பொழுதுமே அதிக வேலையாள் வேண்டுமென்ற தேவையில்லை. காங்கிரஸ் வேலையாகவோ அல்லது தொழில் நிமித்தமாகவோ இவர் சதா சுற்றுப் பிரயாணம் செய்துவந்த சமயங்களிலெல்லாம் இவருடன் கூடச்சென்று இவருடைய சௌகரியங்களைப் பூராவும் தானே கவனித்து வந்தவன் ஒரு பழைய பரிசாரகன்தான். பிற்காலத்தில் நாங்கள் எவ்வளவு சொல்லியும்கூட இவர் ஒரு 'பிரைவேட் செக்ரெடரி'யையோ தனிக் குமாஸ்தாவையோ உடன்கூட்டிக் கொண்டு போக மறுத்துவிட்டார்.

* * *

அந்நாட்களில் பெரிய தோட்டக் கச்சேரிகள் அடிக்கடி நடக்கும் "அம்ஜத் பாக்"கில். எல்லாம் ஹாரிஸன் விநியோகந்தான். தென் ஆப்பிரிகாவிலிருந்து வந்த காந்திஜிக்கு அளித்த தோட்டக் கச்சேரி மட்டும் விலக்கு.

நாங்களும் அடிக்கடி "கவர்ண்மெண்டு ஹௌஸ்" 'லேடீஸ் பார்ட்டி'களுக்குப் போவதுண்டு. எங்கள் அகத்தில் லேடி பெண்ட்லண்டுக்குக்கூட ஒரு 'லேடீஸ் பார்ட்டி' நடத்தியிருக்கிறோம். வெள்ளையர்களைத் 'தெய்வப் பிறவி' என்று கருதாவிட்டாலும் ஏதோ ஒரு உயர்ந்த ரக மனிதப் பிறவி எனக் கருதி வந்த காலம் அது. வீட்டிலே ஓர் ஆங்கில உபாத்தியாயனி எனக்கு.

ஆனால் நான் படித்தால் மட்டும் போதுமென்று தகப்பனார் இருக்க மாட்டார். பெண்குலத்திற்கான வீட்டுவேலை, சமையல் வேலை, தையல், பாட்டு ஆகிய வித்தைகளும் நான் கற்றுக்கொள்ள வேணுமென்று அடிக்கடி வற்புறுத்துவார். "சும்மா கண்ணைக் கெடுத்துக்கொண்டு புஸ்தகம் படிக்காதே! வீட்டு வேலையைக் கவனி, தோட்டத்தைக் கவனி" என்றெல்லாம் சொல்லுவார். என் தந்தையார் காந்தியடிகளைச் சந்தித்துக் காங்கிரஸ் வேலையில் தீவிரமாக ஈடுபடுவதற்கு முன்னால் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை இது.

* * *

மகாத்மாவைச் சந்திப்பதற்குப் பல வருஷங்களுக்கு முன்பே அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் உழைத்து வந்திருக்கிறார். அந்நாளில் தொழில் முறையிலும், மற்றத் துறைகளிலும் பிரசித்தி பெற்றிருந்த வழக்கறிஞரான வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரை இவர் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டிருந்தார்; தொழில் முறையில் மட்டுமல்ல, அரசியல் துறையிலும் மற்றத் துறைகளிலும்கூட. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஸ்ரீநிவாஸையங்காரைச் "சீமா" என்று அன்புடன் அழைப்பார். 1908-ல் சென்னையில் நடந்த காங்கிரஸ் கூட்டத்திற்குத் தலைமை வகித்த வங்க வழக்கறிஞர்களில் முதல்வரான ஸர் ராஷ் பிஹாரி கோஷிடம் இவரை வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அறிமுகப்படுத்தும்போது, "ஸ்ரீநிவாஸையங்கார் ஸர் பாஷ்யமையங்காரின் மாப்பிள்ளை, சில விஷயங்களில் மாமனாரைக் காட்டிலும் சிறந்தவர்" என்றாராம்.

சமூகச் சீர்திருத்தக்காரர்கள் கோஷ்டியில் அவ்வளவு தீவிரமாக இவர் சேர்ந்துகொள்ளாவிட்டாலும், அந்தச் சீர்திருத்தங்களை ஓரளவு இவர் ஆதரித்து வந்தார். சாரதா-சட்டம் அமலுக்கு வருவதற்கு வெகு காலத்திற்கு முன்பே இவர் ருதுமதி விவாகத்தை ஆதரித்து எழுதினார். ஸர் சங்கரன் நாயர் முதலானவர்களின் கட்சியில் இவரும் சேர்ந்துகொண்டு

சில காலம் வேலை செய்து வந்தார். ஸர் சங்கர நாயரிடமும் இவருக்கு அதிக அபிமானம் இருந்தது. வக்கீல்கள் பொது வாழ்வில் பிரவேசித்து நாட்டுக்கு நன்மை புரிய முடியும் என்பதற்கு அவரே தமக்கு உதாரணமாக இருந்தார் என்று இவர் சொன்னதுண்டு. பிறகு ஸர் சங்கரன் நாயர் முதலானவர்கள் வகுப்புவாதிகளாக மாறினது பிடிக்காமல் போகவே, அந்தச் சீர்திருத்த-கோஷ்டியை விட்டு விலகிக்கொண்டார்.

* * *

மணி ஐயர்—ஜஸ்டிஸ் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர்—பெயரைச் சொன்னாலேயே இவருக்கு அதிக மகிழ்ச்சி ஏற்படும். அப்பெரியாரின் குணாதிசயத்தையும் தாராள புத்தியையும் எப்போதும் பாராட்டிப் பேசுவார். அது தவிர, அவரும் தம்மைப்போல் மதுரையைச் சேர்ந்தவர் என்ற ஒரு தனிப் பெருமையும் உண்டு.

சென்னை ஸெனெட் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சுமார் நான்கு வருஷகாலம் அதில் ஒரு முக்கியஸ்தராக நடந்துகொண்டிருக்கிறார். சென்னையிலே 1914-ல் காங்கிரஸ் கூட்டம் நடந்தபோது இவர் வரவேற்புக் கமிட்டியின் காரியதரிசியாக இருந்து அலுவல்களைக் கவனித்தார்.

மற்றொரு காரியதரிசியாக இருந்த ராவ்பகதூர் ஜி. ஏ. நடேசையருக்கு இவர் அப்போது எழுதிய கடிதம் ஒன்றிலிருந்து இவர் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் கூட எப்படிச் சிரத்தையுடன் தமது கவனத்தைச் செலுத்தி வந்தார் என்பது தெளிவுபடும் :—

லஸ், மயிலாப்பூர்
10–12–1914

அன்புள்ள ஸ்ரீ நடேசனுக்கு,

டிக்கெட்டுகளில் காரியதரிசிகளின் பெயர் இருக்க வேண்டாம என்பதையும் வரவேற்புக் கமிட்டித் தலைவர் பெயர் மட்டுமே அதில் இருக்க வேண்டும் என்பதையும் நான் தங்களிடம் அறிவிக்க மறந்துவிட்டேன். சென்ற காங்கிரஸின்போது

இதேமாதிரித்தான் நடந்தது. ஆகவே தாங்கள் அச்சிடும் டிக்கெட்டுகளிலும் ஸ்ரீ. கோபால மேனன் டிக்கெட்டுகளிலும் காரியதரிசிகளின் பெயர்களுக்குப் பதிலாகத் தலைவர் பெயரையே சேர்த்துக் கொள்ளவும்.

அழைப்புக் கடிதத்தில் ஒருவர் பெயரும் தேவையில்லை. யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். பெயரைச் சேர்க்க வேண்டாம் என்றே எல்லோரும் என்னிடம் சொன்னார்கள். அந்த டிக்கெட்டுகளில் நம் இருவர் பெயரும்கூட வேண்டாம்.

நான் நாளை, பிற்பகல் 12-மணிக்கு மதுரைக்குப் போய், செவ்வாய்க்கிழமையோ புதன்கிழமையோ திரும்பி வருவேன்.

உங்களது ஊக்கமும் உத்ஸாகமான உழைப்பும் என் பொறுப்பு விஷயமாகச் சில சமயம் என்னுள் ஏற்பட்டுவரும் சங்கடத்தைப் போக்கடிப்பது பற்றி நான் தங்களுக்கு அதிகம் நன்றி காட்டவேண்டும்.

தங்கள் உண்மையான,

எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

* * *

அன்னி பெஸண்ட் அம்மையார் 'ஹோம் ரூல்' இயக்கம் ஆரம்பித்தபோது என் தந்தையின் உள்ளம் அந்த இயக்கத்தை ஆதரித்தது; ஆனால் அப்போது 'அட்வகேட் ஜெனரல் பதவியை வகித்து வந்த படியால் கட்டுப்பட்டிருந்தார். மேலும், முதலிலிருந்தே இவருக்குத் 'தியாஸபிஸ்ட்' கொள்கைகளில் அவ்வளவாகப் பிடித்தமில்லை. அத்துடன் அதன் ரகஸ்ய சங்கங்களின் கொள்கைகளும், ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கேஸும் சேரவே, அன்னிபெஸண்ட் அம்மையார் என்றால் இவருக்குக் கட்டோடு பிடிக்காமலே போய்விட்டது. 'திவ்ய ஞான' சங்கத்தாருடன் சண்டை போட்டுக் கொண்டு வெளிவந்துவிட்ட டாக்டர் நஞ்சுண்ட ராவ்



அட்வகேட் ஜெனரல்

இவருக்கு மிகவும் வேண்டியவர். இவரிடம் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்த படியால் அவர் பேச்சின் மூலம் அந்த அம்மையாரிடம் இவருக்குப் பகைமை யுணர்ச்சியே ஏற்பட்டுவிட்டது எனலாம்.

* * *

1916-ம் வருஷ ஆரம்பத்திலேயே இவர் அட்வகேட் ஜெனரல் பதவிக்கு வந்தார். முதலில் தாற்காலிகமாக நியமிக்கப்பட்டுப் பிறகு நிரந்தரமாகப் பதவிக்கு வந்தார். இவர் நியமனமான செய்தி வெளியாகியவுடனேயே சேலத்திலிருந்த ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் இவரை வாழ்த்திக் கடிதம் எழுதினார். தேசத்தின் தொண்டு கிழவர் எனப் பிரசித்திபெற்ற அப்பெரியார் அப்போது இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பராக இருந்தார். நாட்டில் அவருக்கு இருந்த செல்வாக்கை அளவிட முடியாது. என் தந்தையார் காலதாமதமின்றி, தம்மைவிட வயசில் பெரியவரும் தமது மதிப்புக்குப் பூரண அருகதை வாய்ந்தவருமான அந்தத் தேச பக்தருக்குத் தமது நன்றியைத் தெரிவித்துப் பதில் போட்டார்:—

லஸ், மயிலாப்பூர்.
7—1—1916

அன்புள்ள ஸ்ரீ விஜயராகவாச்சாரியாருக்கு,

தங்கள் வாழ்த்துக்கு வந்தனம் பல. என் நண்பர்களுக்கு ஏற்படும் சந்தோஷம் எனக்குப் பெருமையை விளைவிப்பதுடன் என்னை மேலும் உத்ஸாகப்படுத்துகிறது.

என்னிடம் தாங்கள் மிக்க அன்புடன் இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் கடிதத்தைப் படித்தபின் பதவியை ஒப்புக்கொண்டதால் நான் தவறுதலாக நடந்துகொள்ளவில்லை என்ற கருத்து என்னுள் ஊர்ஜிதமாகிவிட்டது.

தங்கள் உண்மையுள்ள,
எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார்.

ஹைகோர்ட் ஜட்ஜ் பதவி கொடுக்கப்படலாம் என்ற ஒரு வதந்தி இருந்தது. ஆனால் அப் பதவியை வகிப்பதில் தகப்பனாருக்குச் சற்றும் இஷ்டமில்லை.

நாளடைவில் கவர்னரின் எக்ஸிக்யுடிவ் கவுன்ஸில் மெம்பர் பதவி இவருக்கு அளிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கெல்லாம் இடம் இருந்தால்தானே! நாலே வருஷத்திற்குள் ஸர்க்கார் உத்தியோகம் கசந்துபோய் விட்டது. இதன் மத்தியில், இவருக்கு ஸி. ஐ. ஈ. (C. I. E.)பட்டம் அளிக்கப்பட்டது.

1919-ம் வருஷம் இவர் கோவையில் நடந்த சமூகச் சீர்திருத்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

அட்வகேட் ஜெனரல் பதவி ஏற்றதும் முறைப்படி இவர் மாகாணச் சட்டசபையில் ஸர்க்காரின் நியமன அங்கத்தினரானார். இது அக்காலத்தில் இருந்துவந்த சம்பிரதாயம். அப்போது சட்டசபையில் ஸர்க்கார் இஷ்டத்திற்கு மாறாகத் தமது அபிப்பிராயங்களை எடுத்துப் பன்முறை பேசியுள்ளார். ஸர்க்காரின் சட்ட ஆலோசகர் என்ற ஹோதாவிலிருந்தும் தம் அபிப்பிராயத்தைத் தைரியமாக வெளியிடக் கொஞ்சமும் பின்வாங்கமாட்டார். உள்ளுக்குள்ளே இவருக்கும் சர்க்காருக்கும் அடிக்கடி 'டக் ஆப் வார்' (Tug of war)தான் என்று சொல்லலாம்.

'இவ்வளவு தீவிர புத்திசாலியான இவர் நம் பக்கம் இருப்பது நலம். கொஞ்சம் தாஜா பண்ணிப் பட்டம் பதவி சில அளித்துத் திருப்தி செய்துவிட்டால், இவர் என்றும் நமக்கு தாஸாநுதாஸனாக இருப்பார்!' என்று ஸர்க்கார் எதிர்பார்த்திருந்தால் அது பெரிய ஏமாற்றத்தை அடைந்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.

தகப்பனாரைப் பொறுத்தமட்டில், இவர் தம் சொந்த அபிப்பிராயங்களுக்குக் கொடுத்திருந்த மதிப்பு வேறு எவருடைய அபிப்பிராயங்களுக்கும் கொடுக்கவில்லை. தம் அபிபபிராயஙகளுக்கு முன்னே எந்தப் பட்டம் பதவியும் இவருக்கு ஒரு பொருட்டாக மாட்டாது என்று நிச்சய

மாகச் சொல்லலாம். இவர் தம் வாழ்க்கை பூராவும் இதே கொள்கையைத்தான் அனுசரித்து வந்திருக்கிறார், இதே மனப் போக்கைத்தான் காட்டி வந்துள்ளார்—இது பல சம்பவங்களிலிருந்தும் ஊகிக்கத் தக்கது.

பிற்காலத்தில் மகாத்மாவுடன் அபிப்பிராய பேதங் கொண்டு காங்கிரஸையும், காங்கிரஸ் சம்பந்தமான உயர்ந்த ஸ்தானங்களையும் துறந்து, தலைவர்களின் விரோதத்திற்கும், ஜனங்களின் துரபிப்பிராயத்திற்கும், 'சண்டைக்காரன், தேசத் துரோகி!' என்ற வசை மொழிகளுக்கும் பாத்திரமானதற்கும், இதே முரண்டுதான், இதே மனப்பான்மைதான் காரணம். சிறுபொழுதிலிருந்து இவருடன் கூடவே வளர்ந்துவந்த முரண்டின் விளைவு இது எனலாம்.

* * *

அந்தக் காலத்தில் தகப்பனார் அட்வகேட் ஜெனரல் ஆனது எங்களுக்கு உள்ளுக்குள்ளே ரொம்பப் பெருமைதான். இரண்டு வில்லைச் சேவகர் எப்பொழுதும் வாசலிலே காத்திருப்பார்கள் அல்லவா? ஆனால் அதை வெளிக் காட்டிக்கொள்ளவும் சங்கோஜம்; சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. தகப்பனார் மட்டும் அதை வெகு சகஜமாகவே பாவித்தார். எந்த ஸ்தானம் கிடைத்தாலும் சகஜமாகவே நினைப்பது இவர் சுபாவம். எப்பேர்ப்பட்ட பதவியிலும் தமக்கு உரிமையுண்டு என்பது போலவே பதற்றம் இல்லாமல் நடந்து கொள்வார்.

தம்முடைய காரியத் திறனிலும் புத்தியிலும் சாமர்த்தியத்திலும் இவருக்கு அபார நம்பிக்கை இருக்கத்தான் செய்தது. தம்முடைய வெற்றிகரமான செயல்களைப் பற்றி எல்லாரிடமும் பேசிக் களிப்பெய்துவார். ஒரு குழந்தைபோலப் பெருமை அடித்துக் கொள்வார். அதனால் கர்வம் கொண்டு நடந்து கொண்டார் என்பதில்லை. எப்போதும்போல் சகஜமாக எல்லோருடனும் பேசிப் பழகத்தான் செய்தார்.

* * *

அன்னி பெஸன்ட் அம்மை 'ஹோம்—ரூல்' இயக்கத்தை நடத்திவந்தபோது அவருக்கு எதிராக என் தகப்பனார் பத்திரிகைச் சட்ட வழக்கொன்றில் பேச வேண்டி யிருந்தது. இருவருக்கும் மத்தியில் பலத்த வாக்கு வாதங்கள் நடந்தன பத்திரிகைகள் வாயிலாக. மறைமுகமாகவும் பகிரங்கமாகவும் அப்பொழுது தாக்கிப் பல மொட்டைக் கடிதங்கள் வந்தன இவரைப் பய முறுத்தி. "உயிருக்கே உலைவைத்து விடுவோம்!" என்ற மிரட்டல்களும காணப்பட்டன சில கடிதங்களிலே. ஆனால் இவர் அவைகளுக்குச் சற்றும் அசையவில்லை.

மிஸஸ் பெஸன்டைக் கைது செய்யவேண்டு மென்று ஸர்க்கார் அபிப்பிராயம் கோரினபோது, தகப்பனார் அதற்கு விரோதமாக அபிப்பிராயம் கொடுத்தார். அது அப்போது கவர்னராக இருந்த பெண்ட்லண்ட் பிரபு வுக்குச் சற்றும் பிடிக்கவில்லையாம். இவருடைய அபிப் பிராயத்தைப் புறக்கணித்தே சீக்கிரத்தில் பெஸன்டு அம்மையாரை 'அரெஸ்ட்' செய்ய உத்தரவு போட்டார் அந்தப் பிரபு. அன்னி பெஸன்ட் அம்மையை ஒரு சாதா ரணக் கைதி போலவே முதலில் நடத்த — அதாவது ஜெயிலில் வைக்க — விரும்பியதாம் ஸர்க்கார். ஆனால் தகப்பனார் அபிப்பிராயத்தின் பேரில், அவரை உதக மண்டலத்திலே பாதுகாப்பில் வைக்கச் சம்மதித்தார் பெண்ட்லண்ட் பிரபு என்று தகப்பனாரே எங்களிடம் சொல்லியதுண்டு. அதுமுதலே இவர் ஸர்க்கார் உத்தி யோகத்தை விட்டுவிட வேண்டுமென்று எண்ணத் தொடங்கி விட்டார்.

லார்ட் வில்லிங்டன் பிரபு பதவி ஏற்றதும் தகப்பனா ருக்குத் தம் பதவியில் இருப்பது முள்மேல் இருப் பாகவே தோன்றியது. இருவருக்கும் அடிக்கடி அபிப் பிராய பேதங்கள் ஏற்பட்டன உத்தியோக முறையிலே. சில உத்தியோகஸ்தர்கள்போல் தகப்பனார் எல்லா கவர்ன்மெண்ட் கொண்டாட்டங்களுக்கும் போகமாட்டார். சில சமயங்களில் கவர்னரிடமிருந்து பிரத்தியேக

அழைப்பு வந்தாலன்றித் தாமாக அவரைப் பார்க்கப் போகமாட்டார். கொஞ்ச காலமாக வெள்ளையர்கள் என்றாலே அலட்சியம். அத்தகைய மனப்பான்மை தகப்பனார் மனசில் வளர்ந்துகொண்டே வந்தது.

சில விஷயங்களில் இந்தியர்களைவிட ஐரோப்பியர்கள் சிறந்தவர்கள் என்ற அபிப்பிராயம் உள்ளுக்குள்ளே இருந்த போதிலும்கூட, அவர்கள் நம்மை ஏன் தாழ்ந்தவர்களாகக் கருதவேண்டும்? — என்று எண்ணி அவர்களுக்குச் சரி சமானமாகவே தாமும் நடத்தப்பட வேண்டுமென்று விரும்புவார். ஆகையால் ஐரோப்பியர் இந்தியர்களுக்குச் செய்யும் மரியாதைக் குறைவான காரியங்களைப் பலமாக ஆக்ஷேபிப்பார்.

தினம் ஒரு முறை என் தாயாரிடம், "இந்த வில்லிங்டன் உபத்திரவம் எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கவேண்டி யிருக்கிறது! இந்த வேலையை விட்டுத் தொலைத்துவிடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே யிருப்பார்.

* * *

ஆறு மாதத்திற்குப் பிறகு பெஸன்ட் அம்மை விடுதலை பெற்றார். அப்பொழுது காந்தி-இயக்கம் ஆரம்பமாயிருந்தது தேசத்திலே. முதலில் இந்த இயக்கத்தைச் "சட்ட சம்பிரதாயங்களுக்கு முரணானது" எனக் கருதியது இவருள்ளம். எனினும், மெள்ள மெள்ள எப்படியோ இதில் ஒரு பற்று உண்டாகிவிட்டது.

1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஜலியன்வாலாபாக் சம்பவம்; பஞ்சாப்பில் ராணுவச் சட்டமும் இரவு நடமாட்டத் தடையுத்தரவும் அமலுக்கு வந்தன அநாவசியமாக. அந்த விளைவின் விவரம் தென்குமரிவரை எட்டிவிட்டது. தேசமெங்கும் ஒரே ஹிருதயக் கொதிப்பு. தென் இந்திய தேசாபிமானிகளும் கொதித்தெழுந்தனர்; பட்டம் பதவிகள் துறக்கப்பட்டன. ஸர். ஸி. சங்கரன் நாயர் போன்ற ஒரு மிதவாதிக்கும் வைஸிராய்-கவுன்ஸில் பதவியைத் துறக்கும் எண்ணம் உதித்தது என்றால், அப்போது நாடெங்கும் எழுந்த கிளர்ச்சி லேசானது

என்று சொல்ல முடியுமா? அந்தக் கிளர்ச்சியின் பிர பாவம், அப்பொழுது உடனே இல்லாவிட்டாலும், அடுத்த வருஷமே ஸ்ரீநிவாஸையங்காரிடமும் தன் சக்தி யைக் காட்டிவிட்டது எனலாம்.

*   *   *

ஒருநாள் என் தாயாரைப் பார்த்து, "நான் இந்த உத்தியோகத்தை விட்டுவிட நினைக்கிறேன். நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

என் தகப்பனார் சொல்லுக்கு மறுவார்த்தை சொல்வது தாயாரின் சுபாவமில்லை. அது இவருக்கும் தெரியும். எனினும் என் தாயாரிடம் தெரிவித்துவிட்டே எதையும் செய்வார். அவளிடம் கலந்து ஆலோசனையும் கேட்பார். முடிவில் இவர் அபிப்பிராயப்படியேதான் காரியங்கள் நடைபெறும். நல்லது, பொல்லாதது, எந்த விஷயமானாலும் அவளிடம் சொல்லாமல் இருக்க மாட்டார். சொல்ல வேண்டிய விஷயம் ஏதாவது இருந்தால் காரிலிருந்து இறங்கிக்கொண்டே, "எங்கே! ரெங்கநாயகி?" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே வருவார் விரைவாக. அவள் என்ன காரியமாயிருந் தாலும் சரி, அந்த விஷயத்தைக் கேட்டுத்தான் தீர வேண்டும். அது ஒரு தமாஷான நினைவாக இருக்கலாம், ஒரு மகத்தான தேசப் பிரச்னையாகவும் இருக்கலாம். இவரிடம்தான் இடம், காலம், பாத்திரம் இவைகளின் யுக்தா யுக்தங்களை அறிந்து பேசும் வழக்கமில்லையே!

*   *   *

1920-ம் வருஷம் பிப்ரவரி மாதம் ஒருநாள் கொச்சியி லிருந்து திரும்பி வந்ததும் திடீரென்று அட்வகேட் ஜெனரல் பதவியைத் துறந்துவிட்டு அச்செய்தியை என் தாயாருக்கு அறிவித்தார். அப்பொழுதே எங்கே இவர் காங்கிரஸில் சேர்ந்து ஜெயிலுக்குப் போய் விடுவாரோ என்று தாயாருக்கு ரொம்பவும் பயம் உண்டாயிற்று. ஆனால் அதை அவள் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. "வேலையை விட்டது ரொம்ப நல்லது" என்று சொல்லி விட்டாள்.

தகப்பனர் உடனே காங்கிரஸில் சேரவில்லை. ஸர்க்கார்க் கட்சியில் சேராமல் தாம் சுதந்திரமாக இருந்தால் போதும் என்று எண்ணினர். இதுவே தாம் தேசத்திற்குச் செய்யக்கூடிய பெரும் பணியாகும் என்று கருதினர். ஒத்துழையாமை-இயக்கம் இவரை வசீகரம் செய்யவில்லை. ஆதலால் யூனிவெர்ஸிடி ஸ்தானத்திற்கு வெற்றிகரமாகப் போட்டியிட்டு, மாகாணச் சட்ட சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கே சென்று ஸர்க்கார் எதிர்த் தரப்பில் மிக உக்கிரமாக் வர்தாடலானர்; எனினும் திருப்தி ஏற்படவில்லை.

* * *

1920-ம் வருஷம் திருநெல்வேலியில் மாகாண அரசியல் மகாநாடு நடந்தது. அதற்குத் தலைமை வகிக்கும்படித் தகப்பனர் அழைக்கப்பட்டார். மகா கனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரும் சத்தியமூர்த்தியும் அந்த மகாநாட்டிற்கு வந்திருந்தனர். அதற்கு முன் 1905-ல் திருநெல்வேலியில் நடந்த மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

ஐயங்கார், தம் தலைமை யுரையில் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் சேவையை வெகுவாய்ப் பாராட்டிப் பேசிவிட்டு, பஞ்சாப் படுகொலையைப் பற்றி நீண்டதொரு சொற்பொழிவாற்றினர்.

காங்கிரஸ் அரசியல் துறையில் தந்தையார் தீவிரமாகப் புகுந்தது இந்தத் திருநெல்வேலி மகாநாட்டிற்குப் பிறகுதான். அங்கேயிருந்து வெற்றிமாலையுடன் திரும்பியவர் மாகாணம் எங்கும் சுற்றிப் பல வெற்றி மாலைகளை அணிந்தார். இவர் அட்வகேட் ஜெனரலாக இருந்த போது ஸர்க்கார் இவருக்கு 'ஸி. ஐ. இ.' என்ற பட்டத்தை வழங்கி யிருந்தார்களல்லவா? இந்த மகாநாட்டிற்குப் பிறகு அதையும் துறந்தார். வீடெங்கும் விதேசி இருந்த இடத்தில் சுதேசி பரவிற்று.

கள்ளிக்கோட்டைக்குப் போயிருந்த சமயத்தில் என் தந்தையார் தமது பட்டத்தைத் துறக்க முடிவு செய்தார்.

அங்கிருந்து இதுவிஷயமாக் ஒரு நீண்ட அறிக்கையும் பத்திரிகை வாயிலாக விடுத்தார்:

"இந்தியாவின் இதர பாகங்களிலும் இந்த மாகாணத்திலும் ஸர்க்காரின் அடக்குமுறைக் கொள்கையை ஆட்சேபித்து நான் ஸி. ஐ. ஈ. பட்டத்தையும் சட்டசபை மெம்பர் பதவியையும் துறப்பது கடமையாகும். சர்வ கலாசாலைப் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் மிதமான நடவடிக்கையிலேயே நாட்டமுள்ளவன். என் போன்ற தேசியவாதிகள் எதிர்பார்க்கும் டொமினியன் அந்தஸ்தை அடையப் பூர்ண ஒற்றுமையே பிரதானம் என்பது என் கருத்து. காந்திஜியிடம் எனக்கு இன்றும் அபிப்பிராய பேதம் உண்டு. பள்ளிக்கூடம், நீதிஸ்தலம், சட்டசபை இவற்றின் பகிஷ்காரம், சட்டமறுப்பு இயக்க ஆரம்பம் ஆகியவை சம்பந்தமாக என் மனோபாவம் மாறுபட்டதான போதிலும் காங்கிரஸ் தலைவர்களும் இதர ஊழியர்களும் கைது செய்யப்பட்டிருப்பதும், நம் மாகாணத்திலும் கிரிமினல் லா திருத்தச் சட்டத்தை அமலாக்கியிருப்பதும் சட்ட சம்மதமற்ற காரியங்கள் என்பதே என் துணிபு. என் போன்ற தேசியவாதிகள் பிரஜா உரிமைகளுக்கு இவைமூலம் பாதகம் ஏற்படும் என்றே எண்ணுவர். என்னைத் தேர்ந்தெடுத்த பட்டதாரிகள் என் ராஜிநாமாவை அங்கீகரிப்பர் என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு என் நன்றி என்நாளும் உரித்தாகும்.

"மந்திரிகள் மட்டுமின்றி அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த இரண்டொருவரும் சட்ட சபையில் இந்த அடக்குமுறைக் கொள்கையை ஆதரித்தனர். கிரிமினல் லா திருத்தச் சட்டத்தை மாகாணத்தில் அமலாக்குவது பற்றி விவாதத்தை நடத்தச் சட்டசபை சம்மதித்தமையும் இதே மனப்பான்மையைத்தான் காட்டுகிறது.

"ஆகையால் இத்தகைய கொள்கையை ஒப்புக்கொண்ட சட்டசபையில் நான் உடந்தையாக இருக்க முடியாது. ஸர்க்காருடன் அடிப்படையான விஷயத்தில் அபிப்பிராய பேதம் கொண்டுள்ள நான் அந்த ஸர்க்கார்

அளித்த பட்டத்தை அணிந்திருப்பது அழகல்ல என்ற என் தீர்மானத்தை என்னுடைய ஐரோப்பிய மிதவாத நண்பர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். மூவகைப் பகிஷ்காரத்தையும் சட்டமறுப்பு இயக்கத்தையும் ஆதரிக்காத கட்சியினரும் சுதேசியத்தைப் பரப்பவும், மதுவிலக்கை விஸ்தரிக்கவும், தேசியக் கல்வி முறையை நிலைநாட்டவும், பிராம்மணர் — பிராம்மணர் அல்லாதார் சச்சரவுகளை அகற்றவும், தீண்டாமையைத் தொலைக்கவும், ஹிந்து-முஸ்லிம் வேற்றுமை மறைய வழி தேடவும் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

(17—12—1921.)

*　　*　　*

கதர்ப் பிரசாரம், நூல் நூற்பது முதலிய காங்கிரஸின் நிர்மாணத் திட்டங்களினால் சுயராஜ்யம் வரும் என்ற நம்பிக்கை அப்போதும் இவருக்கு இல்லை. ஆயினும் கதர் உடுத்திக்கொண்டார். தமிழில் பேசத் தலைப்பட்டார் பொதுக் கூட்டங்களிலே.

ஜாதி மத பேதம் பாராட்டும் வழக்கம் ரொம்ப நாளாகவே கிடையாது, இவர் ஏற்கெனவே சமூகச் சீர்திருத்த விஷயமாகக் கொண்டிருந்த அபிப்பிராயம் காரணமாக. ஆதலால் ஹரிஜன முன்னேற்றத்தைக் காங்கிரஸின் கொள்கைகளில் ஒரு முக்கிய அம்சமாகவே இவரும் கருதினார். எனினும் ஆலயப் பிரவேசத்தைச் சட்ட பூர்வமாகக் கொண்டுவர முயற்சி செய்யக்கூடாது, அது தானாகவே வரவேண்டும்—என்பது இவரது அபிப்பிராயம்.

ஹிந்தி கற்க முயன்றார். ராட்டினத்தில் நூல் நூற்கவும் கற்றுவந்தார். ஆனால் இவை இரண்டும் இரண்டே நாளுக்குப் பிறகு கல்லாத கலையாகவே நின்று விட்டன.

பொதுவாகச் சொல்லப்போனால் இவருக்குக் காந்திஜியின் காங்கிரஸ் நிர்மாணத் திட்ட வேலைகளில் பற்றுதல் குறைவென்றே சொல்லவேண்டும். இவர் சம்பந்தப்பட்ட வரையில் கேவலம் காங்கிரஸின் அரசியல் திட்டங்

களிலேயே இவர் மனம் சென்றதென்றும் சொல்ல வேண்டும். எனினும் கூடியமட்டும் காங்கிரஸின் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தார்.

காங்கிரஸில் சேர்ந்த பிறகு சேர்ந்தாற்போல் நாலு நாள் இவரை வீட்டில் பார்ப்பது அரிதாகப் போய் விட்டது. சதா சுற்றுப் பிரயாணம்; நாள் கிழமை ஒன்றும் பார்க்கமாட்டார். எப்பொழுதும் வீட்டிலும் வெளியிலும் இவருடன்கூட ஒரு ஜமா - அரசியல் ஊழியர்களும், காங்கிரஸ் அபிமானிகளும் இருப்பார்கள். எங்களுக்கு இவரிடம் பேசுவதற்கே சந்தர்ப்பம் கிடைக்காது.

காங்கிரஸ் பிரசாரமாக இவர் வெளியூர் போனபோதெல்லாம் தம் சொந்தச் செலவிலேதான் இரண்டாம் கிளாஸில் பிரயாணஞ் செய்வார்; சில சமயம் முதல் வகுப்பிலும் போவார்.

காந்தியடிகளின் வேண்டுகோளின்படி மோதிலால் நேரு முதலானோர் தங்கள் வக்கீல் தொழிலை விட்டது போல் தகப்பனாரும் கோர்ட்டுக்குப் போவதை விட்டுவிட்டார். பழைய கேஸ் ஒன்றிரண்டை மட்டும் கட்டாயத்தின்பேரில் போய் நடத்திவந்தார். புதிய கேஸ் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. வீட்டில் வந்து கேட்கும் சில பழைய கட்சிக்காரர்களுக்கு மட்டும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துவந்தார். இதனால் வருவாய் குறையவே, அதற்கேற்றாற்போல் வீட்டுச் செலவுகளையும் குறைத்துக் கொள்ளும்படி தகப்பனார் அடிக்கடி எங்களுக்குத் தாக்கீது கொடுப்பது வழக்கம்.

தகப்பனார் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தது முதல் எங்கள் வீட்டிற்கு எத்தனையோ தலைவர்கள் வந்துபோவதுண்டு; ஆனால் நாங்கள் (வீட்டு ஸ்திரீகள்) அவர்களிடம் நேரில் பேசிப் பழகியதில்லை. உள்ளே அவர்கள் உணவு கொள்ள வரும்போதுதான் பார்த்திருக்கிறோம். வடநாட்டு நண்பர்களின் ஓர் அரிய வழக்கம் எங்கள் மனதை மிகவும் கவர்ந்தது. எவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களானாலும் ஊருக்குத் திரும்பும் போது 'மாதாஜி' என்று அழைத்து என் தாயார்

காலைத் தொட்டு நமஸ்கரித்து விடை பெற்றுக்கொண்டு போவது வழக்கம். மகாதேவ தேசாய் அந்த மரியாதையை ஒரு தனி அழகுடன் செய்தார்.

காந்திஜியும் ஸ்வாமி சிரத்தானந்தரும் எங்கள் வீட்டிற்கு விஜயம் செய்தபோது அவர்களை உட்புற ஹாலுக்கே கூட்டிக்கொண்டு வந்துவிட்டார் தகப்பனார். எங்களைக் கொண்டு நமஸ்காரமும் செய்வித்தார்.

காந்திஜி எங்களை வலுவில் அழைத்து வைத்துக் கொண்டு தாராளமாய்ப் பேச்சுக் கொடுத்தார். ஸ்வாமி சிரத்தானந்தர் தூய காவி ஆடையில் கம்பீரமாய்த் தோற்றமளித்தார். அவரைப் பயபக்தியுடன் நமஸ்காரம் செய்ததோடு திருப்தி யடைந்தோம்.

* * *

1921-ம் வருஷம், டிஸெம்பர் 27-ந் தேதி அஹமதாபாத்தில் நடந்த காங்கிரஸ் ஸெஷனுக்குத் தகப்பனார் போயிருந்தார். அது வங்க நாட்டுத் தலைவரும் இந்தியாவின் வீரத் தியாகிகளில் ஒருவருமான சித்தரஞ்சன தாஸின் தலைமையில் நடப்பதாக இருந்தது. காருண்ய ஸர்க்கார் அவரைத் தமது அதிதியாக்கிவிட்டனர். ஆகையால் ஹக்கிம் அஜ்மல்கான் தலைமை தாங்க நேர்ந்தது. அந்த ஸெஷனிலே 'ஒத்துழையாமை இயக்கத்தின் குறிக்கோள் சுயராஜ்யத்தை நிலை நாட்டுவது' என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கான வழிகளைக் காந்திஜி கண்டுபிடித்து இயக்கத்தை நடத்தும்படி அனுமதி அளிக்கப்பட்டார். தகப்பனாருக்கு அது முதல் காங்கிரஸ் வேலையில் உத்ஸாகம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது.

1922-ம் வருஷம் நாட்டில் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. மேற்கே மலையாளத்தில் மாப்பிள்ளைமார் கலகம். வடக்கே சௌரிசௌரா சம்பவம். நாடெங்கும் நகரந்தோறும் கடை யடைப்பு, வேலை நிறுத்தம், வேல்ஸ் இளவரசர் வருகையை எதிர்த்து; பம்பாயில் பெரிய ஆர்ப்பாட்டம் அதன் காரணமாக. அவை யெல்லாம்

மகாத்மாவின் தூய அஹிம்ஸா இயக்கத்திற்குப் பெரிய பாதகத்தை விளைவித்தன. மகாத்மா மனச்சோர்வுற்றார். ஆரம்பிக்க இருந்த பர்டோலி வரிகொடா இயக்கத்தை நிறுத்திக்கொண்டார். பெருந் தவறு நேர்ந்துவிட்டதாக ஒப்புக்கொண்டு அதை "ஹிமாலயத் தவறு" என்றும் குறிப்பிட்டார்.

ஸர்க்கார் மகாத்மாவைக் கைது செய்தது. பிறகு நடந்தது உலகப் பிரசித்தம் — மகாத்மாவின் குற்ற விசாரணையும், கோர்ட்டாரின் தீர்ப்பும் தண்டனையும். மகாத்மாவின் கொள்கை தோல்வி அடைந்துவிட்டதாக அதிகார வர்க்கம் கருதியபோதிலும், அந்தத் தோல்வியே ஜனங்களின் கண்களில் வெற்றியாகிவிட்டது!

1922-ம் வருஷம் டிஸம்பர் 27-ல் கயா காங்கிரஸ்; இந்தக் கூட்டத்திற்கு தேசபந்து ஸி.ஆர். தாஸ் தலைமை வகிக்கும் பாக்கியம் கிடைத்துவிட்டது. "1923-ல் நடக்கப்போகிற பொதுத்தேர்தலில் காங்கிரஸ்காரர்களும் கலந்துகொள்ள வேண்டும். எல்லா ஸ்தானங்களையும் கைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குள் புகுந்து சர்க்காரை முறியடிக்கவேண்டும்" என்ற ஒரு பிரேரணையைப் பண்டித மோதிலால்நேரு கொண்டுவந்தார். ஸி.ஆர். தாஸ் அதை ஆதரித்தார். ஆனால் சிறைக்குள் இருக்கும் காந்திஜியின் சார்பில் தாம் பேசுவதாகச் சொல்லி ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் அதைப் பலமாகக் கண்டித்து வேறு ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இரண்டு கட்சிகளுக்கிடையிலும் சமாதானம் ஏற்படுத்துவதற்காக நேரு பிரேரணைக்கு ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார் ஸ்ரீமான் ஐயங்கார். ஆனால் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் தீவிர எதிர்ப்பால் நேரு பிரேரணையும் திருத்தப் பிரேரணையும் தோல்வியுற்றன. ராஜாஜியின் பிரேரணைக்கே முடிவில் வெற்றி கிடைத்தது.

கயா காங்கிரஸுக்குப் பிறகு காங்கிரஸில் பிளவு ஏற்பட்டுவிட்டது. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையில் மாறுதல் வேண்டாதார் ஒரு கட்சியில்

சேர்ந்தனர். தாஸ் தலைமையில் 'ஸ்வராஜிஸ்ட் கட்சி' தலை காட்டியது. ஒன்பது மாதம் கழித்து இரண்டு கட்சியினருக்கும் ஒருவித ஸமரஸம் ஏற்பட்டது. "மத சம்பந்தமான ஆக்ஷேபமோ, மனச் சாட்சிக்கு விரோதமோ இல்லாத பட்சத்தில், காங்கிரஸ்காரர்களில் எவரெவருக்கு விருப்பமோ, அவர்கள் சட்ட சபைகளில் புகலாம்" என்ற ஒரு சமாதான உடன்படிக்கை இரு சாராருக்குமிடையே ஏற்பட்டது.

தகப்பனார் சென்னைக் கார்ப்பரேஷன் ஸ்தானங்களுக்கு சுயராஜ்யக் கட்சியினரை அனுப்ப விரும்பினார். அதன்படி, காங்கிரஸ் அபேக்ஷகர்களைப் பொறுக்கியெடுத்துத் தேர்தலுக்கு அனுப்பினார். ஸ்ரீ ஸாமி வெங்கடாசலம் செட்டி மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மொத்தம் 10-ல் 7 ஸ்தானம் இவர்களுக்குத்தான்.

காங்கிரஸ் சார்பில் கார்ப்பரேஷனில் ஸ்தானங்கள் கிடைத்த பிறகு தந்தையாருக்குக் கார்ப்பரேஷன் விஷயங்களில் ஊக்கம் ஏற்பட்டிருந்தது. கார்ப்பரேஷன் தகராறுகளில் தம் அபிப்பிராயங்களைக் கொடுப்பார். ஸி. ஆர். தாஸ் கல்க்த்தாக் கார்ப்பரேஷனைச் செம்மைப் படுத்தியது போலத் தாமும் செய்யவேணுமென்று சொல்லிக்கொண்டிருந்தார்.

பிறகு இவர் சென்னை, டில்லிச் சட்டசபை ஸ்தானங்களுக்கும் சுயராஜ்யக் கட்சியினரை அனுப்ப விரும்பினார்.

தேர்தல் பிரசாரம் வெகு மும்முரமாக நடந்தது. நாடெங்கும் ஒரே உத்ஸாகம். ஏதோ பெரிய வருஷாந்தரக் கொண்டாட்டம், அல்லது உத்ஸவம் நடப்பது போலத்தான் இருந்தது தேசமெங்கும். வடக்கே, நேரு-தாஸ் தலைமையில் 45 காங்கிரஸ் அங்கத்தினர்கள் அஸெம்பிளி ஸ்தானங்களைக் கைப்பற்றினர். டாக்டர் பராஞ்ஜ்பை, ஸர் ஸி. ஒய். சிந்தாமணி, பிரசித்திபெற்ற வங்க நாட்டு வாசாலகரான ஸர் சுரேந்திரநாத் பானர்ஜி போன்ற மிதவாதிகள் தோற்கடிக்கப்பட்டனர்.

தென்னாட்டில் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களான பனகல் ராஜா, ஸர் ஏ. பி. பாத்ரோ, ஸர் சிவஞானம் முதலியவர்களின் ஆதிக்கம் ஒடுங்கியது. ஸ்ரீ முத்துரங்க முதலியார், ஸ்ரீ கே. பாஷ்யம், சத்தியமூர்த்தி முதலான காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றிபெற்றனர். டில்லிச் சட்ட சபைக்குச் சென்னையிலிருந்து ஸ்ரீமான் ஐயங்காரே அபேட்சகராக நின்று வெற்றி பெற்றார்.

இந்தத் தேர்தல்-பிரசாரங்கள் நடந்தபோது இவர் அலைந்த அலைச்சலுக்குக் கணக்கில்லை. எதிர்க் கட்சியின ரிடமிருந்து இவருக்குக் கிடைத்த வசைமொழிகளுக்கும் கங்கு கரை யில்லை. இவரைப் பயமுறுத்தி மொட் டைக் கடிதங்கள் வந்து குவிந்தவண்ணமாயிருந்தன வீட்டிலே.

தினம் காலை வீட்டை விட்டுப் புறப்பட்டால் இரவு 11, 12 மணிக்குத்தான் வந்துசேருவார். இவர் வரும்வரை எங்களுக்குத் தூக்கம் வராது. வீட்டுக்கு க்ஷேமமாக வந்து சேர்ந்ததும் நாங்கள், மோட்டார் டிரைவர், கூடச் சென்ற தொண்டர்கள் இவர்கள் மூலம்தான் 'எங்கே கல் லடி, எங்கே கலாட்டா, எங்கே எந்த மாதிரி வசைமாரி?' என்று அவைகளைப் பற்றி யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்வோம். நடுநடுவே டெலிபோன் மணி அடிக்கும். ரிஸீவரைக் கையில் எடுத்தால் அதுவும் ஒரே வசைமாரி பொழியும். கர்ண கடோரமான வசைகள்! அதிலிருந்தே தேர்தல் என்றால் எங்களுக்குச் சற்றும் பிடிக்காமல் போய்விட்டது.

சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியினரை முறியடிப் பதற்காகத் தகப்பனார் எடுத்துக்கொண்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. அவர் சென்னையில் நுழையாத சந்தில்லை; போகாத வீடில்லை. அவர் கேட்டுக்கொண்ட வசை மொழிகளுக்கோ கணக்கே இல்லை.

ஒரு சமயம் செங்கற்பட்டுக்குத் தேர்தல் பிரசார நிமித்தம் போயிருந்தார். திரும்புகையில் இரவு 12 மணி. ஏரிக் கரையில் புதர்களை ஒட்டிப் பத்துப் பதினைந்து

பேர்வழிகள் தடிகள் சகிதம் இவ்ரைத் தாக்கவேண்டு மென்று மறைந்திருந்தார்கள். அது இவருக்குத் தெரிந்துவிட்டது. கார் டிரைவர் ஒரு முஸல்மான், தைரியசாலி. "வந்தால் வரட்டும், ஒருகை பார்க்கலாம்" என்ற மனப்பான்மையுடன் அவன் படுவேகமாய்க் காரை ஓட்டிவந்தான். கார் 'டாப்'மீது கற்கள் வந்து விழுந்தன. நல்ல வேளையாக அபாயம் இல்லாமல், காயமும் இல்லாமல் வீடு வந்து சேர்ந்தார் என் தகப்பனார்.

* * *

காங்கிரஸில் இவருடன் கூட இருந்து வேலை செய்து வந்தவர்களில், சத்தியமூர்த்தி, ஸ்ரீ கலியாணசுந்தர முதலியார், ஸ்ரீ முத்துரங்க முதலியார், ஸ்ரீ. சாமி வெங்கடாசலம் செட்டியார், ஜனுப் ஹமீத்கான், ஜனுப் ஷாபீ மகமத் முதலியவர்களை அடிக்கடி நான் கண்டதுண்டு. ஜயவேலு என்ற ஒரு ஹரிஜன அன்பரும் வீட்டுக்கு வருவார் அடிக்கடி. ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரிடம் தந்தைக்கு ஒரு தனிப் பிடித்தம், விசேஷ மதிப்புண்டு. அவருடைய சுத்தத் தமிழ் மொழியைப் பற்றியும், அவர் தமிழில் ஆற்றும் அரிய சொற்பொழிவுகளைப் பற்றியும் தாயாரிடமும் என்னிடமும் வெகுவாய்ப் புகழ்ந்துரைப்பார். தமிழ்ப் பாஷையைப் பற்றி ஏதாவது பிரச்னை கிளம்பினால், உடனே கலியாணசுந்தர முதலியாரைத்தான் ஆதாரமாக எடுத்துக்கொள்வார். ப்ரேம்சந்தின், 'சேவாசதன'த்தை நான் மொழிபெயர்த்து வந்தபோது, என் மொழிபெயர்ப்பைக் கலியாணசுந்தர முதலியார் ஒப்புக்கொண்டால்தான் தாமும் ஒப்புக் கொள்ள முடியும் என்றார். என்னுடைய தமிழ்ப் பாஷா ஞானத்தில் அவருக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை.

தமக்கு எவ்வளவோ பிராம்மணரல்லாத நண்பர்கள் இருப்பதாகவும், ஆனால் அவர்களில் எல்லாம் கலியாண சுந்தர முதலியார்தான் முதன்மையானவர் என்றும் அடிக்கடி கூறுவார்.

சமீபத்தில் திருவாளர் கலியாணசுந்தர முதலியார் எழுதிய "வாழ்க்கைக் குறிப்புக்கள்" என்ற புஸ்தகத்திலிருந்து சில பகுதிகளை இங்கே சேர்க்கலாம் என்று தோன்றுகிறது :—

"சுயராஜ்யக் கட்சியின் சிறிய வெற்றி எஸ் ஸ்ரீநிவாஸையங்காருக்குப் பெரிய ஊக்க மூட்டிற்று. அவ் வூக்கம் முதலில் நகரசபையைப் பற்றிக் காங்கிரஸ் மயமாக்கவேண்டும் என்ற வெறி யாகியது. ஸ்ரீநிவாஸையங்கார் வெறிகொண்டு உழைத்தார் என்று கூறல் மிகையாகாது. அவர்தம் முயற்சிக்கு யானும் துணை நின்றேன். வெற்றிமேல் வெற்றி விளைந்தது. அவ் வெற்றி பிற்போக்குக் கட்சியினரை விழிபுரளச் செய்தது; மாகாணத்தைத் தட்டி எழுப்பியது. மாகாண முழுதும் ஆங்காங்கே ஸ்தலஸ்தாபனங்க ளெல்லாம் காங்கிரஸ் மயமாகத் தலைப்பட்டன. சட்டசபை ஏன் இவ்வண்ண மாதல் கூடாது என்ற உணர்வு மக்களிடை எழுந்தது. அவ்வுணர்ச்சியைப் பயன்படுத்தும் முறையில் எங்களால் பிரசாரம் செய்யப்பட்டது......எஸ் ஸ்ரீநிவாஸையங்காரும் யானும் அடிக்கடி சந்திப்போம். முன்னணி வேலைகளை முன்னுவோம்...........தேர்தல் பிரசாரம் தொடங்கப் பட்டது. அதற்கென்று அக்கால ஐயங்கார் தமது வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்ததை யான் அறிவேன். அவரும் யானும் கிராமங் கிராமமாக அலைந்தோம்: குக்கிராமங்கட்கு ஓடினோம்: மூலை முடுக்குகளிலும் நுழைந்தோம். ஜில்லாக்களைச் சுற்றி வருவது எங்கள் வேலையாகியது. எங்களுடன் கலந்து தொண்டு செய்தவர் சத்தியமூர்த்தி. ஆங்காங்கே கலப்பவர் எஸ். முத்தையா முதலியார், ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார், ஏ. அரங்கசாமி ஐயங்கார் முதலியோர்...... பிரசார யாத்திரை ஐயங்காருடன் அல்லவா செய்ய வேண்டும்? அவர் தலைமை எங்களை எப்படி நடத்தும்! தாய்மை அன்பும் பின்வாங்கும். இரண்டாம் வகுப்புச் செல்கை; தேர்தல் பேச்சு; வேளைக்கு வேளை சோறு, சிற்றுண்டி. ஐயங்காரின் தொண்டர் கஸ்தூரியின் அன்பு

நினைவுக்கு வருகிறது......1926-ம் ஆண்டிலே ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் யானும் வேறு சிலரும் காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்திற்குச் செல்வோம். பெரும்பான்மையும் நாங்கள் பிராமணர் வீட்டிலேயே தங்குவோம். அவருள் கடும் வைதிகரும் இருப்பர். மதுராந்தகமும் ஸ்ரீபெரும் பூதூரும் நினைவுக்கு வருகின்றன. இரண்டு இடங் களிலும் ஸ்ரீநிவாஸ ஐயங்காரை எங்களினின்றும் பிரித்து விருந்தளிக்க வைதிகர்கள் முயன்றார்கள். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் வைதிகர்களைப் பார்த்து 'உங்கள் வைதி கத்தை யான் கெடுக்க விரும்பவில்லை. இவர்கட் கெல்லாம் எவ்விடத்தில் உணவு அளிப்பது உங்கள் வழக்கமோ அவ்விடத்திலேயே எனக்கும் உணவளி யுங்கள்' என்று சொன்னார். அச்சொல் அவ்வேளையில் வைதிகப் பிராமணர்களின் மனத்தைத் திருப்பியது. சாதியை மறக்கச் செய்தது. சமரஸ விருந்து நிகழ்ந்தது."

சத்தியமூர்த்தியிடமும் அவருக்கு அதிக அன்பு இருந்தது. அடிக்கடி அவரை அழைத்துவரும்படிச் சொல்லித் திருவல்லிக்கேணியிலுள்ள அவர் வீட்டுக்குக் காரை அனுப்புவார். காலையில் போன கார் திரும்பி வர, சிலவேளை பகல் பன்னிரண்டு மணிகூட ஆகிவிடும். அதன் மத்தியில் எங்களுக்குச் சொந்த அலுவலுக்குக் கார் வேண்டியிருக்கும்; பொருமைப் படுவோம் சத்திய மூர்த்தியின் மீது. "என்ன இவ்வளவு நேரம்?" என்று டிரைவரைக் கேட்டால், "ஐயா ஸ்நானம் செய்து பூஜையிலிருந்தார். பூஜை முடிந்து வர இவ்வளவு நேரம்!" என்பான் அவன்.

சத்தியமூர்த்தி வரும்போதே, "என்ன ஸ்ரீநிவா ஸையங்கார்! கூப்பிட்டீர்களாமே?" என்று கேட்டுக் கொண்டுதான் உள்ளே வருவார். அதற்கு, "என்ன போ! அந்தப் பேட்டையில் நமக்குச் சாதகமாக ஒரு ஓட் கூடக் கிடைக்காதாமே? எல்லாம் எதிர்க் கட்சிக்குத்தான் என்று ஐயவேலு சொல்லுகிறான். ஏதாவது செய்ய வேண்டாமா?" என்பார் ஐயங்கார் கவலையுடன். "ஸ்ரீநிவா ஸையங்கார்! எதற்குச் சும்மா பயப்படுகிறீர்கள்? நாம்

அவர்களை யெல்லாம் தோற்கடித்து விடுவோம். பாருங்கள் கடைசியில், நம்ம பக்கம் வந்துவிடுவார்கள் பயல்கள் எல்லாம்!" என்று உத்ஸாகமாகப் பேசுவார் சத்தியமூர்த்தி. உடனே ஐயங்காருக்கும் உத்ஸாகம் பிறந்து விடும். "ஆமாம், நீ சொல்வது சரிதான். ஆனாலும் நாம் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. அந்தப் பேட்டையில் ரொம்ப வேலை செய்ய வேணும்" என்று மேலும் வேலைவிவரங்களை விளக்கிப் பேசிக்கொண்டிருப்பார் சத்தியமூர்த்தியிடம் அந்யோந்யமாக.

பின்பு ஒருசமயம் சத்தியமூர்த்தி தாம் செய்த பிரசங்கம் ஒன்றில், ஸ்ரீநிவாஸையங்கார் ஸத்புருஷர் என்றும், அவருக்குத் தாம் மிக்க கடமைப்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததுண்டு. "பிறர் அசாத்தியம் எனக் கருதுபவற்றை அவர் செய்து வைத்தார். தைரியமாகப் பேசுவார். திடமாகவும் நடந்து கொள்வார். எல்லோருக்கும் மேலாகத் திகழ்ந்தார்"—இவ்விதம் சத்தியமூர்த்தி அன்று பேசினார்.

ஸ்ரீ முத்துரங்க முதலியாரிடம் இவருக்கு விசேஷப் பற்றுண்டு; கடைசிவரை அவர்தான் தமக்கு உண்மையாக இருந்தவர் என்பார். காங்கிரஸை இவர் விட்டு விலகியபோது, முத்துரங்க முதலியாரிடம் தாம் வகித்து வந்த ஸ்தானங்களை ஒப்படைத்தார். ஐயங்கார் வற்புறுத்தியதின் பேரில்தான் முத்துரங்க முதலியாரும் அந்த ஸ்தானங்களை (தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர் பதவி முதலியன) வகிக்கச் சம்மதித்தார்.

ஒ. கந்தசாமி செட்டியாரும் என் பிதாவுக்கு மிகவும் வேண்டியவர். அவர் அடிக்கடி தந்தையைச் சந்திக்க வருவார். கிறிஸ்து மதக் கொள்கைகளைப் பற்றியும், மிஷனரிகள் செய்யும் பொதுஜன சேவைகளைப் பற்றியும் இவருடன் பேசுவார். அரசியல் விஷயங்களில் பெரும்பாலும் அவர் தந்தையையே பின்பற்றியவர். அவருடைய தூண்டுதலின்பேரில் ஆரோக்கியத்திற்காக வசிப்பதற்கென்று பல்லாவரத்தில் அவர் வீட்டுக்குப் பக்கத்

தில் இடம் வாங்கி அங்கே ஒரு வீட்டையும் கட்டினார் என் தகப்பனார். சனி, ஞாயிறு தினங்களில் அங்கே போய் இரண்டு நாட்கள் தங்குவார். பல்லாவரத்துக் கிணற்று நீரும் சுத்தக் காற்றும் இவருடைய உடம்புக்கு ஆரோக்கியத்தை அளித்து வந்தன.

கவி சுப்பிரமணிய பாரதியாரை இவர் நிரம்பவும் கொண்டாடினார். பொதுவாகச் சங்கீதத்தில் இவருக்குச் சிறிதும் பிடித்தம் இராதபோதிலும், தமிழ்ப் பாட்டுகளில் இவருக்கு ஒரு பிரியம் ஏற்பட்டுவிட்டது. முக்கியமாகத் தமிழ்த்தேசிய கீதங்களை இவர் வெகுவாக விரும்பினார். சுப்பிரமணிய பாரதியாரின் தேசிய கீதங்களை இவர் அபாரமாய்ப் புகழ்ந்திருக்கிறார். அவை இவருக்கு ரொம்பப் பிடித்திருந்தன என்பது, இவர் அந்தத் தேசிய கீதத் தொகுதியின் முதற்பதிப்புக்கு எழுதியுள்ள முகவுரையிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

நானும், என் சகோதரனும்கூட இவரது எலெக்ஷன் வேலையில் பங்கு எடுத்துக்கொண்டோம். என் தகப்பனாரின் பொது வேலைகளுக்கெல்லாம் மௌனமாக மறைவிலிருந்து வேலை செய்து உதவுவது என் சகோதரன் எஸ். பார்த்தஸாரதியின் வழக்கம். பார்த்தஸாரதியும் சகாக்களும் சேர்ந்து செய்த வேலை அந்தத் தேர்தலை ஒரு பெரிய வெற்றியாக்கித் தந்தது.

* * *

1925-ம் வருஷம் மகாத்மா காந்தி வைக்கத்திற்குப் போவதற்காகச் சென்னைக்கு வந்தார். அப்போது மூன்று நாள் எங்கள் அகத்தில் தங்கினார். அச்சமயம் என் தாயாரைப் பார்த்து, "உங்கள் கணவர் அட்வகேட் ஜெனரல் பதவியை விட்டதில் உங்களுக்கு மன வருத்தமா? அந்த ஆடம்பர வாழ்க்கை என்ன! வீட்டிலே சதா இரண்டு வில்லைச் சேவகர்கள் என்ன! இப்பொழுது ஒன்றும் கிடையாதல்லவா?" என்று கேட்டார்.

அதற்குத் தாயார், " இப்போது மட்டும் என்ன குறைவு? மாலைகள் என்ன! வாலண்டியர் படை சூழ்ந்த

ஊர்வலங்கள் என்ன! ராஜ மரியாதைகள் நடக்கின்றனவே காங்கிரஸ் தலைவர்களுக்கு!" என்றார். அதைக் கேட்டு மகாத்மா "கல்" என்று சிரித்து விட்டார்.

மகாத்மா உட்புற ஹாலில் வீற்றிருந்தபோது, சிலர் பின்புற வழியாக அவரைத் தரிசிக்க வந்துவிட்டார்கள். காந்திஜி அவர்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, "முன்புற ஹாலில் காவல் காக்கும் ஐயங்காரையுமா ஏமாற்றி வந்துவிட்டீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நாங்கள், "அவர்கள் பின்புற வாசல் வழியாக நுழைந்து விட்டார்கள்" என்று தெரிவித்தோம். "ஆமாம், உங்கள் வீடுதான் ஒரு தர்ம சத்திரம்போல் இருக்கிறதே! எங்கேயும் திறந்த வாசல்கள், யாருக்கு வேணுமானாலும் போஜனம்!" என்றார்.

மற்றொரு முறை அவர் வந்திருந்தபோது என் தகப்பனாரைப் பார்த்து, "முதல் தடவை உங்கள் வீட்டுக்கு வந்தபோது நான் வாசலுடன் நின்றுவிட்டேன். இரண்டாம் முறை வந்தபோது உட்புற ஹால்வரை வந்துவிட்டேன். மூன்றும் முறை கஸ்தூரிபா உங்கள் சமையலறைக்குள்ளேயே நுழைந்தாகிவிட்டது! எப்படியிருக்கிறது இந்தச் சீர்திருத்தம்?" என்று சொல்லிச் சிரித்தார்.

அவர்களுக்குள் பல அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும் அந்நாட்களிலே தகப்பனாருக்கு மகாத்மாவிடம் அபார பக்தி இருந்தது. சதா மகாத்மாவின் குணாதிசயங்களைப் பற்றியே பேச்சு வீட்டிலே. மகாத்மா எங்கள் வீட்டில் தங்கியிருந்த சமயம், தகப்பனார் வெகு நேரம் அவர் பக்கத்திலேயே வீற்றிருப்பார், சிந்தனைகளில் மூழ்கிப்போய், மெய்ம்மறந்து மிகப் பணிவுடன் தலை குனிந்த வண்ணம். வைக்கத்திற்கு மகாத்மாவுடன் போய் வந்தார்.

சிறை செல்வதிலே இவருக்கு எப்போதும் நம்பிக்கை கிடையாது. "நான் தானாக வலுவில் சிறைக்குச் செல்ல வழி தேடப் போவதில்லை. கூடியமட்டும் சிறைக்குப்

போகாமல் வேலை செய்து வருவதே நல்லது. அப்படி ஏதாவது அவர்களாகவே என்னைச் சிறைப்படுத்துவ தென்றால் செய்யட்டும். அதற்காகப் பயப்படப் போவதும் இல்லை!" என்று அடிக்கடி கூறுவார்.

ஸைமன் கமிஷன் சென்னைக்கு வந்தபோது இவர் வெற்றிகரமாகப் பெரியதொரு கறுப்புக் கொடி ஊர் வலத்தை நடத்தி வைத்தார் என்பது நமது சமீபகால அரசியல் சரித்திரம் அறிந்தவர்களெல்லாம் அறிந்தது தான். அப்போது இவர், "நான் அநாவசியமாக நம் ஜனங்களைக் கஷ்டத்திற்குள்ளாக்கப் போவதில்லை. ஆவேசத்தினால் அவர்களிடையே கலகம் நேராமல், கல்லடி, தடியடி இவைகளோடு ஊர்வலம் முடியாமல் பார்த்துக்கொள்ளப்போகிறேன். ஊர்வலத்தைத் தடை செய்தாலும் செய்வார்கள். ரொம்ப நிதானமாக நடந்து கொள்ளவேணும்" என்று சொல்லிக்கொண்டுதான் ஊர்வலம் நடத்தப் போனார். ஆயினும் என்ன நேர்ந்து விடுமோ என்று இவர் திரும்பி வரும்வரையில் எங்க ளுக்குப் பயம் தான்!

* * *

இவருக்கு ஒளிவு மறைவு என்பதே இல்லை. மனசில் உள்ளதை உள்ளபடியே கொட்டிவிடுவார் கண்டவரிடமெல்லாம். வீட்டிலும் வெளியிலும் ஒரேவித மாகவே நடந்துகொள்வார். வீட்டு மனிதர்கள், பிறர் என்ற பேத புத்தியையும் பாராட்டமாட்டார்; எல் லோரையும் ஒரே மாதிரியாக, ஒரே கண்கொண்டு பார்ப் பார்.

சுபாவமாகவே தகப்பனார் ரொம்பக் கோபக் காரர்தான். கோபம் வந்தால் அசாத்தியமாக வந்து விடும். சிநேகிதர், அல்லாதவர், உறவினர், உறவின ரல்லாதவர், எல்லோர்மீதும் ஒரே மாதிரியாகச் சீறி விழுவார். சுருக்கென்று மனசில் தைக்கும்படியும் வார்த்தைகளைக் கொட்டிவிடுவார். ஆனால் அத்துடன் முடிந்துவிடும் இவருடைய கோபத்தின் வேகம். பழைய

படி சக்ஜமாக அன்புடன் பேச முன்வருவார் மறுக்ஷணம். மனசில் யாதொரு கல்மஷமும் தங்காது.

ஒரு சமயம் ஒரு வாலிபன் யாசகத்திற்கு வந்தான் இவரிடம். காங்கிரஸை விட்டு விலகியிருந்த காலம்! வந்த வேளை நல்ல நடுப்பகல். தகப்பனார் ஸோபாவில் சாய்ந்து ஏதோ புஸ்தகம் படித்தவண்ணம் இருந்தார்.

"உன்னைப் போன்ற வாலிபர்களுக்கு நான் யாசகம் ஒன்றும் கொடுக்கமாட்டேன், போ" என்றார். பையன் கேட்கவில்லை. தொந்தரவு செய்தான். "போ! போ!!" என்று விரட்டினார் ஐயங்கார் கோபமாக. இவர் என்ன விரட்டியும் அவன் போகவில்லை. மேலும் மேலும், கெஞ்சிக்கொண்டே போனான். எனக்கு அவன் பேச்சைக் கேட்கப் பரிதாபமாக இருந்தது! "இவ்வளவு கெஞ்சுகிறானே ஏதாவது கொடுத்தனுப்புங்களேன்" என்றேன். "உனக்கென்ன தெரியும்? உன்னைக் கேட்கவில்லை போ" என்று என்மீதும் கோபமாகத் திரும்பவே நான் உள்ளே வந்துவிட்டேன். திரும்பவும் 'போ! போ!' என்று அவனை விரட்டிக்கொண்டேயிருந்தார் தகப்பனார். பிச்சை வாங்கிச் சோம்பேறிகளாவதைப் பற்றி ஒரு நீண்ட 'லெக்ச'ரும் நடந்தது அதன் பிறகு. ஆனால் அந்தப் பையனோ மகா கெட்டிக்காரன், விடாக்கண்டன்; போகவேயில்லை. என்னவோ பதில் சொல்லிக்கொண்டேயிருந்தான் தகப்பனார் மிரட்டலுக்கெல்லாம். நாங்கள் (அம்மாவும் நானும்) பின்புற ஹாலில் இருந்தோம். சட்டென்று தகப்பனாரின் குரல் தணிந்தது. வந்த பையனுடன் இப்பொழுது சகஜமாகச் சம்பாஷணை நடந்தது பின்னும் சுமார் அரை மணி காலம். பையன் திரும்பிப் போனபோது அவன் பத்து ரூபா நோட்டொன்றைப் பெற்றுப் போனான் என்று தெரிந்துகொண்டோம்.

"வந்தவுடனே ஒன்று அல்லது அரை என்று ஏதாவது கொடுத்தனுப்பக் கூடாதா? இவ்வளவு நாழிகை வைது திட்டி அழவைத்துவிட்டு, இப்போது ஒரு பத்து ரூபா நோட்டையும் தூக்கிக் கொடுத்தீர்களே?" என்று கேலி செய்தாள் என் தாயார்.

இவருடைய முன்கோபத்திற்குமுன் தைரியமாக எப்படியாவது அரை மணியோ, ஒரு மணியோ அசையாமல் நின்றுவிட்டால், பின் இவர் கோபம் தானாகவே தணிந்துவிடும். பிறகு ரொம்ப மனம் கரைந்து விடுவார். தாம் கோபித்துக் கொண்டவருக்கும் அதற்குப் பிராயச்சித்தமாக ஏதாவது செய்யவேண்டும் அல்லவா? இந்த ரகசியத்தை தெரிந்தவர்கள் இவரை அண்டிப் பயன் பெற்றிருக்கிறார்கள் வெகுவாக.

இவர், தம் சுபாவப்படி தமக்கும் மகாத்மாவுக்கும் இடையிலுள்ள அபிப்பிராய பேதங்களைப் பகிரங்கமாகப் பேசிவந்ததே பின்னால் இவர்களிடையே ஒரு பரஸ்பர விரோதபாவத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாக இருந்தது என்று நான் எண்ணுகிறேன்.

* * *

நான் சிறை செல்ல விரும்பியது இவருக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அப்போது இவருக்கு என்மீது அசாத்திய கோபம் வந்தது. எனினும் நான் பிடிவாதமாக இருப்பதைப் பார்த்து இவர், “உனக்கு உண்மையில் நம்பிக்கை இருந்தால் சிறைக்குப் போகலாம். ஆனால் பொதுஜன மதிப்பைச் சம்பாதிப்பதற்காகவும், பிறர் போகும்படித் தூண்டுவதற்காகவும் போவது கூடாது. ஜெயிலுக்குப் போவதே ஒரு பைத்தியமாகிவிடக் கூடாது. நீ ஜெயிலுக்குப் போய் என்ன காரியம் சாதித்துவிடப் போகிறாய்? அதைவிட, வெளியில் இருந்துகொண்டு தேசத்திற்குச் சேவை செய்வது நல்லது” என்று எனக்கு ஒரு நீண்ட உபந்யாஸம் செய்தார்.

பொதுவாக, ஸ்திரீகள் அரசியல் துறையில் இறங்கி வேலை செய்வது கூடாது என்பது தகப்பனாரின் அபிப்பிராயம். ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் வேண்டுமென்ற விஷயத்திலும், ஸ்திரீகளுக்குச் சொத்து, நிலம் வேண்டும் என்ற விஷயத்திலும் தகப்பனாருக்கு இருந்த தாராள மனப்பான்மையானது, ஸ்திரீகளும் புருஷர்களுடன் சரி சமானமாகப் பழகவேணும், அரசியல் துறைகளிலும்

இறங்கி வேலை செய்ய வேணும், உத்தியோகங்களை வகிக்க வேணும் என்ற விஷயங்களில் இல்லை. சமூகத் தொண்டு புரிவது, வீட்டைக் கவனித்துக்கொள்வது, குழந்தைகளைப் பராமரிப்பது இவைதான் ஸ்திரிகளுக்கேற்ற கடமை என்பது தகப்பனாரின் கொள்கை. ஆதலால் காங்கிரஸ் வேலையில் தீவிரமாக ஈடுபட்ட எந்த ஸ்திரீயையும் (ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு நீங்கலாக) இவர் அதிகம் பாராட்டியதில்லை.

* * *

சுயராஜ்யக் கட்சியை ஆரம்பிக்கும் தறுவாயில் தேசபந்து தாஸ் என் தகப்பனாரைச் சந்தித்துப் பேசுவதற்காகப் பெங்களூரில் எங்கள் அகத்திற்கு வந்தார். அவர் வந்தபோது மாலை சுமார் 5 மணி இருக்கும். இரவு போஜனத்திற்கான பூரி, பாயஸம், ஹல்வா முதலிய வடநாட்டுச் சாப்பாட்டை நாங்கள் சிரமப்பட்டுத் தயாரித்து வைத்திருந்தோம்.

இருவரும் கலந்து பேசியதில் என் தகப்பனாருக்கும் தாஸுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. அதன் விளைவாக இருவரது குரல்களும் மேலோங்கிக் கேட்டன. இரவு தங்குவதாக இருந்த தேசபந்து சட்டென்று புறப்பட்டுவிட்டார், அன்றிரவே ஊருக்குத் திரும்ப வேண்டுமென்று. தகப்பனார் என்ன சொல்லியும் கேட்கவில்லை.

இந்தச் செய்தியைத் தகப்பனார் உள்ளே வந்து எங்களிடம் சொன்னார். "என்ன குழந்தைபோல் நடந்து கொள்ளுகிறான் இந்த தாஸ்! திடீரென்று புறப்பட்டு விட்டானே?" என்றார். சித்தரஞ்சன தாஸின் முகம் ஒரு குழந்தையின் முகம்போலத்தான் இருக்கும் பார்ப்பதற்கு!

தகப்பனார் தாஸை ரயிலில் ஏற்றப்போனார். நாங்கள் வீட்டு அலுவல்களை முடித்துக்கொண்டு படுக்கப் போனோம். போன கார் திரும்பி வந்தது போனபடியே! வியப்புற்றோம். இப்போது இருவரும் கலகலப்பாய்ப்

பேசிச் சிரித்துக்கொண்டே காரிலிருந்து இறங்கினார்கள். ரயிலடியில் போனதும் இவர்களிடையே இருந்து வந்த அபிப்பிராய பேதம் மறைந்து விட்டதாம். பரஸ்பரம் ஒத்துப் போய்விட்டார்கள். எனவே சுயராஜ்யக் கட்சி சம்பந்தமான பேச்சுக்களைத் தொடர்ந்து பேசி முடிப்பதற்காகத் திரும்பிவிட்டார் தாஸ்.

ஸி. ஆர். தாஸிடமும் சுபாஷ் போஸிடமும் என் தகப்பனருக்கு ஒரு தனிப் பிரியம். அவர்களின் குணாதிசயங்களைச் சொல்லிச் சொல்லிப் பெருமைப் படுவார். சில விஷயங்களில் கண்டனமும் செய்வதுண்டு.

மிஸஸ் தாஸைப் பற்றி நல்ல குணவதி என்ற அபிப்பிராயம். வஸந்தி என்ற அவர் பெயரையே தம் பேத்திக்குச் சூட்டினார். ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடுவை 'நல்ல அறிவாளி' என்று இவர் சொல்வதுண்டு. ஸ்திரீகளில் அவ்விருவரையும் அடிக்கடி என்னிடம் குறிப்பிட்டுச் சொல்லி யிருக்கிறார்.

* * *

சுயராஜ்யக் கட்சி ஏற்பட்டதிலிருந்தே காந்திஜிக்கும் தகப்பனருக்கும் இடையே அபிப்பிராய பேதம் சற்று வலுக்க ஆரம்பித்துவிட்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை நான்கு. ஒன்று, ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை விஷயம். அந்த ஒற்றுமையைத் தாம் உண்டாக்க முடியுமென்று தந்தையார் முழு மனசுடன் நம்பினார்.

ஒரு சமயம் அலி சகோதரர்கள் இருந்தபோது இரு கட்சியினருக்குள்ளும் சமாதானம் செய்துவைக்க இவரை வரவழைத்திருந்தனர் சபர்மதி ஆச்ரமத்திற்கு. சமாதானப் பேச்சு நடந்தது, சமாதானம் ஏற்படுவதாகவும் இருந்தது; ஆனால் முடிவில் பேச்சு திடீரென்று முறிந்து விட்டது. இந்தச் சச்சரவு அரசியல் விஷயமானதல்ல. பக்ரீத் சமயத்தில் பசுஹத்தி செய்வதையொட்டியும், 'மஸ்ஜித்'கள் முன்பு மேளம் வாசிப்பதையொட்டியும் ஏற்பட்ட சச்சரவுதான். காந்திஜி காங்கிரஸைச் சேர்ந்த பிற

போக்காளரான ஹிந்துக்களின் பேச்சைக் கேட்டதால், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்படவிருந்த உடன்பாடு முறிந்ததென்று தகப்பனார் கருதினார்.

இந்த இரு கட்சியினர்களுக்கும் இடையே பின்னடி வந்த பிளவுதான் தீர்க்கமுடியாத அரசியல் பிரச்னையாகப் போய்விட்டது. ஆனால் இதிலும்கூடத் தம்மால் இரு கட்சியினருக்குள்ளும் சமாதானம் ஏற்படுத்த முடியு மென்று நம்பினார். முஸ்லிம்களைக் கூட்டுத்தொகுதிமுறைக்கு ஒப்புக்கொள்ளும்படிச் செய்வதற்காக மத்திய சபையில் ஐந்து ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துவிடவேண்டும் முஸ்லிம்களுக்காக என்று தகப்பனார் அபிப்பிராயப் பட்டார். ஆனால் மகாத்மாஜியும் மற்றக் காங்கிரஸ்காரர்களும் ஒப்புக்கொள்ளவில்லை.

இரண்டாவது: பூர்ண சுயராஜ்யம் வேண்டுமென்ற தீர்மானத்திற்கு மகாத்மாஜி அந்நாளில் எதிரிடையாக இருந்தது.

மூன்றாவது: அடிக்கடி காங்கிரஸ்காரர்களைச் சிறை செல்லச் சொல்லுவதும், உத்தியோகங்களையும் பள்ளிக்கூடங்களையும் விடச் சொல்லுவதும் வியர்த்தமான பலி—வீணான தியாகம்—என்று என் தகப்பனார் கருதியது.

நான்காவது: மதத்தையும் அரசியலையும் ஒன்றாக்கி விடுவதால் இரண்டும் குழம்பிக் கெட்டுப்போகும் என்று இவர் நினைத்தது. அஹிம்ஸா தர்மம் முதலியன மதக்கொள்கைகள்தான் என்பது இவர் அபிப்பிராயம். இத்தகைய காரணங்களால் என் தந்தையாருக்கும் மஹாத்மாவுக்கும் இடையே இருந்த பிளவு பெரிதாயிற்று.

* * *

1926-ம் வருஷம் கௌஹதி காங்கிரஸுக்கு என் பிதா தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் கௌஹதி காங்கிரஸுக்குத் தீர்மானங்களைத் தயாரித்துக் கொண்டிருந்த சமயம் மகாத்மாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவர் அதில், "நீ ஆழம்

தெரியாமல் கால் வைத்துவிடுகிறவன், எச்சரிக்கை செய்கிறேன்'' என்று பொருள்பட எழுதி யிருந்தார். அதைத் தந்தையார் என் தாயாரிடம் சொல்லி, "நான் என்ன பதில் எழுதினேன் தெரியுமோ? 'உங்கள் ஆசீர் வாதத்தினால் நான் நீந்திக் கரையேறி விடுவேன்.' என்று எழுதிவிட்டேன்'' என்றார்.

கௌஹாதி காங்கிரஸுக்கு என்னை அழைத்துக் கொண்டு போகும்படி எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன். "நீங்கள் தலைவராக இருந்து நடத்தும் காங்கிரஸ் மகா சபையின் நடவடிக்கைகளையும், அந்த நாற்பத்தோரு யானை பூட்டிய ஊர்வலத்தையும் நான் பார்க்க வேண் டாமா?'' என்றும் கேட்டுப் பார்த்தேன். அது நாற்பத் தோராவது காங்கிரஸானதால் நாற்பத்தோரு யானைகள் பூட்டிய ரதத்தில் ஊர்வலம் நடத்துவதாகத் தீர்மானித் திருந்தார்கள். ஸ்வாமி சிரத்தானந்தர் எதிர்பாராத நிலையில் கொலையுண்டதால் அந்த ஊர்வலத்தை நடத்த வேண்டாமென்று தகப்பனார் சொல்லிவிட்டார்.

தமக்குக் கிடைக்கும் புகழையும் பதவியையும் தம் குடும்பத்தார் கேட்டும் பார்த்தும் அனுபவிக்க வேண்டும் என்று தகப்பனார் எப்பொழுதும் விரும்பியதில்லை. எங்களை எந்தக் கூட்டத்திற்கும் கொண்டாட்டங்களுக்கும் அழைத்துக் கொண்டு போகமாட்டார். வீட்டைவிட்டு வெளியே போய்விட்டாலோ, வீட்டு ஞாபகமும் வீட்டார் ஞாபகமும் இவருக்கு வருவதில்லை.

எனினும் தம் குடும்பத்தாரின்மீது இவருக்கு இருந்த பாசத்திற்குக் குறைவுண்டோ? இவருடைய வாத்ஸல்யத்தின் ஆழம் நாங்கள் யாராவது நோய்வாய்ப் படும்போது புலனாகும். மணிக்கொருதரம் டாக்டரை வரவழைப்பார். அரைமணிக் கொருதரம், "குழந்தைக்கு என்னமாய் இருக்கிறது? டெம்பரேச்சர் எடுத்தாயா?'' என்றெல்லாம் தொணதொணப்பார். 20, 25 வய தானாலும் நாங்கள் இவர் கண்ணில் என்றும் குழந்தைகள் தான்!

ஒரு சமயம் தகப்பனார் நாகபுரி காங்கிரஸுக்குப் புறப்பட எல்லாம் தயாராகிவிட்டது. சாமான் வண்டியும், பரிசாரகனும் ரயிலுக்குப் போய்விட்டார்கள். அந்த ஸெஷனுக்குச் சேலம் ஸி. விஜயராகவாச்சாரியார் தலைமை வகிக்க ஏற்பாடாகி யிருந்தது. ஆதலால் நாகபுரிக் காங்கிரஸுக்குப் போகத் தகப்பனார் மிகவும் ஆவலுடன் இருந்தார். அன்றைய தினம் என் பையனுக்குக் கடும் ஜ்வரம்; மாலை 105 டிகிரி ஏறிவிட்டது. இந்தச் செய்தி தகப்பனாருக்குத் தெரிந்தது. இவர்முன் எதையும் மறைக்க முடியாது; பொய் சொன்னாலும் அகப்பட்டுக் கொள்வோம்; தூண்டித் துளைத்து உண்மையை வரவழைத்து விடுவார்.

டெம்பரேச்சர் '105' என்று தெரிந்தது தான் தாமதம், "ஓ போச்சு, போச்சு!" என்று அலறினார். ஓடினார் கேட் வரை; "டாக்டரை நானே கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று கிளம்பிவிட்டார். இவரைச் சமாதானம் செய்வதற்குள் போதுமென்றாகிவிட்டது. "குழந்தை இப்படி யிருக்கும்போது நான் நாகபுரிக்குப் போகிறதில்லை" என்று முடிவு செய்துவிட்டார். அந்தக் காங்கிரஸுக்கு இவர் போகவே யில்லை.

டாக்டர்கள் எழுதும் 'பிரெஸ்கிரிப்ஷ'னை யெல்லாம் வாங்கிப் படித்துப் பார்ப்பார். டாக்டர் பரீக்ஷைக்குப் படிக்கவில்லையே தவிர, மருந்துகளின் குணகுணங்களை எப்படியோ படித்துத் தெரிந்து கொண்டுதான் இருந்தார். 'அரைகுறை வைத்திய ஞானம் ஆபத்துக்கு இடம்' என்பது இவர் விஷயத்தில் உண்மை. "என்ன டாக்டர்? இந்த மருந்து ரொம்ப சக்தி வாய்ந்தது! இதனால் ரொம்பக் கெடுதலான விளைவு அல்லவா உண்டாகும்?" என்பார். "என்ன டிஜிடாலிஸ் (ஹிருதயத்துக்குக்) கொடுத்திருக்கிறீர்களே? ஹிருதயம் ரொம்ப பலவீனமாக இருக்கிறதோ?" என்பார் மற்றொரு 'பிரெஸ்கிரிப்ஷ'னைப் பார்த்து. டாக்டர்களுக்கும் இவரிடம் பயம் தான். இவர் வீட்டில் வைத்தியம் செய்பவர் ரொம்பவும் சாமர்த்தியசாலியாக இருக்கவேண்டும். நிஜ நிலைமையை

இவரிடமிருந்து மறைக்க முடியாது. தங்கள் சாமர்த்தியத்தில் இவரை நம்பச் செய்யவும் முடியாது. வீட்டுக்கு டாக்டர் வந்தால் இவருடன் அரைமணி வாதாடி, இவரைச் சமாதானப் படுத்தி விட்டுத்தான் திரும்பிப் போக முடியும். என்ன அவசர ஜோலியானாலும் டாக்டர்களும் கூட இவரிடமிருந்து எளிதில் தப்பிவிட முடியாது. அந்தக் கடைசி நாளுக்கு முதல் நாள் இரவு கூட அரை மணி நேரம் பேச்சு டாக்டர் ஸ்ரீநிவாஸனிடம். அந்தப் பேச்சுத்தானே எல்லோரையும்—எங்களையும், அந்த டாக்டரையும் கூட—ஏமாற்றிவிட்டது!

* * *

1930-32-ம் வருஷங்களில் நான் காந்தி இயக்கத்தில் ஈடுபட்டு இவர் சம்மதமின்றிச் சுதேசி வேலை செய்து வந்தபோது சுமார் இரண்டு வருஷ காலம் என்னுடன் சரியாகவே முகங் கொடுத்துப் பேசாமலிருந்து விட்டார். நான் எங்கெங்கே போகிறேன், என்ன என்ன வேலை செய்கிறேன் என்பதெல்லாம் மெள்ளத் தாயார் மூலம் கேட்டு விசாரித்துத் தெரிந்துகொள்வார். தாயார் மூலமாகவும் எனக்குப் புத்தியும் சொல்லிப் பார்ப்பார். நான் எதிர்ப்படும்போதெல்லாம் கடுமையாக முகத்தை வைத்துக் கொள்வார். அந்தக் காலங்களில் இவர் இருக்கும் பக்கம் போவதென்றாலே எனக்குக் கொஞ்சம் தயக்கம்தான்.

நான் சிறை சென்ற தினம் கூட இவரிடம் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் நான் சிறைப்பட்டது தான் தாமதம், மனங் கசிந்துவிட்டார்; உடனே போலீஸ் 'லாக்கப்'பில் வந்து பார்த்துவிட்டுப் போனார். நான் வேலூர் ஜெயிலுக்குக் கொண்டுபோகப்பட்டதும் வாரா வாரம் பெரிய பழக் கூடையுடன் தாயாரையும் அழைத்துக்கொண்டு 'இண்டெர்வ்யூ'வுக்கு வந்துவிடுவார்.

முதல் 'இண்டெர்வ்யூ'வில் இருவருக்கும் இடையே கம்பிக்கூடு இருந்ததைக் கண்டு, "இந்தக் கூட்டுக்கிடையே அவனை நான் பார்க்கமாட்டேன்!" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார். நல்ல வேளை

யர்க இரண்டாவது 'இண்டேர்வ்யூ'வுக்குள் அந்தக் கூட்டை எடுத்து விட்டார்கள்.

* * *

1927-ம் வருஷம் சென்னையில் காங்கிரஸ் கூடியது. அதை வெகு விமரிசையாக நடத்த வேண்டிய ஏற்பாடெல்லாம் தகப்பனார் செய்திருந்தார். செட்டிமார் நாடு முதலிய பிரதேசங்களி லெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து பெருந்தொகை வசூலித்து வந்தார். அப்பொழுது நான் ரொம்பவும் அசௌக்கியமாக இருந்ததால் காங்கிரஸ் கூட்டத்தின் விவரம் ஒன்றும் எனக்குத் தெரியாது. "இந்தியாவுக்குப் பூர்ண சுதந்திரம் வேண்டும்" என்ற தீர்மானம் இந்தக் காங்கிரஸில் நிறைவேறியது, தகப்பனாரின் பெரு முயற்சியினாலே.

சென்னைக் காங்கிரஸுக்காகத் திரட்டிய நிதியைக் கொண்டு, வெகு திறமையாக எல்லா ஏற்பாடுகளைச் செய்தது மல்லாமல், அதை மிச்சப் படுத்தியும் இருந்தார். மிஞ்சிய பணத்தைக் கொண்டு ராயப்பேட்டையில் நிலம் வாங்கி அதில் காங்கிரஸ் மாளிகையைக் கட்ட ஏற்பாடு செய்தார். துரதிர்ஷ்ட வசமாக, அந்த மாளிகை முற்றும் 1939-ம் வருஷம் நடந்த சுதேசிப் பொருட் காட்சியில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாகச் சாம்பலாகி விட்டது.

இந்தக் காங்கிரஸ் ஸெஷனுக்குச் சில வாரங்களுக்கு முன்னே என் தகப்பனார், "ஸ்வராஜ்ய அரசியல் திட்டம்" என்ற ஒரு சிறிய புஸ்தகத்தை வெளியிட்டார்.

* * *

சென்னைக் காங்கிரஸுக்குப் பிறகு 1928-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இவர் ஐரோப்பாவுக்குப் போனார். ஆஸ்ட்ரியா, ஸ்விட்ஸெர்லண்டு, ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து முதலிய தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார் மூன்று மாதகாலம்.

ரஷ்யாவில் இவர் ஸோவியத் ஸர்க்காரின் அதிதியாகவே போயிருந்தார். மாஸ்கோவுக்குச் சென்று லெனி

யெல்லாம் சுற்றிப் பார்த்தார். 'கிரம்லின்' அரண்மனை யில் மார்ஷல் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசினார். ஆம், இன்று "வல்லவர் மூவர்" என்று சொல்லப்படும் ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகியவர்களில் இந்த வெற்றிக்கு முக்கிய காரணராக விளங்கும் இதே ஸ்டாலி னைத்தான்.

இங்கிலாந்தில் பார்லிமெண்ட் அங்கத்தினர் பலரை யும் சந்தித்துப் பொதுவாக அரசியல் விஷயங்களைக் குறித்துப் பேசினார். டப்ளினுக்குச் சென்று சுதந்திர அயர்லாந்தின் உயிர்நிலையாகிய டி வலேராவைச் சந் தித்து ஐரிஷ் குடியரசைப் பற்றியும், இந்தியரின் கோரிக்கையைப் பற்றியும் பொதுவாகப் பேசினார்.

* * *

இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வருவ தற்குள் சர்வ கட்சி மகாநாட்டின் தீர்மானப் பிரகாரம் நேரு கமிட்டியார் தயாரித்த யாதாஸ்து வெளியாகி யிருந்தது. அதில் தாம் அடிக்கடி வற்புறுத்திவந்த அபிப்பிராயங்களைக் காணாதபடியால், 'ஹிந்து—முஸ்லிம்' ஒற்றுமைக்கு இனி வழியில்லையே!' என்று மன முடைந்து போனார்.

சென்னைக் காங்கிரஸில் ஹிந்து, முஸ்லிம் ஆகிய இரு கட்சியினரையும் ஒத்துப் போகச் செய்வதற்கான தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருந்தார் தகப்பனார். கல்கத்தா முஸ்லிம் லீகும் சென்னைக் காங் கிரஸின் 'ஒற்றுமைத் தீர்மான'த்தை ஆதரித்திருந்தது. 'நேரு யாதாஸ்து' சென்னைக் காங்கிரஸ் தீர்மானத் திற்கு மாறுபட்டிருந்தது சில அம்சங்களில். இதனால் ஜின்னா ஸர் ஹேப், அலி சகோதரர்கள் முதலான முஸ்லிம் கட்சியினருக்கும் காங்கிரஸ் காரர்களுக்கும் இடையே கடும் பிளவு ஏற்பட்டுவிட்டது.

இந்த விஷயங்களால் தகப்பனார் காங்கிரஸ் நடவடிக் கையின் மீது அதிக அதிருப்தி கொள்ளலானார். நேரு வின் பக்கத்தில் மகாத்மா இருந்துகொண்டு தமக்குப்

பட்சபாதமாய் நடப்பதாக அவர்மீது குற்றம் சாட்டினார், கோபம் கொண்டார். முன்னமே புகைந்து கொண்டிருந்தது இப்பொழுது பன்மடங்கு விருத்தியாகிவிட்டது.

1928-ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸில் பகிரங்கமாக இவ்விஷயங்களைக் கண்டித்துப் பேசினார் தகப்பனார். சென்னைக் காங்கிரஸ் தீர்மானித்தபடி நேரு யர்தாஸ்து இல்லை என்பதை எடுத்துக் காட்டினார். அந்தக் காங்கிரஸிலே மகாத்மாவுக்கும் இவருக்கும் பரஸ்பர அபிப்பிராய பேதத்தின் காரணமாக மனஸ்தாபம் வலுத்தது; காங்கிரஸிலிருந்து மிகவும் கோபமாகச் சென்னைக்குத் திரும்பினார்.

*　　*　　*　　*

சென்னையில் இவர் கட்சியை ஆதரித்த தலைவர்கள் அடிக்கடி 'அம்ஜத் பாக்'கில் கூடிப்பேசி மகாத்மாவுக்கும் இவருக்கும் இடையே ஏற்பட்ட மனஸ்தாபத்தைத் தீர்த்துவைத்தார்களா? அதுதான் இல்லை! பின்னும் அதிகரிக்கும்படியே செய்தனர்.

1929-ம் வருஷம் லாகூரில் காங்கிரஸ் கூடிற்று. அதற்குத் தந்தையார் போயிருந்தார். தகப்பனாரும் சுபாஷ் சந்திரபோஸும் காங்கிரஸின் சில தீர்மானங்களை எதிர்த்துப் பேசி அதில் வெற்றியும் பெற்றனர். அதனால் சில காங்கிரஸ் தலைவர்களுக்கு இவர்களிடம் வெறுப்பு உண்டாயிற்று. அதன்பயனாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இவர்கள் ஸ்தானம் பெறமுடியாமல் அவர்கள் செய்து விட்டார்கள். அதனால் கோபமடைந்து என் பிதா வேறு சிலருடன் காங்கிரஸை விட்டு வெளியே வந்துவிட்டார்.

உடனே "காங்கிரஸ் ஜனநாயகக் கட்சி" என்று ஒரு புதிய கட்சியைத் தோற்றுவித்தார். தகப்பனார் அதன் தலைவராகவும் சுபாஷ்சந்திரபோஸ் அதன் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய கட்சியின் லட்சியமும் கொள்கைகளும் வகுக்கப்பட்டன.

சென்னைக்குத் திரும்பி வந்ததும் தகப்பனாரின் மனம் அரசியல் விஷயங்களில் முற்றிலும் வெறுப்புக் கொள்ள

லாயிற்று. புதிய கட்சியின் வேலையிலும் மனம் செல்ல வில்லை.

தமது உழைப்பு, தாம் செய்த தியாகம், பட்டசிரமம் எல்லாம் வீணாகிவிட்டன, தேசத்திற்காவது சமூகத்திற்காவது யாதொரு லாபமும் இல்லை, தம்முடைய நல்ல வேலையெல்லாம் பிறர் கெடுத்து விடுகின்றனர்—என்ற எண்ணம் மனத்தில் வேரூன்றிப்போனதே, தகப்பனார் காங்கிரஸை விட்டு விலகியதற்கு முக்கிய காரணம்.

இவர் காங்கிரஸிலிருந்து விலகியதைப் பற்றி வெறுப்போடு மிகக் காரமாக எழுதினார் மகாத்மா. அதைப் படித்ததும் தகப்பனாருக்கு எரிகிற நெருப்பிலே எண்ணெய் ஊற்றினாற்போல இருந்தது. மகாத்மாவின்மீது அசாத்திய கோபம் வந்துவிட்டது. நான் எவ்வளவோ முயன்றேன், இவரைச் சமாதானப் படுத்த. என் வார்த்தைகள் கோபத்தைப் பின்னும் கிளறிவிட்டனவே யன்றி இவர் மனதை மாற்ற முடியவில்லை. என் உள்ளம் படாத பாடு பட்டது. மகாத்மாவின் மீது எனக்குக் கூடச் சிறிது கோபம் உண்டாயிற்று.

'எந்த நிலைமையிலும் சாந்தமூர்த்தியாய்த் துலங்குபவர், நிதானமாய் நடந்து கொள்பவர், இப்படி ஏன் காரமாக எழுதித் தந்தையைப் பின்னும் விரோதித்துக் கொண்டார்?' என்று எண்ணி எண்ணி வருந்தினேன். மகாத்மா அந்தக் கடிதத்தை எழுதியிராவிட்டால் தகப்பனார் அவ்வளவுதூரம் அவரை விட்டும், காங்கிரஸை விட்டும் பிரிந்து போயிருக்க மாட்டார் என்பது என் கருத்து.

தாம் காங்கிரஸை விட்டு வெளிவந்த காரணத்தை விளக்கி 1939-ல் ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு அனுப்பினார் ஸ்ரீநிவாஸையங்கார். அதில் இவர் கூறியதாவது:—

"........சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்க வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவருவதற்கு இரண்டு மாதத்

திற்கு முன்பே நான் காங்கிரஸை விட்டு விலகிவிட்டேன். அதற்குக் காரணம் கீழ் வருபவைகளே.

நான் கொண்டுவந்த ஹிந்து-முஸ்லிம் சமரசான உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டமை, நான் ஆதரித்து வந்த பூர்ண சுதந்திர இயக்கத்திற்கு மஹாத்மா காந்தி, நேரு முதலிய காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள் விரோதமாக இருந்தமை, இவை இரண்டும் எங்களிடையே மனக்கசப்பை உண்டாக்கிவிட்டன.

ஏற்கெனவே கல்கத்தாக் காங்கிரஸில் ஏற்பட்ட இந்தப் பெரிய பிளவு 1929-ம் வருஷ மத்தியில் வேதாரணியம் மகாநாட்டில் இன்னும் அதிகமாகி விட்டது. ஆகையால் லாகூர்க் காங்கிரஸில் நான் அதைவிட்டு விலகிப் போவதாக வேதாரணியத்திலேயே கூறியிருக்கிறேன்.

திருக்குறுங்குடியிலும் இதையே திரும்பச் சொல்லியிருக்கிறேன் லாகூர்க் காங்கிரஸுக்குப் பலமாதங்களுக்கு முன்பே. மற்றும் சில இடங்களிலும், 'சுதேசமித்திரன்' கட்டடத்தில் நடந்த தொழிலாளர்களின் கூட்டத்தில் வரவேற்புப் பத்திரத்திற்குப் பதில் அளிக்கையிலும், இதையே சொன்னேன். கடைசியில் இந்த வருந்தத்தக்க 'நட்பு' எங்கள் இரு கட்சியினர் இடையேயும் முற்றியது; அது லாகூர்க் காங்கிரஸிலே. காந்தி கட்சிக்கும் என் கட்சிக்கும் அதிக முரண்பாடு இருப்பதாக மகாத்மா காந்தியே அந்தக் காங்கிரஸில் வெளியிட்டார்.

அதன்பின் அடிப்படையான கொள்கைகளில் அபிப்பிராய பேதமுடைய சகாக்களுடன் கூடி வேலை செய்வது சாத்தியமற்றுப் போயிற்று. இந்த நிலைமை எனக்கு வருத்தத்தை அளித்தது மல்லாமல் என்னுடைய சுயமரியாதைக்கும் பாதகமாக இருந்தபடியால்தான் நான் காங்கிரஸை விட்டு விலகிக் கொண்டேன்.''

* * *

எனக்கு மகாத்மாவிடம் அபார பக்தி ஏற்பட்டிருந்தது. தகப்பனாருடைய அபிப்பிராயங்களைக் காட்டிலும் காந்தியின் கொள்கைகளும் அபிப்பிராயங்களுமே

எனக்குப் பிடித்திருந்தன. அஹிம்ஸா முறையில் அவர் சொல்வது யாவும் சரி என்றே எண்ணினேன். ஆகையால், 1930-32-ம் வருஷங்களில் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் நானும் கலந்து கொண்டேன், தகப்பனரின் விருப்பத்திற்கு விரோதமாகவே.

எனினும், அரசியல் விஷயங்களில் இவருக்குள்ள அனுபவத்தையும் அறிவையும் உத்தேசித்து எனக்கு முற்றிலும் தைரியம் வரவில்லை. காங்கிரஸில் சேராமலே 'சென்னை மாதர் சுதேசி லீக்' என்ற ஸ்திரீகளின் ஸ்தாபனம் ஒன்றின் மூலம் சுதேசிப் பிரசாரம் முதலியவற்றைச் செய்துவந்தேன்.

இந்தக் கர்ரியங்களில் தகப்பனர் என்னைத் தடுக்கவில்லை. என் இஷ்டப்படி வேலை செய்து வரும்படி விட்டு விட்டார். அரசியல் பிரச்னைகளில் மட்டும் நான் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது என்று சொல்லியிருந்தார். நான் சுதேசிப் பிரசாரத்தின் காரணமாக மறியல் செய்து சிறை செல்ல விரும்பியவுடன் அவருக்கு என்மீது மிகவும் கோபம் வந்துவிட்டது. என்னைக் கண்டாலே பிடிக்காதது போலவும் நடந்துகொள்வார் சிலசமயம்.

* * *

நான் சிறையிலிருந்து வெளி வந்ததும் மகாத்மாஜியுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டேன். சென்னையில் அவர் வந்தபொழுதெல்லாம் அவரைப் போய்த் தரிசித்து வந்தேன். தகப்பனர் என்னைத் தடுக்கவில்லை. எல்லா விஷயங்களிலும் உதாசினமாக இருந்தார்.

மகாத்மா தம் ஹரிஜன யாத்திரையின்போது சென்னைக்கு வந்த சமயத்தில், என்மூலம் என் தகப்பனரைக் கண்டு பேசி இவரை மறுபடியும் காங்கிரஸில் சேரும்படி அழைத்தார்.

முன்பு ஏற்பட்டிருந்த பரஸ்பர மனஸ்தாபம் இப்பொழுது இவர்களிடம் காணப்படவில்லை. இருவர் கோபமும் தணிந்து போய்த்தான் இருந்தது; ஆனல்

அபிப்பிராய பேதங்கள் மட்டும் அப்படியே தீராத இடையூறாக இருவருக்கும் குறுக்கே நின்றது. இதுதான் இவர்கள் சம்பாஷணையிலிருந்து நான் தெரிந்து கொண்டது. பரஸ்பர க்ஷேமலாபங்களைப் பற்றிப் பழைய சிநேகத்துடன் பேசிக்கொண்டனர். இனிமேல் இருவரும் ஒத்துப்போக முடியாது என்பதை இருவரும் தெரிந்து கொண்டனர். அதற்காக இருவரும் விசனப்பட்டார்கள் என்றும் தெரியவந்தது.

* * *

நான் வர்தா ஆசிரமத்துக்குப் போய்க் கொஞ்சகாலம் காந்திஜியுடன் இருந்து ஆச்ரம வாழ்க்கை நடத்தவேண்டுமென்று ரொம்ப நாளாக விரும்பி வந்தேன். பம்பாய்க் காங்கிரஸுக்குப் போனபோது அதற்கான அனுமதியையும் காந்திஜியிடமிருந்து பெற்று வந்தேன்.

திரும்பி வந்து தகப்பனாரிடம் நான் இதைச் சொன்னபோது இவர் கண்டிப்பாக என்னைப் போகக் கூடாது என்று சொன்னார். நான் சாப்பிடாமலிருந்து ரொம்ப முரண்டு செய்தேன். கடைசியாக என் இஷ்டத்திற்கு இணங்கிவிட்டார். தாமே என்னைக் கூட்டிக் கொண்டுபோய் ஆச்ரமத்தில் விடுவதாகவும் புறப்பட்டு விட்டார். இங்ஙனம் அந்த வணங்காமுடிச் சிங்கமும் இந்தப் பேதைப் பெண்ணுக்காகத் தலை வணங்க நேர்ந்தது!

மகாத்மாவும் உண்மையான மகாத்மா ஆனபடியால் தகப்பனார் ஆச்ரமத்துக்கு வந்ததும் வெகு அன்புடனும் மரியாதையுடனும் இவரை வரவேற்று உபசரித்தார். அன்றெல்லாம் மகாத்மா பல பொது விஷயங்களைப் பற்றித் தகப்பனாருடன் பேசிக்கொண்டிருந்தார்.

தகப்பனார் அன்று மாலையே ஊருக்குப் புறப்பட்டார். புறப்பட்டுப் போகும்போது இவர் கண்களில் நீர் வந்துவிட்டது. எனக்கு என் உடம்பைக் கவனித்துக் கொள்ளத் தெரியாதென்றும், என்னைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும் காந்திஜியிடம் கேட்டுக் கொண்டார்.

"நீங்கள் கவலைப்படாதீர்கள். அம்புஜத்தை நான் கவனித்துக் கொள்கிறேன். உங்களிடம் சீக்கிரம் திருப்பி அனுப்பி விடுகிறேன்" என்று சொல்லித் தேற்றி யனுப்பினார் மகாத்மா.

நான் சுமார் ஒன்றரை மாதம் ஆச்ரமத்தில் தங்கியிருந்தேன். இதற்குள் என்னை அனுப்பும்படிப் பல கடிதங்கள் எழுதிவிட்டார் தகப்பனார். மகாத்மாவும் என்னைப் போகச் சொல்லிக்கொண்டிருந்தார். நான்தான் பின்னும் சில மாதங்கள் அங்கேயே இருக்க விரும்பினேன்.

இதற்குள் என் தாயாரைத் துணைகூட்டி அனுப்பி விட்டார் தகப்பனார், என்னை அழைத்துக்கொண்டு வரும்படி. அவளே நேரில் வந்தபடியால் என்னை இனிமேல் அங்கே இருக்கக்கூடாதென்று மகாத்மா கட்டளையிட, அதன்படி நானும் திரும்பிவிட்டேன்.

* * *

நான் சென்னைக்கு வந்த பிறகு மகாத்மாவிடமிருந்து பின் வரும் கடிதம் என் தந்தைக்கு வந்தது:

அன்புள்ள நண்பரே,

தங்கள் கடிதத்திற்கு வந்தனம். என்னோடு தங்கியது அம்புஜத்திற்குப் பிரயோஜனமா யிருந்த தென்று தாங்கள் இருவரும் (தாங்களும் தங்கள் மனைவியும்) அபிப்பிராயப்படுகிறீர்கள் என்பதை அறிந்து நான் பெரு மகிழ்ச்சி அடைந்தேன். என்னால் இயன்றவரை அம்புஜத்திற்கு எந்த வழியிலாவது உதவி புரியக்கூடுமானால், அதை நான் ஓர் உரிமையாகவே மதிக்கிறேன். அவளுக்கு வழிகாட்டும் என் முயற்சி விஷயமாகத் தாங்கள் சொல்லுகிற எந்த ஆலோசனையையும் நான் வரவேற்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

11-12-43. எம். கே. காந்தி

இந்தக் கடிதத்தை என் தந்தைக்கு என் ஸ்வீகாரத் தந்தையிடமிருந்து வந்த கடிதமாகவே போற்றுகிறேன்.

* * *

மகாத்மா உலகத்துக்கே வழி காட்டப் பிறந்த ஒரு லட்சிய புருஷர்; தீர்க்கதரிசி; சமயாசாரியருங்கூட. சத்தியம், அஹிம்ஸை என்ற ஹிந்து தர்மத்தின் இரண்டு வேதமொழிகளையும் தம் ஹிருதயக் கோயிலிலே வைத்துத் தொழும் பக்தமணி. அவர் பாரத மாதாவின் பலி பீடத்திலே தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஸமர்ப்பிக்க என்றும் சித்தமாய் இருப்பவர். தம்மைச் சேர்ந்தவர்களையும் அத்தகைய தியாகத்திற்கு உட்படுத்தப் பின்வாங்காதவர். அவரை ஸ்வீகாரத் தந்தையாகப் பெறும் பாக்கியம் எப்பேர்ப்பட்ட பாக்கியம்!

எஸ். ஸ்ரீநிவாஸையங்காரோ விடாமுயற்சியுடன் உண்மையாகத் தொண்டு புரிந்த தேசபக்தர். தேசத்திலே கிடைத்தற்கு அரிய அறிவாளி; மேதாவி; வழக்கறிஞர். குடும்பத்தாருடையவும், நண்பர்களுடையவும் துயரமெல்லாம் தாங்கி ஆறுதல் அளிக்கும் ஆதார ஸ்தம்பம்: பரந்த மனம் படைத்த பரோபகாரி. இவரைச் சொந்தத் தந்தையாகப் பெற்ற பாக்கியம்தான் என்ன பாக்கியம்!

ஆனால் இருவரையும் ஒன்று சேராமல் பிரித்து வைத்த என் துர்ப்பாக்கியமானது அம்மம்ம, கொடிது, கொடிது! மிகவும் கொடிது!! அந்த நினைப்பே என் உள்ளத்தை இன்னும் வாட்டுகிறது. என் பொருட்டாக மட்டும் அன்று, என் தாய் நாட்டின் பொருட்டாகவும் தான்.

* * *

தந்தையார் 1929-ம் வருஷம் காங்கிரஸை விட்டு விலகியதும் வீட்டை விட்டு அடியோடு வெளியில் போகாமல் இருந்துவிட்டார். இது எங்களுக்கெல்லாம் ரொம்ப வியப்பை விளைவித்தது. காலை 6 அல்லது 6-30 மணிக்குள் எழுந்துவிடுவது அவருடைய வழக்கம். அதுமுதல் இரவு 9 அல்லது 10 மணி வரை சதா நண்பர்களுடன் பேசுவதும், வெளியில் போவதும், படிப்பதுமாக இருந்தவர் பகலில் இளைப்பாறுவதும் ரொம்ப அபூர்வம். எப்பொழுதும் பொது வேலையிலேயே ஈடுபட்டிருந்தவர், அரசியல் விஷயமான சர்ச்சைகளையே

பண்ணிக்கொண்டிருந்தவர், இப்பொழுது எப்படிப் பொழுதைப் போக்குவார்? சும்மா இருக்க எப்படி முடியும்? இது எங்கள் புத்திக்குச் சற்றும் எட்ட வில்லை. அவரோ நாள் பூராவும் டிராயிங்-ரூம் ஸோபா வில் சாய்ந்த வண்ணம் ஏதாவது புஸ்தகங்களைப் படித்துப் பொழுது போக்கி வரலானார். ஒருவிதமான கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. ரொம்ப நிம்மதி யாகவே இருப்பதாகக் காணப்பட்டது. ஆனால் மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பார்களே! அது போலக் காங்கிரஸிலிருந்து இவர் விலகியும், காங்கிரஸ் அரசியல் இவரை லேசில் விடுவதாக இல்லை. காங் கிரஸுக்குள்ளாகவே வேறு கட்சி ஒன்றை அமைத்து நடத்தும்படி பல நண்பர்கள் கூட்டங் கூட்டமாக வந்து இவருக்குத் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தனர்.

சென்னை மாகாண அரசியல் வானத்திலிருந்து இவர் மறைந்தது ஒரு பெரிய இருட்டையே உண்டாக்கிவிட்டது சில காலம்வரை—ஏன் வெகு காலம்வரை—என்றுகூடச் சொல்லலாம்.

காங்கிரஸ் நண்பர் பலரும் இவரைக் காங்கிரஸில் திரும்பவும் சேரும்படி அழைக்க வந்தனர்.

எவர் அழைப்புக்கும் இவர் அசையவில்லை. "எனக் குக் காங்கிரஸின் தற்போதைய போக்குச் சற்றும் பிடிக்க வில்லை. ஆனால் காங்கிரஸுக்கு எதிராக நான் ஒன்றும் செய்யப் போவதில்லை; புதிய கட்சி ஒன்றை நிறுவப் போவதுமில்லை. காந்தியின் திட்டப்படிதான் இவர்கள் வேலைசெய்து பார்க்கட்டுமே! தானே தெரியப் போகிறது, நான் சொல்வதுதான் சரியென்று. காந்தி சொல்வதில் எனக்குச் சற்றும் நம்பிக்கை யில்லை. ஆகையால் காங்கிரஸை விட்டு விலகிவிட்டேன். மதத்தையும் அரசிய லையும் ஒன்றாகச் சேர்த்துக் குழப்புவது கூடாது. அதை நான் வெறுக்கிறேன். சுத்த முட்டாள்கள் நான் செய்த காரியங்களை எல்லாம் குட்டிச் சுவராக்கி விட்டார்கள்! இனிமேல் காங்கிரஸ் எப்படிப்போனால் எனக்கு என்ன?



"I do not care" என்று ரொம்பக் கோபமாகப் பேசி அனுப்பி விடுவார். பொது மனிதர்கள் (இரண்டு கட்சியையும் சேராதவர்கள்) யாராவது வந்து ஏதாவது பொது வேலையில் ஊக்கம் கொள்ளும்படித் தூண்டுவார்கள். "நான் அரசியல் வேலையிலிருந்து முற்றிலும் விலகிவிட்டேன். எனக்கு இவைகளிலெல்லாம் நம்பிக்கை யில்லை. உங்களுக்கு நம்பிக்கை யிருந்தால் நீங்கள் எது வேணுமானாலும் செய்துகொண்டு போங்கள், எனக்கு அக்கறையில்லை. என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்று தீராத வெறுப்புடன் பேசி அனுப்பி விடுவார். காங்கிரஸை விட்டு விலகியது—அரசியலிலிருந்து விலகியது—இவருக்கு எவ்வளவு வருத்தத்தை அளித்தது என்பதை இந்தப் பேச்சுக்கள் விளக்கின.

அரசியலே, இவருடைய உயிர் எனலாம்; தாய் நாட்டின் விடுதலை அந்த உயிர்த் தீயை மூட்டிய கனல்; அந்தக் கனலை ஊதிக் கொழுந்துவிட்டெரியச் செய்தது காங்கிரஸ் ஸ்தாபனம்தானே?

காங்கிரஸை இவர் விட்டு விலகிய புதிசில், இவர் இல்லாத குறையை—இவருடைய தேவையை — காங்கிரஸ்

நேயர்கள் அவ்வளவாக உணர்ந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, 'அப்பாடா' என்று கொஞ்சம் மூச்சு விட அவகாசம் கிடைத்ததுபோல நிம்மதி அடைந்தனர் என்றே சொல்லலாம். ஆனால் போகப் போக, இவர் இல்லாதது காங்கிரஸுக்குத் தென்னிந்தியர் சம்பந்தபட்ட வரையில் எவ்வளவு பலக்குறைவை உண்டாக்கிவிட்டது என்பதை உணர்ந்தனர் என்றால் மிகையாகாது.

ஸரோஜினி நாயுடு, ஜவர்ஹர்லால் நேரு, ராஜன் பாபு முதலிய தலைவர்கள் சென்னைக்கு வந்தபோது, இவரைவீட்டில் வந்து பேட்டி கண்டனர். ரொம்ப நேரம் பேசிவிட்டுப் போனார்கள். காங்கிரஸில் திரும்பவும் சேர இவரை அழைப்பதே அவர்கள் வந்த உத்தேசம். வருஷங்கள் சென்றும் இவர் தீர்மானம் மாறவில்லை. ஸ்ரீ கே. பாஷ்யம் ஒரு சமயம் இவரைத் தம் வீட்டு விருந்துக்கு அழைத்துக் காங்கிரஸ் சார்பில் இவரிடம் சமரஸம் செய்ய முயன்றார். இவரோ ஒரே ஹடமாக இருந்து விட்டார்.

* * *

அதற்குப் பல காரணங்கள் கூறலாம். இந்தியா பூர்ண சுயராஜ்யம் பெறவேண்டும் என்ற லட்சியம் காங்கிரஸ் அப்பொழுதிருக்கும் நிலையில் நிறைவேறாது என்ற ஓர் எண்ணம் பலமாக இருந்தது. தாம் அதுவரை பாடுபட்டதெல்லாம் வீணாகிவிட்டது என்ற வெறுப்பு; தம்மை உண்மையாக அனுசரிப்பவர் ரொம்பக் கொஞ்சம் என்ற நினைப்பு; 'காந்தியின் செல்வாக்குக்குமுன் தம் செல்வாக்கு செல்லாது' என்ற நம்பிக்கை ஆகியவை காரணம் எனலாம். மேலும், உடல் நலம் குன்றியதால் உண்டான மனச் சோர்வும் ஒரு காரணம் என்று நிச்சயமாகச் சொல்லலாம். இக்காரணங்கள்தான் இவரைத் திரும்பவும் காங்கிரஸில் சேரவிடாமல் செய்துவிட்டன என்று ஊகிக்க இடமிருக்கிறது. குழந்தை முதல் இவருடன் கூடப் பிறந்து அடக்குவாரின்றி வளர்ந்துவந்த அந்தப் பிடிவாத குணம், தம் இஷ்டம் உடனே பூர்த்தி செய்யப் படவேண்டும் என்ற அந்த முரண்டு—அதுவும் ஒரு முகாந்தரமாக இல்லையென்று எப்படிச் செய்ய முடியும்?

தந்தையார், அரசியலிலிருந்து விலகி விட்டாரே யன்றி அரசியல் விஷயங்களில் இவருக்கு இருந்த ருசி விட்டுப் போயிற்று என்று சொல்ல முடியாது.

வெளியே நடக்கும் அரசியல் விஷயங்களைப் பற்றி, வீட்டில் எங்களுடனும் வருபவர்களுடனும் விமர்சனைகள் நடக்கத்தான் செய்யும். எதிர்க் கட்சிக்காரியாக இருந்த என்னுடன் சிற்சில சமயம் வர்தம் புரியத் தொடங்குவார். ஆனால் எனக்குப் பிரதிவாதம் புரியும் சக்தி ரொம்பவும் குறைவானபடியால் இவர் வர்தத்திற்குப் பதிப் சொல்ல இயலாது விழிப்பேன்.

* * *

1935-ம் வருஷம் டிஸம்பர் மாதம் விக்டோரியா பப்ளிக் ஹாலில் சேலம் ஆசாரியாரின் ஐம்பது வருஷ தேச சேவையைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது என் தந்தையாரே அதற்கு அக்கிராசனம் வகித்தார். அன்று வந்தனோபசாரம் கூறுகையில் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் இனிமேல் மயிலை ஸ்ரீமான் ஒரு சந்யாசிபோல் ஒதுங்கி யிருக்க முடியாது எனவும், இவர் வெளியே வந்து தேசத்திற்குத் திரும்பவும் தொண்டு புரியவேண்டிய் காலம் வந்துவிட்டது எனவும் பேசினார். அப்படியே என் பிதா செய்வார் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் இவர் அதற்கெல்லாம் இணங்கவில்லை. சுமார் நாலு வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் சிலர் இவரை அரசியலுக்கு அழைத்தனர். நகரில் இதற்காக ஒரு பெரிய கூட்டம் கூடியது. ராஜீயத்தில் வானப்பிரஸ்தாச்ரமம் கிடையாது எனவும், இப்போது ஐயங்கார் தமக்குரிய ஸ்தானத்தை ஏற்க வேண்டும் எனவும், அன்று 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் தெரிவித்தார். அவரை அடுத்துப் பேசிய ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரும் அவ்விதமே முறையிட்டார். அப்போது, அவசியமிருப்பதாகத் தமக்கு எப்போது தோன்றுகிறதோ, அப்போது தாம் பொது வாழ்வில் பிரவேசிக்கப் போவதாக ஸ்ரீநிவாஸையங்கார் சொன்னார்.

அதன் பின்பு என் பிதா செய்த பிரசங்கங்கள் கணக்கில் அடங்கா. தினமும் புதிய புதிய கருத்துகள் இவர் பிரசங்கத்தில் தென்படும். உத்ஸாகமூட்டும் கொள்கைகளை நாள் தவருமல் இவர் அறிவிப்புகளில் காணலாம். காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டிக்கத் தயங்க மாட்டார்; காரமாய்ப் பேசுவார், ஆனால் காரணமில்லாமல் இருக்காது. மூளைக்கு ஓய்ச்சல் ஒழிவே இராது.

கோடைக்கானலுக்கு ஒரு சமயம் என் தந்தையார் போயிருந்தபோது ஹைதராபாத் வாசியான ஜனுப் மீர் அக்பர் ஆலிகான் என்பவர் இவரைப் பார்க்க வந்திருந்தார். இருவரும் நெடுநேரம் சம்பாஷித்தனர். முடிவில் என் தந்தையார் ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைத் தீர்ப்பதற்காக அவரிடம் கூறிய சில யோசனைகள் ஒரு குட்டிப் புஸ்தக வாயிலாக வெளியாயிற்று. மத்திய ஸர்க்காரிலும் மாகாண ஸர்க்கார்களிலும் ஹிந்து - முஸ்லிம் மந்திரிகள் சமமாக இருக்க வேண்டும். அவர்கள் தம்தம் வகுப்பைச் சேர்ந்த சட்ட சபை அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்குப் பூர்வாங்கமாகத் தற்போதுள்ள கட்சி முறை மறைய வேண்டும். ராணுவத்திலும் சரிசமமான ஸ்தானத்தை வகிக்கவேண்டும் — இவ்விதம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் பாகிஸ்தான் திட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்று என் தந்தையார் மிகவும் ஆசைப்பட்டார்.

* * *

பிறகு இவர் எந்தப் பொது விஷயத்திலும், ஊக்கமின்றி, எந்த வேலையிலும் ஈடுபடாது சும்மா வீட்டில் இருந்ததைப் பார்த்தால் என்னவோ போல் இருந்தது! இவருக்கு ஏற்பட்டிருந்த குடும்பக் கவலையை மறக்க வாவது, ஏதாவது ஒரு பொதுஜன சேவையில் இறங்க மாட்டாரா என்று தோன்றும். அடிக்கடி வற்புறுத்துவேன்; ஏதாவது செய்யும்படித் தூண்டுவேன். ஆனால் இவருக்கு அரசியலில் இருந்த பிடித்தம் வேறு எதிலும் இல்லை; வக்கீல் தொழிலில்கூட என்று சொல்லலாம். ஆகையால் நான் சொன்னது இவருக்கு உத்ஸாக மூட்டுவதாக இல்லை. வற்புறுத்தியதின் மேல்

தாம் கூடிய சீக்கிரம் 'அரசியல்' சம்பந்தமாக ஒரு புஸ்தகம் எழுதப் போவதாக அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். அதற்குள் மெயின் எழுதிய "ஹிந்து லீ" புஸ்தகத்தைப் புதிய தீர்ப்புகளுக்கேற்பத் திருத்திப் பதிப்பிடும் பொறுப்பு வாய்த்தது. அதை ஒப்புக்கொண்டார். சுமார் ஒரு வருஷகாலம் அந்த வேலை நீடித்திருந்தது.

இதன் மத்தியில் சுபாஷ் சந்திரபோஸ் சென்னைக்கு வந்தார். தகப்பனுரைக் கண்டு பேசினர். "பார்வர்ட் ப்ளாக் (Forward block)"கில் சேரும்படி அழைத்தார் ரொம்பவும் வணக்கமாக. தந்தைக்குத் தேச சேவையில் முன் இருந்த உத்ஸாகம் இப்பொழுது இல்லை. சுபாஷ் திட்டத்தையும் முற்றிலும் இவர் ஒப்புக்கொள்ளவில்லை. பழைய உத்ஸாகமும் தன்னம்பிக்கையும் இருந்தால்தானே, புதிய முறையில் மறுபடியும் அரசியல் உலகில் பிரவேசித்து வேலை செய்ய மனம் வரும்? ஆகையால் அந்தச் சந்திப்பினுலும் யாதொரு பயனுமில்லை. சுபாஷின் அழைப்பும் வியர்த்தமாகி விட்டது. ஆனல் திரிபுரா காங்கிரஸ் சுபாஷ் தலைமையின் கீழ் நடந்த போது அந்தக் கூட்டத்துக்கு இவர் போனர். அந்தக் காங்கிரஸ் கூட்டத்திற்குக் கட்டாயம் வரவேண்டுமென்றும், தம் பட்சத்திலிருந்துகொண்டு தமக்கு உதவி புரியவேண்டும் என்றும் சுபாஷிடமிருந்து பலமான அழைப்பு வந்தபடியால், அந்த அழைப்புக்கு இணங்கி இவர் காங்கிரஸுக்குப் போனர். அங்கே சுபாஷின் கோஷ்டி வெற்றி பெற்றிருந்தால் ஒருகால் இவர் திரும்பவும் காங்கிரஸில் சேர்ந்திருக்கலாம்.

சுபாஷ்-கோஷ்டிக்குப் பலமான எதிர்ப்பு இருந்தது பழைய காங்கிரஸ் வாதிகளிடையில். காங்கிரஸின் நடவடிக்கைக்கு வழிகாட்டக் கூடிய தலைவர்கள் சுபாஷைக் கொஞ்சமும் ஆதரிக்கவில்லை. சுபாஷ் கட்சியை 'ஓட்டைப்படகு' என்றும் ஒரு தலைவர் குறிப்பிட்டார். தலைவர்களின் அபிப்பிராயம் அவ்வாறு இருக்கவே,

பொது ஜனங்கள் என்ன செய்வார்கள்? அந்தப் படகில் எப்படி ஏறிச்செல்லத் துணிவார்கள்? கட்சி - பலம் ஏற்படவில்லை சுபாஷுக்கு.

அந்தக் கூட்டத்திற்குப் போனது பயனில்லாமலே போய்விட்டது. "தேசத்திற்குக் கதிமோட்சம் இல்லை; பூரண சுயராஜ்யக் கனவு கனவுதான், நனவாக மாட்டாது!" என்ற அபிப்பிராயத்தையும் கொண்டு திரும்பி வந்தார் தந்தையார் சென்னைக்கு.

1939-ம் வருஷ இறுதியில் ஜெர்மனி யுத்தத்திற்கு எழுந்தது. இந்த யுத்தத்தினால் இந்தியாவுக்கு ரொம்ப ஆபத்து ஏற்படக்கூடும் என்று தெரிந்து தந்தையார் ரொம்பக் கவலைகொண்டார். யுத்தச் செய்தியைச் சரியாகத் தெரிந்து கொள்வதற்காகச் சதா ரேடியோவின் கீழே உட்கார்ந்திருப்பார். ஜப்பானும் யுத்தத்தில் இறங்கக்கூடும் என்பதை எதிர்பார்த்தார். அதனால் தேசத்துக்கு எவ்வளவு ஆபத்து என்பதை இவர் நன்றாக உணர்ந்திருந்தார்.

"எனக்கு அப்போதே தெரியும். அதுதான் அப்போதே சொல்லி வந்தேன், காங்கிரஸ் ஒரு தேசியப் படையை அமைக்கவேண்டும் என்று. அன்னிய நாடுகளின் ஆக்கிரமிப்பிலிருந்தாவது நம்மைக் காத்துக் கொள்வதற்கு நன்றாக ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்ட சேனை ஒன்று நமக்கு அவசியம் என்று நான் சொல்லிக் கொண்டேயிருந்தேன். கேட்டார்களா? இந்த அஹிம்சைக் கொள்கையினால் எல்லாம் கெட்டுப்போச்சு, தேசமே குட்டிச்சுவராகப் போகிறது! நமக்கு என்ன பலம் இருக்கிறது?" என்று அடிக்கடி அங்கலாய்ப்பார்.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து சதா சர்வகாலமும் தேசத்தைப் பற்றித்தான் பேச்சு; அதைப்பற்றித்தான் கவலை; தற்கால அரசியல் நிலைமையைப்பற்றிய அங்கலாய்ப்பு. நண்பர்கள் வற்புறுத்தியதின் பேரில் ஒன்றிரண்டு கூட்டங்களுக்குப் போய்ப் பேசியும் வந்தார். சில பொது விஷயங்களில் ஊக்கம் காட்டவும் முயன்றார். எனினும் எதுவும் நீடித்த பயனை அளிக்கவில்லை.

* * *

1941-ம் வருஷம் ஏப்ரல் 25-ம் தேதி திடீரென்று ஒரு தந்தி வந்தது, கோடைக்கானலிலிருந்து தாயாருக்கு. 'ஜுரத்தால் கஷ்டப்படுகிறேன். நீ வரவேண்டாம், யாரையாவது அனுப்பு' என்று அடித்திருந்தது. வழக்கம்போல் தகப்பனார் இந்த வருஷமும் ஏப்ரல் மாத முதலிலே கோடைக்கானலுக்குச் சென்றார். நாங்கள் யாரும் கூடப்போகச் சந்தர்ப்பப்படவில்லை. தாயாருக்குச் சில வருஷமாக மலை வாஸம் ஒத்துக்கொள்ளுகிறதில்லையாதலால், அவளை வரவேண்டாம் என்று தந்தி அடித்திருந்தார் தகப்பனார். என் சகோதரன் மனைவியும் அப்பொழுது நேர்யுற்றிருந்ததால் பழைய பரிசாரகர்களைக் கூட்டிக்கொண்டு நான்தான் போனேன் கோடைக்கானலுக்கு.

எப்பொழுதும் இம்மாதிரி நான் தனியாகப் போனதில்லை மலைக்கு. அந்தத் தடவை அப்படிப் போனது மனதை என்னவோ சங்கடம் செய்தது. நான் போன தினம் தகப்பனாருக்கு மூன்றாம்நாள் ஜுரம். அதிகம் தான்; எனினும் பயப்படுவதற்கான குறிகள் எதுவும் இல்லை. டாக்டர் 'பயமில்லை' என்றார். 'இந்தத் தடவை பலமாக வந்துவிட்டது ஜுரம், பாப்பம்மா!' என்றார் தகப்பனார், என்னைப் பார்த்ததும். இவருக்கு உடம்புக்கு வந்தால் எப்பொழுதும் கொஞ்சம் அதிகப்படுத்திக் கூறுவது வழக்கம்தான். பிரமாதமாக வந்துவிட்டதாகவே பயப்படுவார். டாக்டர் வார்த்தைகளையும் நம்பமாட்டார். தாமே ஒரு நிர்மானத்திற்கு வந்துவிடுவார். அதுபோலத்தான் இந்தத் தடவையும் வீணாகப் பயப்படுகிறார் என்று எண்ணினேன்.

ஐந்தாறு நாளாகியும் ஜுரம் விடாமற் போகவே பட்டணத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டேன். பட்டணத்திற்கு வந்தால், பழக்கமுடைய டாக்டரைக் கொண்டு பார்க்கலாம், ஜுரம் குணமாகிவிடும் என்று எண்ணினேன். இவருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது, இந்தத் தடவை பிழைக்கமாட்டோம் என்று. பிற்பாடு எங்களுக்கு ஒரு தொல்லையும் இருக்காத

வண்ணம், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானார். நோய்ப் படுக்கையிலிருந்து கொண்டே தம் காரியம் எல்லாம் முடிந்துவிட்டதாகவும், தாம் சித்தமாக இருப்பதாகவும் அடிக்கடி வாயால் சொல்லுவார். நாங்கள் உடனே கோபித்துக் கொள்வோம் இவரை; 'அப்பா! பயப்படுத்தாதீர்' என்போம். தினம் கீதையில் பன்னிரண்டாவது அத்தியாயத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருப்பார். 'நர்ஸ்' வைக்க விரும்பினோம். 'அன்னியர்கள் ஒருவரும் எனக்குச் சிசுருஷை செய்ய வேண்டாம்!' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். பெரிய டாக்டர்களை நாங்கள் கூப்பிட விரும்பியபோது, இவருக்குக் கொஞ்சம்கூட விருப்பம் இல்லாமலே எங்கள் வற்புறுத்தலுக்காக மட்டும் ஒப்புக் கொண்டார். தாம் இன்னும் ஜீவித்திருக்க வேண்டுமென்ற அவாவே இல்லாதவர்போலக் காணப்பட்டார். குடும்ப வாழ்க்கையிலும் பொது வாழ்விலும்; எவ்வளவோ தொல்லைக்கு உட்பட்டவர், அபஜயங்களைக் கண்டவர் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டதினால் ஆச்சரியமில்லை.

இவருக்குள்ளே ஆழமாய் மறைந்திருந்த தெய்வத் திட்முள்ள பரிபூரண நம்பிக்கையும், பக்தியும் அந்தக் கடைசி நாட்களில் நன்றாகப் புலனாயின.

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய
மாம் ஏகம் சரணம் வ்ரஜ

என்ற கிதையின் அடிகளை அடிக்கடி என்னை வாசிக்கச் சொல்லித் தாமும் வாய்க்குள் நெட்டுருச் செய்வார். 'நான் தேசிகன் திருவடிகளில் போய்ச் சேரப் போகிறேன்' என்று பலமுறை சொல்லிக்கொண்டிருந்தார். இதெல்லாம் இவருக்கு வியாதியினால் உண்டான மனோபிரமைதான் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். கொஞ்சமும் பயம் தோன்றினால்தானே? டாக்டர்களும் பயப்படுவதற்கு இடமிருப்பதாகக் கூறவில்லையே? ஆபீஸ் ரூமில் பேசினால் சமையல் அறைவரை கேட்கும் அந்த ஸிம்ம கர்ஜனை, வெண்கல மணியின் நாதம் போன்ற இவருடைய அந்தக் குரல், ஒருநாள் காலை 7½-மணிக்கு (19—4—'41) நிரந்தரமான நிசப்தத்தில் போய்க் கலந்துவிடும் என்று அப்பொழுது நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை.

அநுபந்தம்

1926-ம் வருஷம் கௌஹதி காங்கிரஸில் தலைமை வகித்து ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்கார் செய்த பிரசங்கத்திலிருந்து சில முக்கியப் பகுதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

சட்ட சபை வேலைத் திட்டம்:—தேச நிர்மாணத் திட்டத்தில் தன்னம்பிக்கை, தேச நலத்திற்குப் பாதகமானவைகளின் எதிர்ப்பு, ஆகிய நம்முடைய இரட்டை லட்சியங்களை எப்படி முன்பு ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவிக்க நமக்கு உதவியாக இருந்தனவோ, அப்படியே நாம் இனி எடுத்துக்கொள்ளப் போகும் முயற்சிகளுக் கெல்லாம் தூண்டுகோலாகவும் இருக்க வேண்டும்.

அஸெம்பிளியிலும், மாகர்ணச் சட்ட சபைகளிலும் உள்ள காங்கிரஸ் வாதிகளின் பொதுக் கொள்கை, சுயராஜ்யப் பாதையில் முட்டுக்கட்டையாக இருக்கும் எல்லா முயற்சிகளையும் — அவை ஸர்க்காருடையதானாலும் சரி, பிறருடையதானாலும் சரி—எதிர்ப்பதாக இருக்கவேண்டும். சட்ட சபைகளுக்குச் செல்லும் காங்கிரஸ் வாதிகள் முக்கியமாகக் கவனிக்கத் தக்கவை பின் வருபவை :—

(அ) காங்கிரஸின் தேசீயக் கோரிக்கைக்கு இணங்கி, ஸர்க்காரின் திருப்திகரமான பதில் நமக்கு கிடைக்காதவரையில் அதன்கீழ் யாதொரு உத்தியோகத்தையும் பெறுவது கூடாது.

(ஆ) நாம் கேட்கும் சுயராஜ்யத்தை ஸர்க்கார் அளிக்கும் வரை, ஸர்க்கார் கொண்டுவரும் மான்யப் பிரேரணைகளை அங்கீகரிக்க மறுக்க வேண்டும்; வரவு செலவுத் திட்டங்களையும் நிராகரிக்கவேண்டும்.

(இ) அரசாங்கம் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக வேண்டி, கொண்டுவரும் மசோதாக்களை எல்லாம் தோற்கடிக்க வேண்டும்.

(ஈ) பொருளாதாரம், விவசாயம், வியாபாரம், தொழில் முதலிய துறைகளில் தேசம் முன்னேற்றமடைவதற்கான முறைகளையும், தீர்மானங்களையும், மசோதாக்களையும்தான் சட்ட சபையில் கொண்டு வரவேண்டும்.

(உ) ரயத்துவாரிகளுடையவும், விவசாயிகளுடையவும், நிலைமையைச் சீர்படுத்துவதற்காக, அவர்களது பாத்தியதைகளை ஊர்ஜிதப்படுத்த வேண்டும். ஜமீந்தாரிகளின் உரிமைகளுக்குப் பங்கம் வராத வண்ணம், ரயத்துவாரிகளின் பாத்தியதைகளை நீடித்தும், பிறவகையிலும் அவர்கள் நன்மையைத் தேட வேண்டும்.

(ஊ) தொழிலாளிகளுடையவும், விவசாயிகளுடையவும் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். முதலாளி தொழிலாளர் இடையிலும், மிராசுதார் பண்ணை யாள் இடையிலும், நல்லுறவை ஏற்படுத்த வேண்டும்.

தரைப் படை, கடற்படை

தரைப் படை, கடற் படை ஆகிய இரண்டையும் ஏற்படுத்திப் பரிபாலிப்பது நம்மால் செய்ய முடியாத காரியம் என்று மூடத்தனமாகவும் பலவீன மனப் பான்மையைக் காட்டியும் சிலர் பேசுகிறார்கள்.

இது நம்முடைய குறிக்கோளாகிய சுயராஜ்யத்திற்குப் பெரிய முட்டுக்கட்டை போடுவது மல்லாமல் "உங்களைக் காத்துக்கொள்ளுவதற்கான தரைப் படை, கடற் படை இவைகளுக்கு நீங்கள் லாயக்கில்லை. அப்படி யிருக்க உங்களுக்குச் சுயராஜ்யம் கிடைப்பது எப்படி?" என்று அன்னியரின் ஆட்சி நீடிப்பதை ஆதரித்துப் பேசுவோரின் வாதத்தை ஆதரிப்பதுமாகும்.

நம்மால் கடற் படை, தரைப் படை இவைகளை வைத்துச் சமாளிக்க முடியாது என்பது தன்னம்பிக்கை யற்ற மனப்பான்மையையே காட்டுகிறது. அதில் எள் ளளவும் உண்மை யில்லை.

உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்று பல யுத்த களங்களில் போர் புரிந்து புகழ் பெற்றுச் சிறந்த இந்தியப் படை நம்மிடம் இருக்கிறது.

இந்தியரிடை இத்துறையில் இயல்பாக யாதொரு குறையும் உண்மையில் இல்லை என்பதற்கு நம்முடைய மகம்மதிய, மகராஷ்டிர ஸைன்யங்களே போதிய அத் தாட்சிகளாகும்.

அந்தக் காலத்திற்கு ஏற்ற படைக் கருவிகளுடன் திறமையாகப் போர் செய்யவல்ல தளகர்த்தர்கள் இருக்கத்தான் செய்தனர்; அவர்கள் பெரும் ஸேனைகளைத் திரட்டி நடத்தியும் இருக்கிறார்கள்.

பாரத தேச சரித்திரம் மற்றவைகளைக் காட்டிலும் பாரத மக்களுக்கு அதிகமாக வீர உணர்ச்சி உண்டு என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

கடற்படையைப் பற்றியவரையில் மிகத் துணிச்சல் வாய்ந்தவர்கள் பண்டை இந்தியர்; கடல் யாத்திரை செய்யும் இனத்தினர். நம்மவருக்கு அக்காலத்தில் தூர தேசங்களிலும் குடியேற்ற நாடுகள் இருந்தன.

உலகத்திலே மிகச் சிறியவையும் பூரண சுதந்திரத்துடன் இருப்பவையுமான ஜப்பான், சினு போன்ற நாடுகளும் இவைகளைப் பெற்றிருக்கின்றன என்றால் நாம் மட்டும் ஏன் பெறக்கூடாது?

ஆகையால் நாம் சுயராஜ்யம் என்றால் என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். பூரண சுய ஆட்சிக்கு இம்மியளவும் குறைந்திருக்கக் கூடிய எதையும் நாம் கேட்கக் கூடாது.

பதவி ஏற்பு

உத்தியோக மறுப்பு சம்பந்தமாகப் போதிய சர்ச்சை நடந்தாகிவிட்டது.

அரசாங்கத்தாருடன் நாம் நடத்தும் விவகாரத்தின் ரீதியையும், நாம் அடைய விரும்பும் லட்சியத்தையும் நம் கண்முன் வைத்துக்கொண்டிருப்போமானால், மேற் கூறிய பதவி விஷயமாக ஒரு முடிவுக்கு வருவது சுலபம். எந்த மாகாணத்திலேயும் காங்கிரஸ் கட்சி சட்ட சபைகளில் போதிய அளவுக்குப் பெருவாரியான ஸ்தானங்களைப் பெற்றிருக்கவில்லை. அப்படி இராவிட்டால் உத்தியோகமேற்று, நாம் நமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வது அசாத்தியம்.

நாம் மெஜாரிடியில் இல்லாவிட்டால் மந்திரி சபை கூட்டுவதற்கு இதர கட்சிகளுடன் சேரவேண்டிவரும். அப்போது நம்முடைய லட்சியத்தை ஓரளவு குறைத்துக் கொள்ளவும், நமக்குள்ள தனிப் பண்பாடுகளை விட்டுக் கொடுக்கவும் வேண்டி யிருக்கும்.

வேறு கதியில்லை என்ற காரணத்திலோ, அல்லது அரசாங்கத்தின் உதவியினாலோதான் அத்தகைய கலப்பு மந்திரிசபை நிலைத்திருப்பது சாத்தியம்.

மேலும், காங்கிரஸ் அல்லாதவர்களால் கூட்டப் படும் மந்திரி சபைக்கும், கலப்பு மந்திரி சபைக்கும் இதன் பின்பு யாதொரு வித்தியாசமும் இராது.

ஏனென்றால், அத்தகைய கலப்பு மந்திரி சபைக்கு எந்தக் காரியத்தையும் சாதித்துவிட்ட பெருமையோ, அல்லது சாதிக்க வேண்டிய விஷயமோ இருக்க முடியாது.

அப்படி இல்லாமல் மந்திரிசபை தன் கொள்கையை நிறைவேற்றப் பார்க்குமேயானால், உடனே உத்தியோகத்தை ராஜிநாமா செய்ய வேண்டி வரும். அல்லது அது படுதோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டிவரும்.

சக்தி வாய்ந்த மந்திரி, அரசாங்க நிர்வாகத்தில் சில அம்சங்களில் ஒன்றிரண்டு சீர்திருத்தங்களைச் செய்ய முயற்சிக்கக் கூடுமேயன்றி, அரசாங்கக் கொள்கையை மாற்றவோ அல்லது திருப்தி தரும் அளவுக்கு, அதைச் சீர்திருத்தி அமைக்கவோ முடியாது.

அரசாங்க நிர்வாகத்தில் இங்கேயும் அங்கேயுமாக ஒன்றிரண்டு சீர்திருத்தங்களை மட்டும் செய்து தருவது, நம்முடைய ஆதரவில் அரசாங்கம் மேலும் செழித்திருக்கத்தான் ஹேதுவாகும்.

பல மாகாணங்களிலே மந்திரிசபை நிர்வாகத்தைக் கூர்மையாகக் கவனித்து வந்தவருக்கு, கலப்பு மந்திரி சபை பிரமாதமாக ஒன்றையும் சாதித்துவிடவில்லை என்பதும், சுய ஆட்சிமுறையின்றி தேசத்தைச் சரியான படி ஆள்வது முடியாத காரியம் என்பதும் தெரியத்தான் செய்யும்.

மறைமுகமாக இருந்தாலும்கூட எதிர்ப்பின் சக்தி நிஜமானது; மந்திரிகளின் ஆதிக்கத்தைக் காட்டிலும் உயர்ந்தது; பிரயோஜனப்படவும் கூடியது.

எந்தச் சட்ட சபையானாலும் சரி, நாம் கட்டுப்பாடான பயிற்சி யுள்ளவர்களாகவும், ஊக்கமுடையவர்களாகவும், பெருவாரியாகவும் இருப்போமேயானால் மந்திரிகளைக் காட்டிலும் லகுவாக, நாம் வகுத்துள்ள திட்டங்களை அமலுக்குக் கொண்டுவர முடியும்.

திருப்திகரமான பதில் கிடைக்கும்வரை பதவி ஏற்க மறுப்பதால், நம்முடன் சமாதானத்திற்கு வருவதற்கான ஓர் அரசியல் நெருக்கடியை அரசாங்கத்துக்கு உண்டாக்கி நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும்.

பதவி யேற்பதால், காங்கிரஸ் கட்டாயம் தன்னையும் அறியாமலே அன்னிய அரசாங்கத்தின் கூட்டாளியாகி விடும்.

ஒரு தேசத்திலுள்ள முற்போக்கான கட்சி பதவியை ஏற்குமானால், அதற்கப்புறம் சுயராஜ்யத்திற்காகவோ, இரட்டை ஆட்சியை ஒழிப்பதற்காகவோ, தீர்மானம் பூண்டு வேலை செய்யக்கூடிய எதிர்க்கட்சியை நாம் ஒவ்வொரு சட்ட சபையிலும் எங்கே காண்பது?

நம்முடன் சமாதானம் செய்துகொள்ளும் உத்தேசத்துடன், ஸர்க்கார் நம்மை உத்தியோகம் ஏற்க அழைப்பது நாம் முற்றும் விட்டுக் கொடுக்கும்படி செய்வதற்காகவே! நம்முடைய நியாயமான கோரிக்கையையும், அரசியல் கைதிகள், மற்றும் பாதுகாப்பில் வைக்கப் பட்டவர்களை விடுவிக்க மறுப்பதையும், 'கௌரவமான முறையில் நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்கிறோம்' என்று அறிவித்தபோதும் இந்த ஸர்க்கார் அவைகளுக்கு இணங்காமையையும் நாம் எப்படி மறக்க முடியும்?

நம்முடைய சுயமரியாதை நாம் முன் வைத்த காலைப் பின்வாங்க விடாமல் தடுக்கிறது. முன்னே வெற்றி நம்மைக் கைகொட்டி அழைக்கையில் நாம் பின்வாங்கித் தோல்வியுறுவதா?

தீண்டாமை

ஹிந்து மதத்தின் உயர்ந்த அம்சமாகிய வேதாந்தமும், மத வேறுபாடுகளின் வரலாறும், ஹிந்து மதக் கொள்கை அழிவற்ற தன்மைவாய்ந்த தாதலால், தீண்டாமை விதி அதில் ஒரு அம்சமோ, பாகமோ இல்லை என்று சொல்லும்படியான தைரியத்தை எனக்கு அளிக்கின்றன. மாற்ற முடியாத தீண்டாமை விதியை, ஹிந்து மதத்தின் கொள்கை என்று சாதிப்பதற்கு, மனிதத் தன்மையோ, புத்தியோ இடம் கொடுக்கவில்லை.

ஆத்ம ஆராய்ச்சியைக் கொண்டோ, தேசாபிமானத்தினாலோ, பகுத்தறிவினாலோ, ஜனநாயக முறையினாலோ பரிக்ஷித்துப் பார்த்தோமேயானால் இந்த உண்மை விளங்கிவிடும்.

தீண்டாமை நம் திருஷ்டியை மங்கச்செய்கிறது: அனுபவத்தைக் கட்டுப் படுத்துகிறது; இதயத்தைக் கல் லாகச் சமைத்து விடுகிறது. நம்முடைய பொறுப்பின் எல்லையைக் குறுக்லாக்குகிறது.

நியாயம், அன்பு, நேர்மை ஆகிய நம் லட்சியங்களை நிறைவேருமல் தடுக்கிறது. ஒரு தனி ஜாதிக்கோ, இனத் திற்கோ, வகுப்புக்கோ, ஒரு தெய்வக் கட்டளையினுல், மற்றவர்களைக் காட்டிலும், விளங்காத முறையில், ஒரு உயர்வு அளிக்கப்பட்டிருப்பதும், அல்லது புறம்பே புல ஞகக் கூடிய விதத்தில், கேவலமான, ஒரு தாழ்வின் சின்னத்தை வகிக்கும்படி இருக்கிறது என்பதும், 'மனிதன் கடவுள் தன்மை படைத்தவன்' என்ற ஹிந்து மதத்தின் மூலக்கோட்பாடையே நாசம் செய்வ தாகும். அது எவருக்கும் நன்மை பயக்காது.

வகுப்புவாதமும் தேசியமும்

தேசீயத்திற்கு முற்றும் எதிரிடையானது வகுப்பு வாதம். சுயராஜ்யப் பாதையில் அது ஒரு முட்டுக்கட்டை என்பதை எல்லோரும் விரைவிலேயே உணர்ந்து வரு கிருர்கள்.

என்னதான் நம்பிக்கை உண்டாகும் விதத்தில் நிஜ ஆற்றலுடன் தீவிரப் பிரசாரங்கள் செய்து அடிப்படை யான, கோணல் வாதங்களைத் தெளிவு படுத்திக் கூறி ஞலும், வகுப்பு வாதம் இனி நிலைக்க முடியாது என்று நான் நம்புகிறேன். நல்ல வேளையாக, குறுகிய புத்தியும் சந்தேகமும் இந்தியமக்களிடை ஆழமாக வேரூன்றி விட வில்லை. அவைகளினின்றும் தோன்றியதுதானே இந்த வகுப்பு வாதம்?

மேலும், வகுப்பு வாதமும் அதன் காரணமாக எழும் சச்சரவுகளும், ஒரு மூன்ரும் மனிதரின் மத்யஸ்தத்தை வற்புறுத்துகிறது என்பதைச் சிறிது அரசியல் ஞானம் படைத்தவரும் ஒப்புக்கொள்வர்.

இந்தியா முழுமையும் ஒன்ருேடொன்று சண்டை யிட்டுக்கொள்ளும் இரண்டு கட்சியாகப் பிரிந்துபோ மானுல், மத்யஸ்தம் செய்து வைப்பவர் எப்பொழுதும் ஒரு அன்னியனுகத்தான் இருப்பார் என்பதைத்தான் யார் ஒப்புக்கொள்ளமாட்டார்?

நாம் எந்த வகுப்பைச் சேர்ந்தவரா யிருப்பினும், அடிமுதல் நுனிவரை இந்திய மக்கள் என்ற நிச்சயத்தை அடைவது மட்டு மன்றி, அதை விடாமல் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு வகுப்புக்குப் பிரதிநிதியாக இருந்து, அதற்குத் தலைமை வகிப்பதையும்விட, தேசத்திற்குப் பிரதிநிதியாக இருந்து தேசத் தலைவராவதே நம்முடைய லட்சியமாக வேண்டும்.

தன்னுடைய வகுப்பின் பிரதிநிதித்துவத்தையும் தலைமையையும் கோருவதோடுகூட, எப்பொழுதும் என்னவானாலும், பிற வகுப்பினருக்கும் பிரதிநிதியாகவும், தலைவராகவும் இருப்பதை நாம் விரும்ப வேண்டும்.

இங்கிலாந்திலே, ஆங்கிலேயர், ஸ்காட்ச் மனிதர், வேல்ஸ் வாசிகள், இவர்களுடைய இன வேற்றுமையும் பழக்கவழக்கங்களும் பாஷா பேதங்களும் சுய ஆட்சியைத் தடை செய்யவில்லை.

மற்றும், இங்கிலாந்து, பிரான்ஸ், கானடா, முதலிய நாடுகளிலே ரோமன் கத்தோலிக்கருக்கும் ப்ராடெஸ்டென்டுகளுக்கும் இடையே நீண்ட காலம் நடந்து வந்த கடும் போர்தான் சுய ஆட்சியைப் பெறவிடாது தடை செய்ததா?

தென்னாப்பிரிக்கா வெள்ளையர்களுக்குள் இன வேற்றுமைதான் ஆப்பிரிக்காவின் சுய ஆட்சியைக் கெடுத்துவிட்டதா?

ஹிந்து—முஸ்லிம், பிராம்மணர்—பிராம்மணரல்லாதவர், இவர்களின் இன வேற்றுமை மட்டும் ஏன் இந்தியாவைப் பிரித்து வைக்கவேண்டும்?

இந்தியா சுய ஆட்சிக்குத் தகுதி யில்லாதபடி அதாவது இந்தியாவை ஒரு அரசியல் திட்டத்தின் கீழ் கொண்டுவர முடியாத அளவுக்கு, நம்மிடையே என்ன பிரமாத வேற்றுமை?

தேசம் முன்னேற்றம் அடைவதற்கான விஷயங்களில், பொது நலத்திற்குச் சாதகமான அம்சங்கள் சம்பந்தமாக எந்த வகுப்பினருக்குள்ளும் மன வேற்றுமை கிடையாது. தேசத்தில் சுய ஆட்சியை ஸ்தாபித்து நடத்தவேண்டும் என்பதிலும் யாதொரு அபிப்பிராய பேதமும் இல்லை.

அரசியலும் மதமும்

அரசியலுடன் மதத்தைச் சேர்ப்பது ஒரு பழைய அநாகரிகமான முறை. தெய்வ சம்பந்தமான தவருன ஊகங்களிலிருந்து தோன்றிய கொள்கை. இது அரசியல், மதம் இரண்டுக்குமே கேட்டை விளைவிப்பது.

மகம்மதிய, ஹிந்து, மதக்கொள்கைகளைக் கேவலம் லோகாயதமான அரசியலுடன் கலவாமல் இருப்போமேயானல், அவை இரண்டும், அளவிடமுடியாத சக்தியும், தூய்மையும் வாய்ந்தவைகளாகப் பரிணமிக்கும்.

நான் இங்கே குறிப்பிடுவது எல்லாப் பெரிய மதங்களுக்கும் பொதுவாக உள்ள ஒழுக்க முறையைப் பற்றியோ, அல்லது ஆத்ம தத்துவத்தைப் பற்றியோ அன்று.

ஏனென்றல், அரசியலும், ஸ்தாபனங்களும், அவைகளால் பரிசுத்தமாக்கப் படுவதுமட்டு மன்றி, ஒரு இனிமையையும், ஆரோக்கியத்தையும் அடைகின்றன.

அரசியல் கிளர்ச்சியில் தெய்விக சம்பந்தமான ஹேதுக்கள் நிலைப்பதில்லை. ஏனென்றல் அவை மூலம் எங்கும் மூட நம்பிக்கையும், ஹிம்ஸையும் தோன்றிப் பரவுவதுடன் உள்நாட்டுக் கலகங்களும் உற்பத்தியாகின்றபடியால், அவைகளால் ஜனங்களுக்கு இகபோக சம்பந்தமான சௌகரியங்களோ, சரியான அரசாங்க முறையோ வாய்ப்பதில்லை.

ஒற்றுமைக்கு விஞ்ஞாபனம்

பரஸ்பரம் நமக்கிடையே நிலவும் கலகங்களினல் உண்டான புழுதி நம்முடைய சுயராஜ்ய திருஷ்டியை மங்கச் செய்துவிட்டது என்றும், நம்மிடையே தனி மனிதக் கொள்கை பெருகி. அது நமக்கிருந்த சுய்ராஜ்யப் பசியைத் தணித்துவிட்டது என்றும் எனக்குத் தோன்றுகிறது.

இந்த சமயத்தில் நமக்குத் தேவை, கொள்கை அல்ல; செய்கைதான். தனிமனிதரின் சுதந்திரம் அல்ல; தேச சுதந்திரம். கருத்திலும், லட்சியத்திலும் ஒற்றுமை ஏற்படுவதைவிட, நாம் கையாளும் முறையிலும், செய்கையிலுமே ஒற்றுமை அவசியம்.

வேவலும் ஜனநாயகப் பிரச்னையும்

வேவல் திட்டம் எவ்வளவு தூரம் நமது ஜனநாயகப் பிரச்னைகளுக்கு உதவி புரியும் என்பதுதான் இப்பொழுது நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம். இந்தச் சந்தர்ப்பத்தில், சட்ட நிபுணரும், தீவிர அரசியல் ஞானியாகவும் விளங்கிய ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸையங்கார் ஜனநாயகத்தைப் பற்றிச் செய்திருக்கும் ஆராய்ச்சி தமிழர்களின் ஆழ்ந்த கவனத்திற்கு உரியது. இந்த நுண்ணறிவாளருடைய ஆராய்ச்சிக் கருத்துக்கள், இவரால் 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 9-ந் தேதி சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நிகழ்த்தப் பெற்ற ஓர் அருமையான — பொருள் பொதிந்த — உபந்யாஸத்திலே, நன்கு வெளிப்படுகின்றன.

அப்பேருரையை ஸ்ரீமான் ஏ. ஜி. வேங்கடாசசாரியார் ('தினமணி' துணை ஆசிரியர்) தமிழில் யாவருக்கும் விளங்கக்கூடிய நடையில் மொழிபெயர்த்திருக்கிறார்.

இன்று வேவல் திட்டத்தை உணர்ந்து மாற்றுப் பார்ப்பதற்கு ஒர் உரைகல்லாக இந்த மகா உபந்யாஸத்தை உபயோகித்துக் கொள்ளலாம். நமது ஜனநாயகத் துறையில் ஒற்றுமையையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு இந்தப் புஸ்தகம் நல்ல வழிகாட்டும் என்பது திண்ணம்.

ஜனநாயகப் பிரச்னைகள்

எஸ். ஸ்ரீநிவாஸையங்கார் எழுதியது

விலை அணா 8

The Indian Express—Branch Press, Mt. Rd., Madras.

தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

				ரூ.	அ.
1.	மகாத்மா காந்தி—நினைவு மாலை [2-ம் பதிப்பு]	...	0	12
2.	ரவீந்திரநாத டாகுர்	...	0	8
3.	கைலாஸம்-மானஸரோவர் (பிரதிகள் கைவசமில்லை)		0	8
4.	போலந்து—பின்லந்து	...	0	12
5.	சிறு கதை மஞ்சரி	...	1	0
6.	ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள்	...	2	0
7.	தில்லைக் கோவிந்தன்	...	1	0
8.	அன்னை கஸ்தூரிபா	...	0	12
9.	முன்னிலா	...	0	12
10.	தளவாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்)	...	0	12
11.	மௌலானா ஆஜாத்	...	1	0
12.	கதை வனம்	...	1	0
13.	நவ ரஸங்கள்	...	0	12
14.	வீர ரஷ்யா (பாகம் I)	...	0	12
15.	காந்தியத் திட்டம்	...	1	8
16.	தற்காலப் போர்க் கருவிகள்	...	1	0
17.	கதா நாடக மஞ்சரி	...	0	8
18.	வீர ரஷ்யா (பாகம் II)	...	0	8
19.	கபீர்தாஸர்	...	0	8
20.	ஐசுவரிய அமெரிக்கா	...	0	8
21.	தஞ்சை நாயக்கர்	...	0	8
22.	ஜீவ கலை	...	0	8
23.	அமிர்த சந்திரன்	...	1	0
24.	சீனு	...	0	8
25.	உத்தம வாழ்க்கை	...	0	8
26.	ஜனநாயகப் பிரச்னைகள்	...	0	8

(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)

புரட்சி முரசு அல்லது இரட்டை நீதி

இன்றைய தமிழ் வசன நடை